★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஏப்ரல் 21 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 93 | Friday 21, April, 2023 | 28பக்கங்கள் | 50/-

## 06ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கான மேன்முறையீடு Online மூலமாக விண்ணப்பம் கோரல்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

2022 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆண்டு ஆறாம் வகுப்பில் பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் ஒன்லைன் மூலமாக 06

## ராஜபக்ஷக்களைப் புறந்தள்ளி எடுக்கும் தீர்வுகள் நிரந்தரமாகாது

**மஹிந்தவின் இப்தார் நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி**

**ஏ.ஜீ.எம்.தௌபீக்**



ராஜபக்ஷக்களைப் புறந்தள்ளி எடுக்கப்படும் எந்தத் தீர்வுகளும் எந்தச் சமூகங்களுக்கும் நிரந்தரமாக இருக்காதென வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் (19) இடம்பெற்ற இப்தாரில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள், சமய பெரியார்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டனர். இங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது, முஸ்லிம்களையும் 06

## மின்சார தேவை அதிரடியாக அதிகரிப்பு நேற்று 50 கிஹா வோட்டை தாண்டியது

**அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டுக்கான மின்சார தேவை அதிரடியாக அதிகரித்துள்ளதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக நாட்டின் மின்சார தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் நேற்று முன்தினம் ஒரு நாளுக்கான அதிகூடிய மின்சார தேவை பதிவாகியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேவைக்கு ஏற்ப நேற்று முன்தினம் நிகர மின் உற்பத்தி 49.53 கிஹா வோட்டாக பதிவாகியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் நேற்றைய மின் தேவை 50 கிஹா வோட்டையும் தாண்டியுள்ளதாக அவர் 06

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து இன்றுடன் 04 வருடங்கள் நிறைவு

**மௌன அஞ்சலிக்கு பேராயர் மெல்கம் அழைப்பு**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நான்கு வருடங்கள் நிறைவடையும் இன்றைய நாளில், சம்பவத்தை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவங்களில் முதலாவது குண்டு வெடிப்பு இடம்பெற்ற காலை 8:45 மணி முதல் இரண்டு நிமிடங்களை மௌன அஞ்சலிக்காக செலவிடுமாறு அவர் மக்களைக் கேட்டுள்ளார்.

குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி இன்று கொழும்பு – நீர்கொழும்பு வீதியில் அனைத்து மக்களினதும் பங்கேற்புடன் 06

### ஜனநாயகத்தை தவறாக வழி நடத்த எவருக்கும் இடமில்லை

# அரச விரோத செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

### எந்த ஒரு அரசாங்கமும் அத்தகைய செயற்பாடுகளுக்கு இடமளிக்காது

**சுதந்திர மக்கள் பேரவை பிரதிநிதிகளிடம் மஹா சங்கத்தினர் தெரிவிப்பு**

ஜனநாயகத்தை தவறாக வழி நடத்தி அரச விரோத செயற்பாட்டை உருவாக்க எவரேனும் முயற்சி செய்வார்களாயின் அதற்கு இடமளித்து அரசால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரச நிர்வாகத்தை மேற்கொள்ளும் போது சில தேவைகளுக்கமைய சட்டங்களை நிறைவேற்றி அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் வணக்கத்திற்குரிய ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்தை அளவுக்கதிகமாக அனுபவித்தால் நாட்டில் பிரச்சினை ஏற்பட்டு அரசாங்கமும் மக்களும் சிரமத்துக்குள்ளாக நேரிடுமென நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான 06



**அளவுக்கதிகமாக சுதந்திரத்தை அனுபவித்தால் நாட்டில் பிரச்சினை ஏற்பட்டு அரசும், மக்களும் சிரமத்துக்குள்ளாக நேரிடும் என்றும் தெரிவிப்பு**



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மரியாதை நிமித்தமாக சந்தித்து தனது புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதுடன் பரஸ்பர நலன் தொடர்பான விடயங்களையும் கேட்டறிந்து கொண்டார். இச்சந்திப்பு நேற்றுக் காலை விஜேராம இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

## ரூ.5,000 போலி நாணய தாள்களுடன் இருவர் கைது




**அச்சிடப்பட்ட அலுவலகம் சுற்றிவளைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

போலி 5000 ரூபா நாணயத் தாள்களை அச்சடித்த அச்சக நிறுவனமொன்றை சுற்றிவளைத்துள்ள பொலிஸார், அங்கிருந்த 43 ஐயாயிரம் ரூபா நாணயத் தாள்களை கைப்பற்றினர். அச்சிடப்பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. கண்டி, அலவதுகொட நகரில் புகைப்பட நிலையமொன்றில் 06

## பாராளுமன்றில் 25 இல் IMF குறித்து விவாதம்

**எதிர்வரும் செவ்வாய் சபை கூடுகிறது**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றம் எதிர்வரும் (25) செவ்வாய்க் கிழமை கூடவுள்ளது. இம்முறை அமர்வுகளில் மூன்று தினங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு தொடர்பான பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## MOP உரத்தின் விலையை குறைக்க நடவடிக்கை

**4,500 ரூபாவினால் குறைக்க அரசு கவனம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நெற்செய்கைக்கான எம்.ஓ.பி (Muriate of Potash) உரத்தின் விலையை இவ்வருடம் 4,500 ரூபாவால் குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. தற்போது சந்தையில் எம்.ஓ.பி உரத்தின் 50 கிலோ மூடை 18,500 ரூபாவுக்கு விற்பனை 06

## புதிதாக 1,320 டாக்டர்களுக்கு நியமனம், 25 இல் கடிதங்கள்

**கஷ்டப்பிரதேசங்களுக்கு முன்னுரிமை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதிதாக 1,320 டாக்டர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் அவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்ததுள்ளது. இவ்வாறு புதிய நியமனம் பெறும் டாக்டர்கள், அன்றைய தினமே, நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் நியமிக்கப்படவுள்ளனர். 06



**ராகுல் காந்தியின் மனு நிராகரிப்பு சூரத் நீதிமன்றம் நேற்று உத்தரவு** 06

## எரிபொருள் திறன் குறித்து போலி பிரசாரம் முன்னெடுப்பு

**சமூக ஊடக செய்திகளுக்கு IOC மறுப்பு**

வாகன எரிபொருள் திறன் தொடர்பான சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்களை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மறுத்துள்ளது.

அதிகரித்து வரும் வெப்பநிலையால், கொள்ளளவுக்கு அதிகமாக எரிபொருளை நிரப்புவதைத் தவிர்க்குமாறு வாகன உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், அது வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் சமூக வலைத்தளங்களில் 06

### கண் வைத்தியசாலையில்

## அறுவைச் சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தம்



தேசிய கண் வைத்தியசாலையின் சகல அறுவை சிகிச்சைகளும் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அறுவை சிகிச்சை அறையில் கிருமிகள் பரவியதன் காரணமாக இவ்வாறு சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபிக் தெரிவித்துள்ளார்.

அறுவை சிகிச்சை அறையில் கிருமிகள் 06

## ஷவ்வால் மாத தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு இன்று

**மஃறிப் தொழுகையையடுத்து பெரிய பள்ளிவாசலில் ஏற்பாடு**




ஹிஜ்ரி 1444 புனித சவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு இன்று வெள்ளிக்கிழமை, மாலை மஃறிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது. 06










## பாராளுமன்றில் IMF விவாதம்; எதிர்க்கட்சிகள் பங்கேற்காது



**மொழிப் பிரச்சினையை முன்வைத்து தப்பித்துக்கொள்ள முயற்சி**

அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்காதென பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விவாதம் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடைபெறுமென கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு 06

## முட்டைகளுக்கான விலை நிர்ணயமானது

**வெள்ளை ரூ.44, சிவப்பு ரூ. 46**



முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நிறையின் அடிப்படையில் முட்டைகளை விற்பனை செய்வதற்கான அதிகபட்ச சில்லறை விலையும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 06

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இப்தார் நிகழ்வு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் விசேட இப்தார் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் மேலும் பலர் கலந்து கொண்டு தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகளை பாராட்டி பேசினர். அமைச்சர்களான அலி சப்ரி, டிரான் அலஸ், விதுர விக்கிரமநாயக்க, நசீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌசி, மரிஜான் பழீல், எஸ்.எம்.எம்.முஷாரப், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்ட போது...



மத்திய மாகாண முஸ்லிம் கல்விப் பேரவையின் விசேட இப்தார் நிகழ்வு அக்குறணை ஐடெக் கல்வி நிலையத்தில் செயலாளர் ஐ. ஜனூதீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறணை ஜம்மிய்யல் உலமா சபையின் தலைவர் மௌலவி சியாம் கலந்து கொண்டார்.

படம் இக்பால் அலி

## ரமழான் சிந்தனை

# அல் குர்ஆனை விளங்குவோம்

அல்குர்ஆனை ஓதுவதுடன் அது சொல்ல வரும் செய்திகளையும் கருத்துக்களையும் புரிந்துகொள்ளவும் வேண்டும். அது காட்டும் வழியில் பயணிக்கவும் வேண்டும். அதுவே குர்ஆனின் போதனையாகும். 'அல் குர்ஆனை அவர்கள் சிந்தித்து நுணுக்கமாக விளங்க க்கூடாதா? அல்லாஹ் அல்லாத ஒருவரிடமிருந்து அது அருளப்பட்டிருந்தால் அதில் நிறைய முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள். (நிஸா 82) 'அல்குர்ஆனை அவர்கள் சிந்தித்து நுணுக்கமாக விளங்கக்கூடாதா? அல்லது அப்படி விளங்க முடியாத பிரகாரம் அவர்களது உள்ளம் பூட்டிடப்பட்டுள்ளதுவா? (முஹம்மத் 24) 'எவ்வித தெளிவும் இல்லாத வணக்கம், எதனையும் விளங்கிக்கொள்ளாத அறிவு, நுணுக்கமாக புரிந்துகொள்ளாத வாசிப்பு போன்ற விடயங்களில் பயனில்லை' என்று அலி (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (இப்னு அப்தில் பர் நூல்: ஜாமிஉல் இல்ம்) 'சூறா பகரா, சூறா ஆல இம்ரான் போன்ற சூறாக்களை கருத்துணராது வேகமாக ஓதுவதனை விட சூறா அல்காரிஆ, சூறா ஸல்ஸலா போன்ற சூறாக்களை கருத்துணர்ந்து நுணுக்கமாக ஓதுவது எனக்கு மிக விருப்பமானது' என்று அல்குர்ஆனில் ஆழமான புலமையுள்ள இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (இமாம் கஸ்ஸாலி (ரஹ்) நூல்: இஹ்யா உலூமித் தீன்) 'அல் குர்ஆனை ஏழு நாட்களில் ஓதுவதனைவிட பத்து நாட்களில் ஓதுவதும் அதனை பத்து நாட்களில் ஓதுவதனைவிட பதினைந்து நாட்களில் ஓதுவதும் எனக்கு விருப்பமானது. ஆனால் அதனை பதினைந்து நாட்களில் ஓதுவதனைவிட சற்று நின்று நிதானித்து அதில் வரும் விடயங்களை அல்லாஹ்விடம் பிரார்த்தித்து ஒரு மாதத்தில் ஓதுவது எனக்கு மிகவும் விருப்பத்துக்குரியது' என்று அல்குர்ஆனை தொகுப்பதற்கு தலைமை வகித்த ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (ஆதாரம் இப்னு அபீ ஷைபா) எனவே அல்குர்ஆனின் கருத்துணர்ந்து ஓதுவோம். அதன் வழியை பின்பற்றுவோம்.

அஷ்ஷெய்க் யூ.கே. ரமீஸ் எம்.ஏ (சமூகவியல்)

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

## துறைமுக நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் தொடர்பாடல் கட்டமைப்பு

துறைமுக நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் தொடர்பாடல் கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

துறைமுகத்தில் வர்த்தகக் கப்பல் மற்றும் சரக்கு அனுமதியில் தற்போது பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனைத் தவிர்க்கும் நோக்கில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இத் திட்டத்திற்கு சுமார் 35 மில்லியன் டொலர் செலவாகும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி அதனை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் துறைமுகங்கள், கப்பல் சேவைகள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துறைமுக டிஜிட்டல் தொடர்பாடல் கட்டமைப்பை இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது கூறியுள்ளார்.





ROBINSON (PRIVATE LIMITED)
176, மெயின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 2422565, 2448755
E-mail: ashok@robinsonlk.com


# 2023 இல் 21 அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானி மூலம் அறிவிக்க ஏற்பாடு

Urban Development Authority

### 2025 க்கு முன், 204 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய 172 அபிவிருத்தி திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் – நகர அபிவிருத்தி அதிகாரசபை

2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் 204 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய 172 அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுமென நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 21 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

குருவிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. மேலும், பெல்மடுல்ல /கஹவத்தை அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படுமென நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ரம்புக்கன, குளியாபிட்டி, தலாவ, கெக்கிராவ, வெலிமடை, பண்டாரவளை, வெல்லவாய, நாவலப்பிட்டி, குண்டசாலை, கம்பளை, வவுனியா, கிளிநொச்சி, அம்பலாங்கொட, மாத்தறை, கட்டான சீதுவ, ஜா எல, வத்தளை மாபோல, கம்பஹா ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள். இந்த ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளன.

06


INDUSTRY 2023
ජාතික කර්මාන්ත ප්‍රදර්ශනය
தேசிய கைத்தொழில் கண்காட்சி
National Industry Exhibition
SRI LANKA

தேசிய கைத்தொழில் கண்காட்சியும் விருது வழங்கல் விழாவும் - 2023

ஜூன் 22,23,24,25 BMICH இல்

தேசிய கைத்தொழில் கண்காட்சி

- சர்வதேச வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம்
- தேசிய கைத்தொழில்களுக்கான நவீன தொழில்நுட்ப பயன்பாடு
- தொழில் கல்வி
- புதிய முதலீட்டு வாய்ப்புகள்
- புதிய தொழில்முயற்சியாளர்களுக்கான வழிகாட்டல்கள்
- புதிய உற்பத்தினை வர்த்தகமயமாக்குவதற்கான வாய்ப்பு

விருது வழங்கல்

- கைத்தொழில் துறைகள் 21இன் கீழ் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் மதிப்பிடல்
- தேசிய மட்டத்தில் வர்த்தக இணைப்புக்களை விருத்தி செய்தல்
- கைத்தொழில் வலையமைப்பிற்காக வாய்ப்புகள் கிடைத்தல் (Industrial Network)
- வர்த்தகப் பெயரை விளம்பரப்படுத்துவதற்காக வாய்ப்பு

கண்காட்சி கூடங்கள் தொடர்பான விசாரணைகள்

071- 88 32 125 HOT LINE - 1995
070- 50 01 995 industry2023@idb.lk

மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி கூடங்களே காணப்படுவதால் ஆரம்ப அழைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளல்

பிரதான அலுவலகத்தில், மாவட்ட அலுவலகங்களில் மற்றும் உத்தியோகபூர்வ இணையத்தில் - www.idb.gov.lk

விண்ணப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023 மே 15ம் திகதியாகும்.

ADCORE CREATIVE

කර්මාන්ත අමාත්‍යාංශය
கைத்தொழில் அமைச்சு
Ministry of Industries

කාර්මික සංවර්ධන මණ්ඩලය
கைத்தொழில் அபிவிருத்திச் சபை
INDUSTRIAL DEVELOPMENT BOARD

නො: 615, ගාලු පාර, කටුබැද්ද, මොරටුව.
இல:615, காலி வீதி, கட்டுபெத்தை, மொறட்டுவ.
615, Galle Road, Katubedda, Moratuwa, Sri Lanka.
1995 | industry2023@idb.lk | www.idb.gov.lk

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 08ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை

ஒரு செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாது இருந்தால், அதுவே தம்மைக் காத்திடும் காவல்கள் அனைத்தையும் விடச் சிறந்த காவலாக அமையும்.

# மாணவர்களை கவலையில் ஆழ்த்துவது தவறான செயல்!

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தற்போது கவலையில் மூழ்கியுள்ளனர். அவர்கள் பரீட்சைக்குத் தோற்றி பல மாதங்களாகி விட்டன. ஆனால் அவர்களது விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் இன்னுமே ஆரம்பிக்கப்படவில்லை. விடைத்தாள்கள் திருத்தப்படுவது எப்போது? பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருவது எப்போது? இவ்வாறான எதிர்பார்ப்புகளுடன் அவர்கள் கவலையில் மூழ்கியுள்ளனர்.

மாணவர்களைப் பொறுத்தவரை கல்வியொன்றே அவர்களது எதிர்காலத்துக்கான மூலதனம் ஆகும். அவர்கள் பலத்த எதிர்பார்ப்புகள், கற்பனைகளைத் தேக்கியவாறே பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தாலேயே அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிச் சிந்திக்க முடியும். பல்கலைக் கழகம் நுழைவதற்கு வாய்ப்புக் கிடைக்குமா? இல்லையேல் அதற்கு மாற்றீடாக வேறு கற்கைநெறிகளை ஆரம்பிக்க வேண்டுமா? என்றெல்லாம் அவர்கள் இறுதி முடிவொன்றுக்கு வர வேண்டியுள்ளது.

அவ்வாறு எதிர்காலம் குறித்த தீர்மானத்துக்கு அவர்கள் வர வேண்டுமானால் முதலில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருவதே முக்கியம். ஆனால் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் இன்னுமே ஆரம்பிக்கப்படாதுள்ள நிலையில், பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருவது எப்போது என்பதுதான் மாணவர்களின் இன்றைய கவலை!

க.பொ. த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் இன்னுமே ஆரம்பிக்கப்படவில்லை. விடைத்தாள்களைத் திருத்துவதற்கான இழுபறி இன்னும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ள போதிலும், இன்னும் சாதகமான முடிவு எட்டப்படவில்லையென்றே தெரிகின்றது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் அவர்களது பெற்றோரும் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

ஆசிரிய தொழிற்சங்கவாதிகள் இப்போதெல்லாம் மாணவர்களின் நலனுக்காகப் பேசுவதில்லை. ஆசிரியர்களின் நலன் குறித்தும் அவர்கள் அதிகம் பேசுவதில்லை. தொழிற்சங்கவாதிகளெல்லாம் தற்போது அரசியல்வாதிகளைப் போலவே பேசுகின்றார்கள். அவர்களது போராட்டத்தின் பின்னணியில் அரசியல் உள்ளதென்பது தெளிவாகவே தெரிகின்றது.

அரசியல்வாதிகளை அவர்கள் திட்டித் தீர்க்கின்றனர். ஆட்சியை மாற்ற வேண்டும் என்று குரலெழுப்புகின்றனர். இவையெல்லாம் போதாதென்று க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணியில் ஈடுபடுவதிலும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் மாத்திரமன்றி பெற்றோரும் இப்போது கவலை கொண்டுள்ளனர். ஆசிரிய சங்கங்கள் மீது பெற்றோரும் கல்விச் சமூகமும் வெறுப்புக் கொள்ளும் விதத்தில் தொழிற்சங்கங்களின் நிலைப்பாடு அமைந்துள்ளது.

இலவசக் கல்வியின் பயனாகவே இன்று இந்நிலைமைக்கு வந்திருக்கும் ஆசிரிய சமூகமானது அப்பாவி மாணவர்களின் கல்விக்கு நிபந்தனை முன்வைப்பது மனசாட்சிக்கு ஒப்பானதல்ல. இதுவிடயத்தில் அவர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இலவசக் கல்வியை மாத்திரமே நம்பியிருக்கும் மாணவர்கள் நாட்டில் இலட்சக்கணக்கில் உள்ளனர். பணம் கொடுத்து ரியூஷன் கல்வியைப் பெறுவதற்கு அவர்களால் முடியாது. அம்மாணவர்கள் வறியவர்கள்.

இலவசக் கல்வியை நம்பித்தான் அவர்கள் கற்கின்றனர். அரசாங்க பாடசாலைகளை நம்பியே அம்மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனரென்பதை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலையில், விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் இன்னுமே ஆரம்பிக்கப்படாமல் இழுபறி நிலைமை தொடர்வதென்பது நல்லதல்ல. அந்த இழுபறியானது மாணவர்களின் எதிர்காலத்தையே பாதிக்கச் செய்யும் என்பதை மறந்து விடலாகாது. நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்து கல்விப்பணியாற்றுவதென்பது நியாயமற்றதென்பதை சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இலவசக் கல்வியை மாத்திரம் நம்பியிருக்கும் மாணவர்களின் நிலைமை எத்தனை பரிதாபம் நிறைந்தது என்பதையும், எமது நாட்டில் கல்வி எவ்வாறு விலைபேசப்படுகின்றது என்பதையும் கொவிட் தொற்று தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் பெற்றோரால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. மனசாட்சி என்பது இப்போதெல்லாம் முழுமையாகவே மரணித்து விட்டதோ என்றுதான் எண்ணத் தோன்றியது.

ஒட்டுமொத்த நாடும் முடங்கியிருந்த வேளையில் மாணவர்களும் கல்வியைப் பெற முடியாமல் வீடுகளுக்குள் முடங்கியிருந்தனர். அவ்வேளையில் சிறிய தொகை ஆசிரியர்கள் மாத்திரமே 'ஒன்லைன்' ஊடாக கற்பித்தல் பணியை முன்னெடுத்தனர். பெரும்பாலான ஆசிரியர்கள் 'ஒன்லைன்' ஊடான கற்பித்தலில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தனர். ஆனால் அரசாங்க ஊழியர்கள் அனைவருக்குமே மாதம் தோறும் தவறாமல் சம்பளம் வழங்கப்பட்டது.

கல்விப்பணியை நேரடியாகவே விலைபேசுவது முறையல்ல. அவ்வாறு தொழிற்சங்கங்கள் நடந்து கொள்ளுமானால் பெற்றோர் இனிமேல் தொழிற்சங்கங்கள் மீதே வெறுப்புக் கொள்வர் என்பதை மறந்து விடலாகாது. மாணவர்களின் எதிர்கால நலன் கருதி பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி காலதாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதே அனைவரினதும் வேண்டுகோளாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று உலக பௌத்த உச்சிமாநாடு ஆரம்பம்

உலக பௌத்த உச்சிமாநாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை 10 மணிக்கு தலைநகர் புதுடில்லியில் உள்ள அசோக் ஹோட்டலில் ஆரம்பித்து வைத்தார். உலக பௌத்த உச்சி மாநாடு நேற்று ஆரம்பமாகி இரு நாட்கள் நடைபெறுகின்றது. இன்று இம்மாநாடு நிறைவுறுகின்றது. இந்திய கலாசார அமைச்சும் சர்வதேச பௌத்த கூட்டமைப்பும் (IBC) இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.

பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை உச்சிமாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முக்கிய பேச்சாளர்களாக அமெரிக்கப் பேராசிரியர் ரொபர்ட் தர்மன், திபெத்திய பௌத்த சமய முக்கியஸ்தர் திச் ட்ரை குவாங் ஆகியோர் பங்கேற்றனர்.




## இருநாள் உச்சிமாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பிரதமர் நரேந்திர மோடி உரை

பேராசிரியர் தர்மன் தனது பணிக்காக 2020 இல் பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

உலகளாவிய பௌத்த தர்மத்தின் தலைமைத்துவத்துக்கு இந்தியா அதிக பங்களிப்பை வழங்க வேண்டுமென்பதே இந்திய அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. அந்த நோக்கத்துக்காகவே இம்மாநாட்டில் அரசாங்கம் கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்த தம்மத்தின் அடிப்படை விழுமியங்கள் சமகா லத்திற்கு உத்வேகத்தையும் வழிகாட்டுதலையும் வழங்க முடியும் என்று இம்மாநாடு தொடர்பாக இந்தியப் பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் உலகின் தலைசிறந்த அறிஞர்கள், பௌத்த அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் தர்மகர்த்தாக்கள் பங்கேற்கின்றனர்.

தெற்கு, தென்கிழக்கு நாடுகளுடன் இந்தியா பல நூற்றாண்டு காலமாக பௌத்த மதரீதியிலான பழைமையான கலாசார நல்லுறவுகளைப் பேணி வருகின்றது. உலகளாவிய ரீதியில் பௌத்தம் பரவுவதற்கு இந்தியா பண்டைக் காலத்தில் பெரிதும் பங்காற்றியுள்ளது என்று நேற்றைய மாநாட்டின் அங்குரார்ப்பண வைபத்தில் உரையாற்றியோர் குறிப்பிட்டனர்.

உலக பௌத்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பௌத்த



## 'சர்வதேச அமைதிக்கும் கருணைக்குமென புத்தர் பெருமானை உலகுக்கு வழங்கிய நாடு பாரதம்'

பிக்குகள், அறிஞர்கள் மற்றும் பிரதிநிதிகள் பெருமளவில் நேற்று வருகை தந்திருந்தனர். நேற்றைய அங்குரார்ப்பண விழாவில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை, வியட்நாம், அமெரிக்கா, லாவோஸ், பிரேசில் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்பதாக இந்திய மத்திய கலாசார அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடி நேற்று உச்சிமாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், "போர் போன்ற சவால்களை உலகம் கடந்து கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

"பொருளாதார ஸ்திரமின்மை, பயங்கரவாதம், மத தீவிரவாதம் மற்றும் பருவ நிலை மாற்றம் போன்ற சவால்களை உலகம் வெற்றி கொள்ள வேண்டியிருக்கின்றது. புத்தர் பெருமானின் கருத்துக்கள் உலகின் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தருகின்றன. கௌதம புத்தரின் உன்னத போதனைகள் பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற மக்களை நல்வழிப்படுத்தியுள்ளன. புத்தர் பெருமானின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட இந்தியா, உலக அளவில் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது" என்றும் பிரதமர் நரேந்திர மோடி தனது உரையில் தெரிவித்தார்.

"உலகம் இன்று போராலும் அமைதியின்மையாலும் பாதிக்கப்பட்டு வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு புத்தர் பெருமான் அதற்கான ஒரு தீர்வைக் கொடுத்தார். இந்தியா உலகிற்கு 'யுத்தத்தை' வழங்கவில்லை, உலக அமைதிக்கும் கருணைக்குமான புத்தர் பெருமானையே வழங்கியது" என்று பிரதமர் நரேந்திர மோடி தனது உரையில் மேலும் கூறினார்.

உலகளாவிய பௌத்த உச்சி மாநாட்டின் கருப்பொருள் 'தற்கால சவால்களுக்கான பதில்கள்' என்பதாகும். அதாவது இன்றைய சவால்களுக்கு அமைதி வழியில் தீர்வைத் தேட வேண்டுமென்பதே இதன் பொருள் ஆகும்.

# விடுதியில் வைத்து உயிரை மாய்த்துக் கொண்ட அரகல போராட்டத்தின் முக்கிய செயற்பாட்டாளர்!

**அதிகளவு மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட போராட்டத்தின் முக்கிய செயற்பாட்டாளரின் சடலம் முல்லேரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடுதியொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக முல்லேரிய பொலிஸார் தெரிவித்தனர்.**

இவ்வாறு மரணமடைந்தவர் நாத்தாண்டிய மயிலவ துட்டுகெமுனு மாவத்தை, இலக்கம் 72/1 எனும் முகவரியில் வசித்து வந்த கருணாரத்ன முதியான்சேலாகே புத்தி கருணாரத்ன எனும் (28) வயதுடைய நபரென பொலிஸார் தெரிவித்தனர்.



இந்நபர் கடந்த ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை அகற்றுவதற்காக மேற்கொண்ட கோல்பேஸ் போராட்டத்தில் முன்னணியில் நின்று செயல்பட்டவர் என ஆரம்ப விசாரணைகளிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கோல்பேஸ் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முதலாவது கூடாரத்தை அமைத்த நபரெனவும், இவர் ஜனாதிபதி காரியாலய முன்றிலில் நடைபெற்ற இசைக்கச்சேரியில் அறிவிப்பாளராக முதல் தடவையாக போராட்டக்காரர்கள் முன்னிலையில் உரையாற்றியவர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவர் முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிம்புட்டான லேனில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் தற்காலிகமாக வசித்து வந்ததாகவும், கடந்த 18 ஆம் திகதி இவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக 119 இலக்கத்துக்கு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி அதிகாரிகள் குழுவொன்று மேற்குறிப்பிட்ட இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது, குறிப்பிட்ட நபர் கட்டிலில் இறந்து கிடப்பதை கண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் சடலம் தொடர்பாக பிரேத பரிசோதனை மேற்கொண்ட பொழுது மனஉளைச்சல் நோய்க்கு உட்கொள்ளப்படும் மாத்திரைகளை அதிகளவு எடுத்திருப்பதன் காரணமாக இம்மரணம் நிகழ்ந்துள்ளதாக தகவல் தெரியவந்துள்ளது.



அதன்படி மரணமடைந்த நபரின் பூதவுடல் மகரகம பிரதேசத்தில் உள்ள மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு கடந்த 19ஆம் திகதி மாலை கொடிகமுவ பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணத்துக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை என்றும் போராட்டத்தின் நோக்கம் இதுவரை நிறைவடையவில்லை என்பது தொடர்பில் கடந்த காலங்களில் அவர் விரக்தியில் காணப்பட்டதாகவும், அது தொடர்பாக அவர் சமூக ஊடகங்கள் மூலம் கருத்துகள் பகிர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக முல்லேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

**குறிப்பு 1**




மனிதனுக்கு சரியாக எப்போது 'டெட் லைன்' என்று தெரிந்திருக்க வேண்டும். வார்த்தைகளின் அர்த்தங்களில் 'டெட் லைன்' ஒன்று. குறைந்தபட்சம் எனக்கு தனிப்பட்ட ரீதியில் அவ்வாறு ஒன்று இருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மரணம் அடைய நேரிடும் சம்பவத்தை தவிர்த்து கதைத்தால், மனிதர்கள் தாங்கள் தீர்மானிக்கும் தினத்தில், நேரத்தில் மற்றும் இடத்தில் தான் தெரிவு செய்யும் விதத்தில் வாழ்க்கையை முடிவு செய்வது சாதாரண விடயமாக சமூகத்தில் மற்றும் கலாசாரத்தில் இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன், நான் நினைக்கின்றேன் அந்தக் காரணத்தால் பொதுவாக சமூகத்துக்கு நல்ல விளைவுகள் ஏற்படும்.

இன்று நாம் வாழும் சமூகத்தில் அந்த அர்த்தத்தில் உள்ளே அது அசாதாரண ஒன்றாக இருந்தாலும் இன்றைக்கு 26 நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதனை செய்த ஒருவர் இருந்தார். அதனை செய்திருந்தவர் ஆயுள் எதிர்பார்ப்பை கைவிடுவதாக தெரிவித்திருந்தார். அவ்விடயம் சில வேளைகளில் நாம் வாழும் தற்போதைய கலாசாரத்திற்கு பொருத்தமான ஒன்றல்ல. ஆனால் எதிர்காலத்தில் அவ்வாறு நடக்க வழியுண்டு என நான் எண்ணுகின்றேன்.

**குறிப்பு2**




நாளை நான் தனியாகவாவது பதாகையொன்றை தூக்கிக் கொண்டு பாதையில் இறங்குவேன். இவர்களோடு எதுவும் முடியாது. முடியுமானவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய வீட்டின் முன்பாவது பாதையில் இறங்குங்கள்.

இவையெல்லாம் அவர் இட்டிருந்து பதிவுகள் ஆகும்.



# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

## அல் குர்ஆனை அணுக வேண்டிய ஒழுங்கு

**உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனதும் இம்மை மறுமை வாழ்வுக்கு நேர்வழிகாட்டக்கூடிய அருள்மறையாம் அல் குர்ஆன் ரமழான் மாதத்தில் தான் அருளப்பட ஆரம்பமானது. இதனை அல் குர்ஆனே, 'ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய) தென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் அல் குர்ஆன் (எனும் வேதம்) இறக்கியருளப்பட்டது. அது (நன்மை தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கிறது (2:185) என்று குறிப்பிட்டிருக்கிறது.**

அதேநேரம் 'அல் கத்ர்' என்ற அத்தியாயத்தில், 'நிச்சயமாக நாம் இக்குர்ஆனை (மிக்க கண்ணியமுள்ள) லைலதுல் கத்ர் எனும் ஒர் இரவில் (முதலாவதாக) இறக்கி வைத்தோம். (நபியே...!) அந்தக் கண்ணியமுள்ள இரவின் மகிமையை நீங்கள் அறிவீர்களா? கண்ணியமுள்ள அந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும் ஜிப்ரீலும் தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) எல்லாக் காரியங்களுடன் இறங்குகின்றனர். (அவ்விரவு) விடியற்காலை உதயமாகும் வரையில் முற்றிலும் சாந்தியும் சமாதானமும் உடையது.' **(97:1-5)**

இவ்வாறு மகத்துவம் பெற்று விளங்கும் ரமழான் மாதத்திலும், குறிப்பாக லைலதுல் கதர் இரவிலும் இறக்கியருளப்பட்ட இக்குர்ஆனின் ஆசானும் வடிவமைப்பாளனும் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ் ஒருவன் தான். தன் படைப்புக்களில் ஒன்றான மனிதனின் ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கும் சுபீட்சத்திற்கும் நேர்வழிகாட்டுவதற்காகவே அவன் இக்குர்ஆனை இறக்கி அருளியுள்ளான். இதுவே அவனிடம் மனிதனுக்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை நெறியுமாகும்.

மனிதனை ஈருலக வாழ்வுக்கும் ஏற்ப புடம்பேட்டு பக்குவப்படுத்தவே இதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. அதனால் இக்குர்ஆன் மனிதனோடு நேரடியாக உரையாடக்கூடிய ஒழுங்கைப் பெற்றிருக்கிறது. இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளப்பட்ட போதிலும் அது உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவருடனும் உயிரோட்டத்துடன் உரையாடிக் கொண்டிருக்கும்.

இக்குர்ஆன் ஆனது அதனைப் பெற்றுக்கொண்ட முதல் தலைமுறையினரின் உள்ளங்களோடும் அவர்களது பௌதீக வாழ்வோடும் உரையாடியபடியே இறங்கியது. அதன் ஊடாக உலகம் இருக்கும் வரையும் நடைமுறைச்சாத்தியமானதாக இதன் வசனங்கள் அமையப் பெற்றுள்ளன.

இதன் வசனங்கள் கால சூழலுக்கு ஏற்பட்ட கட்டம் கட்டமாக இறக்கி அருளப்பட்டு 23 வருட காலப்பகுதியில் முழுமைப்படுத்தப்பட்டனவே அன்றி, அது ஒரே தடவையில் முழுமையாக அருளப்பட்டதல்ல. இந்த உண்மையை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் அல் குர்ஆன் என்பது மனிதனின் அன்றாட வாழ்வோடு எவ்வித தொடர்பு மற்ற வகையில் வெறுமனே ஓதப்படக்கூடியதாகவோ அல்லது கேட்கப்படக்கூடியதாகவோ இல்லை. அவ்வாறான பார்வை எமது உள்ளத்திற்கும் குர்ஆனுக்கும் இடையில் வலுவான தடுப்பாக இருந்து கொண்டிருக்கும். அல் குர்ஆனின் வசனங்களை நோக்கும் போது அவை மனிதனின் உள்ளத்தோடும் அவனது அன்றாட வாழ்வின் உயிரோட்ட நிகழ்வுகளோடும் அளவளாவுவதைக் காணலாம். அதற்கேற்பவே முதல் தலைமுறையினர் அல் குர்ஆனை அணுகினர்.

ஆனால் இக்குர்ஆன் அருளப்பட முன்னர் அந்த முதல் தலைமுறையினர் சமூக, கலாசார, சமய, அறிவியல், பொருளாதாரம் உட்பட எல்லா துறைகளிலும் பின்னடைவுக்கு உள்ளானவர்களாக இருந்தனர். அவர்களை அன்றைய உலகமே ஏரெடுத்தும் பார்க்கவுமில்லை. உலகுக்கு வழங்க அவர்களிடம் எதுவும் இருக்கவுமில்லை. அவ்வாறானதொரு சமூகத்தை உலகம் இருக்கும் வரையும் முன்மாதிரியான சமூகமாக மாற்றியமைத்த பெருமை குர்ஆனுக்குரியது. அதன் ஊடாக அந்த முதல் தலைமுறையினர் மனித வரலாற்றில் சிறப்பு பெற்ற சமூகமாகவும் நினைவு கூறப்படக்கூடிய முன்மாதிரி மனிதர்களாகவும் குர்ஆனிய நிழலில் உருவாகினர். இதன் ஊடாக குர்ஆனின் சக்தி முழு உலகிற்கும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது.

அதனால் தான் நவீன கால இஸ்லாமிய அறிஞர் ஒருவர், 'அல் குர்ஆனின் செயற்படும் ஆற்றலை நாம் பெறுவதற்கும் அது கொண்டுள்ள உயிரோட்டத்தை அறிந்து கொள்வதற்கும் முஸ்லிம் சமூகத்திற்கு தேவையான வழிகாட்டல்களை ஒவ்வொரு தலைமுறையினரும் அதிலிருந்து பெற்றுக்கொள்ளவும் அக்குர்ஆனைக் கொண்டு முதல் தலைமுறையினர் உருவாகிய விதத்தை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். அவர்கள் தம் உள்ளத்தோடும் ஆசைகளோடும் போராடியதோடு நின்றுவிடாது மக்காவிலும் மதீனாவிலும் தம் இறை கொள்கைக்கு எதிரானவர்களைக் கையாள அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறைகளும் அலாதியானது. இந்த இருபக்க போராட்டத்திற்கும் தேவையான வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் அன்றைய சூழலில் அருளப்பட்டுக் கொண்டிருந்த குர்ஆனில் இருந்தே அவர்கள் பெற்றார்கள்' என்றுள்ளார்.

அல் குர்ஆனுடனான பயணத்தில் அந்த முதல் தலைமுறையினரிடம் மனிதர்கள் என்ற வகையில் எல்லாத் தனித்தன்மைகளும் பலவீனங்களும் ஆற்றல்களும் தெளிவாகவே வெளிப்பட்டன. அவை அனைத்தையும் அவர்கள் பொறுமையோடும் ஒழுங்குமுறையோடும் அணுகிக் கையாண்டார்கள். அத்தலைமுறையினர் அன்றாட வாழ்வில் எதிர்கொண்ட நிகழ்வுகளை உலகம் இருக்கும் வரை தோற்றம்பெறும் சமூகங்களும் குறைவாகவோ கூடியளவிலோ எதிர்கொள்ள முடியும். அந்நிகழ்வுகள் நவீன வடிவங்களைக் கூட பெறலாம். ஆனால் அவற்றின் அடித்தளம் முதல் தலைமுறையினர் முகம் கொடுத்ததாக இருக்க முடியும்.

அந்த வகையில் தான் இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் இக்குர்ஆன் அருளப்பட்ட போதிலும் அது இன்றும் உயிரோட்டம் மிக்கதாகவும் இந்த நவீன நூற்றாண்டுடனும் பொருந்திப் போகக்கூடியதாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. குர்ஆன் மனித சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியை செய்து கொண்டிருக்கின்றது. ஆரம்பம் முதல் அதன் பணி அவ்வாறு தான் நீடித்து வருகிறது. மனிதன் இயல்பின் அடிப்படையிலும் படைக்கப்பட்ட விதத்திலும் என்றும் மாறாதவன். இக்குர்ஆனின் ஊடாக அல்லாஹ் மனிதனை விழித்து உரையாடுகிறான். அந்த உரையாடல் என்றும் மாறப் போவதில்லை. மனிதனும் வேறு படைப்பாக மாறக்கூடியவன் அல்லன். மனிதனின் இயல்பை விழித்து உரையாடும் இக்குர்ஆன் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மனிதனின் வாழ்வை மாற்றியமைக்கக்கூடிய ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இப்பின்புலத்தில் தான் அல் குர்ஆனின் ஆரம்பமே, 'ஓதுவீராக... அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஓதுவீராகவே .. என்ற அழைப்போடு இறங்கியது (அல் குர்ஆன்). மனிதனின் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்படுகின்ற எத்தனையோ நிகழ்வுகள், சம்பவங்கள் இருக்கின்ற போதிலும் உலகம் இருக்கும் வரையும் உயிரோட்டத்துடன் இருக்கும் இக்குர்ஆனை இறக்கி அருள தொடங்கியதும் முதல் சொல்லாகவும் வசனமாகவும் வாசிப்பதன் அவசியத்தை அல்லாஹ் எடுத்தியம்பியுள்ளான். இதன் ஊடாக வசிப்பதும் ஓதுவதும் எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகிறது. வாசிப்பதும் படிப்பதும் அறிவுக்கு வித்திடும். உரிய அறிவை பெற்றுக் கொள்ளும் போது மனித வாழ்வு ஈருலக வாழ்வுக்கும் ஏற்ற வகையில் அமைந்துவிடும். அதுவே குர்ஆனின் இலக்கு ஆகும்.

இருந்தும் கூட குர்ஆனின் இக்கட்டளை தொடர்பில் கவனயீனமாக இருப்பவர்களையும் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாதவர்களையும் மக்கள் மத்தியில் காணக்கூடியதாக உள்ளது. அதனால் அல் குர்ஆன் 'இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவர்களிடம் இருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளை(யும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் காண்பார்கள். **(4:82)** என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இதன்படி அல் குர்ஆன் மனிதனுடன் எவ்வாறான உறவைப் பேண எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகிறது. உண்மையில் அல்லாஹ் அல்லாத எவராலும் குர்ஆனைப் போன்ற முழுமை பெற்றதும் பலவீனங்கள், குறைபாடுகள் அற்றதுமான ஒரு நூலை தயாரிக்கவே முடியாது. இருந்தும் கூட இந்த உண்மை புரிந்துகொள்ளப்படாத நிலை காணப்படுகிறது. அதனால் அல் குர்ஆன்,' 'அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது இவர்களுடைய உள்ளங்கள் மீது தாளிடப்பட்டு விட்டனவா?' **(47:24)** என்று கடுந்தொனியில் கேள்வி எழுப்பி இருக்கிறது.

ஆகவே அல் குர்ஆனைப் பெற்றுக் கொண்ட முதல் தலைமுறையினர் அதனை அணுகிய ஒழுங்கில் நாமும் அணுக வேண்டும். அப்போது முதல் தலைமுறையினரில் அது உயிரோட்டத்துடன் செயற்பட்டது போன்று எமது வாழ்விலும் செயற்படுவதை எம்மால் காணக்கூடியதாக இருக்கும். அதுவே குர்ஆனின் எதிர்பார்ப்பாகும். அதன் ஊடாக ஈருலக வாழ்வும் குர்ஆனிய வழிகாட்டலுக்கு ஏற்ப அமைந்துவிடும். வாழ்வும் அர்த்தபூர்வமாகும்.

**மர்லின் மரிக்கார்...**

## ஸகாத்துல் பித்ரின் மகத்துவம்

தேவையற்ற வீண் பேச்சுக்கள், ஆபாச வார்த்தைகள் போன்றவற்றிலிருந்து நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும் ஏழைகளுக்கு உணவாகவும் அல்லாஹ் ஸகாத்துல் பித்ரை விதியாக்கியுள்ளான். யார் அதனை பெருநாள் தொழுகைக்கு முன்னர் நிறைவேற்றுகிறாரோ அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸகாத்தாக நிறைவேறும். தொழுகையின் பின்னால் அதனை நிறைவேற்றினால் அது ஒரு தர்மமாக நிறைவேறும். (ஆதாரம் அபூதாவூத்)

இது அனைத்து முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். செல்வத்துடன் தொடர்பான கடமை என்பதை விட ஒவ்வொரு தலையுடனும் தொடர்பானதாக உள்ளது. நோன்பாளியைத் தூய்மைப்படுத்துவதும் ஏழைகளின் பெருநாள் தின உணவாகவும் அமைவதுமே இதன் நோக்கமாக விளங்குவதை இந்நபிமொழி எடுத்துக்காட்டுகிறது.

பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய தானிய வகையிலிருந்தே ஸகாத்துல் பித்ர் வழங்கப்பட வேண்டும் என்று மாலிக், ஷாபி, ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதன் பெறுமதியைக் கொடுக்கலாம் என்று ஹனபி மத்ஹப் கருதுகின்றது. இமாம்களான உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்), ஸுப்யானுஸ் ஸவ்ரி (ரஹ்), ஹஸனுல் பஸரி (ரஹ்) போன்ற அறிஞர்களும் இதே கருத்தை கொண்டுள்ளனர். தானியத்தை கொடுப்பதனைவிட பணப்பெறுமதியை வழங்குவது பயனுள்ளது, ஸகாத்துல் பித்ரின் நோக்கத்தை நிறைவேற்றுகிறது என்று நவீனகால இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வகையில் பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய அரிசியிலிருந்து ஒரு நபருக்கு 2.5 கிலோ கிராம் அளவு ஸகாத்துல் பித்ராக வழங்கப்படல் வேண்டும். அல்லது அதன் பெறுமதி வழங்கப்படல் வேண்டும் என்று தெளிவாகிறது.

ஒரு குடும்பத்தின் பெருநாள் தினத்தின் பகல் மற்றும் இரவின் உணவுத்தேவைக்கு மேலதிகமாக இருந்தால் அவர் ஸகாத்துல் பித்ரை வழங்கிவிடவேண்டும். பக்கீர்கள் எனப்படும் ஏழைகளின் கைகளும் வருடத்தில் ஒருமுறையாவது கொடுக்கின்ற கரங்களாக இருக்க வேண்டும் என்று இதன்மூலம் நாடப்படுகின்றது. 'நபி (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழம் அல்லது பார்லியிலிருந்து ஒரு 'ஸாஃ' அளவு ஸகாத்துல் பித்ராக அடிமைகள், சுதந்திரவான்கள், ஆண்கள், பெண்கள், சிறியவர்கள், பெரியவர்கள் போன்ற முஸ்லிம்களிலிருந்த அனைவருக்கும் விதியாக்கினார்கள் (ஆதாரம் புகாரி, முஸ்லிம்). இது ஒரு முஸ்லிம் மகிழ்ச்சியாக இருக்கும்போதும் துன்பத்தில் இருக்கும்போதும் செலவழிக்க பழக்குகிறது. இதனையே அல்லாஹ் 'இன்பத்திலும் துன்பத்திலும் அவர்கள் செலவு செய்வார்கள் (ஆல இம்ரான் 134) என்று குறிப்பிடுகிறான்.

ஏலவே குறிப்பிட்டது போன்று இது பெருநாளுக்கான பிறை கண்டது முதல் பெருநாள் தொழுவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டும். ஸகாத்துல் பித்ரை பெருநாள் பிறை காண்பதற்கு ஓரிரு தினங்கள் முற்படுத்தி கொடுப்பதும் அனுமதிக்கப்பட்ட விடயமாகும். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு முன்னர் ஸகாத்துல் பித்ரை கொடுத்துள்ளார்கள் (ஆதாரம் புஹாரி). ரமழானின் ஆரம்ப தினங்களிலிருந்தே இதனை வழங்க முடியும் என்பது இமாம் ஷாபி (ரஹ்) இன் கருத்தாகும்.

எனினும் பெருநாள் தினத்துக்கு சற்று முன்னர் நிறைவேற்றுவதே சிறந்ததாகும் என்று இப்னு குதாமா (ரஹ்) போன்ற இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் கருதுகின்றார்கள். (ஆதாரம் முக்னி) பெருநாள் தினத்தில் ஏழைகள் மகிழ்ச்சியாக இருத்தல் என்ற ஸகாத்துல் பித்ரின் நோக்கம் இதன்மூலமாகவே நிறைவேற்றப்படுகிறது. எனவே இதுவே மிகப்பொருத்தமான கூற்றாகும்.

ஸகாத்துல் பித்ர் ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது ஏகோபித்த முடிவாகும் என்று இமாம் இப்னு ருஷ்த் (ரஹ்) அவர்கள் கருதுகின்றார்கள். ஸகாத்தை பெறுவதற்கு தகுதியான எட்டு கூட்டத்தவர்களும் ஸகாத்துல் பித்ரை பெறுவதற்கு தகுதியானவர்களாவர் என்பது ஷாபி மத்ஹபின் பிரபலமான கூற்றாக உள்ளது. எனினும் இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) இதுபற்றி விளக்கும்போது 'இந்த தர்மம் ஏழைகளுக்கே வழங்கப்படல் வேண்டும் என்று நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எட்டு கூட்டத்தவர்களுக்கு நபியவர்கள் பிரித்து வழங்கவுமில்லை அவ்வாறு கட்டளையிடவுமில்லை. ஸஹாபாக்களும் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை' என்கிறார் (ஆதாரம் ஸாதுல் மஆத்) இவ்வகையில் இது பக்கீர் எனப்படும் பரம ஏழைகள், மிஸ்கீன் எனப்படும் வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்பட முடியும் என்பதுவே அதிகமான அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

ஸகாத்துல் பித்ரை உரிய நேரத்தில் வழங்கிவிடுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் கடமையாக்கப்பட்டது. இது கடமை என்பது இஜ்மாவான ஏகோபித்த முடிவாகும் என்று இமாம் இப்னுல் முன்திர் (ரஹ்) குறிப்பிடுகிறார்கள். 'பெருநாள் தினத்திலே அவர்கள் வீடுகளை சுற்றிவந்து யாசகம் கேட்காத அளவுக்கு அவர்களது தேவைகளை போதுமாக்கிக் கொடுங்கள்'

(ஆதாரம் தாரகுத்னி)

எனவே ஸகாத்துல் பித்ரை உரிய முறையில் நிறைவேற்றி நோன்பு காலத்தில் விட்ட தவறுகளுக்கும் குறைபாடுகளுக்கும் பரிகாரம் தேடிக்கொள்வோம்.

அஷ் ஷெய்க்
**யூ.கே. றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

## உள்ளங்களை புண்படுத்தலாகாது!

மனிதர்களுக்கு தீங்கிழைத்தல், மக்களின் உணர்வுகளைப் புண்படச்செய்தல் போன்றன புற்றுநோய்க்கு ஒப்பானவை. அவை பெரும் சேவைகளையும் நற்செயல்களையும் செல்லரித்து பாழாக்கிவிடும். அதனால் நாம் மொழிகின்ற எந்தவொரு வார்த்தையும் எவரது உள்ளத்தையும் புண்படச் செய்துவிடக்கூடாது. எமது அங்க அசைவுகளும் கூட மற்றவர் மனம் நோகச் செய்யும் வகையில் அமைந்துவிடலாகாது.

புன்முறுவல் என்பது ஸதகா எனும் கணிப்பில் நன்மையாக மாறும். அதன் ஊடாக மற்ற மனிதர் மானசீக ரீதியாக மகிழ்ச்சி அடைவர். அதேநேரம் புன்முறுவல் செய்தவருக்கு அல்லாஹ் நன்மைகள் அளிக்கிறான். அதாவது புன்முறுவல் செய்தவருக்கு இரு நன்மைகளும் மற்றவருக்கு ஒரு நன்மையும் கிடைக்கப்பெறும்.

ஸதகா என்பது சில சில்லறைகளை தானதர்மம் செய்வது மாத்திரமல்ல. மாறாக ஸதகாவுக்குள் ஏராளமான விடயங்கள் உள்ளடங்கக்கூடியனவாக உள்ளன. அல் குர்ஆனில் ஸதகாவுடன் சேர்த்து இன்பாஃக் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் இறைவழியில் எவ்வளவுதான் பணம் செலவிட்டிருந்தாலும் அதனை மனிதர்களிடம் சொல்லிக்காட்டி பெருமை பாராட்டுவதும் மக்களின் மனம் புண்படும் வகையில் நடந்துகொள்வதும் அவர் செய்த மகத்தான நற்காரியங்களை வீணாக்கிவிடும்.

குறிப்பாக தாய் தந்தையரின் நலன்களில் கண்ணும் கருத்துமாக இருப்போம். அவர்களது சிறிய வேலைகளிலும் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்வோம். இருந்தும் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் மனம் நோகும்படி நடந்து கொண்டால் எமது சேவைகளும் கவனிப்புகளும் வீணாகிவிடும்.

அதேநேரம் எமது பணியாளர்களை நாம் நன்றாகவே கவனித்துக் கொள்வோம். நியாயமான சம்பளம், கொடுப்பனவு மற்றும் பெருநாளின் நிமித்தம் ஆடைகள் உட்பட விஷேட கொடுப்பனவுகளை வழங்குவோம். என்றாலும் சில சந்தர்ப்பங்களில் பலர் முன்னிலையில் அவர்களை ஏசி அவமானப்படுத்திவிட நேர்ந்திடலாம். அதன் விளைவாக அவர்களுக்கு செய்த சிறப்புக் கவனிப்புகள் அனைத்தும் வீணாகிவிடும். அதனால் தவறுகள் இழைக்கப்படும் போதும் பிழைகள் விடப்படும் போதும் கோபம் வரலாம். அச்சமயம் பொறுமை காத்து உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பசித்தவருக்கு உணவளிப்பதும் நோய்வாய்ப் பட்டவருக்கு சிகிச்சைகளுக்காக உதவுவதும் தேவையுடையவரின் தேவைகளை நிறைவேற்றுவதும் மனித உறவைப் பேண துணைபுரியும் செயற்பாடுகளாகும்.

அதனால் தான் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

'மனிதன் சுயநலன் மிக்கவனாக ஆகாமல் தனக்கு விருப்பமானவற்றை மற்றவர்களுக்கு கொடுக்கக்கூடிய உள்ளம் படைத்தவர்களாக திகழ வேண்டும். (மக்களே நேருக்குநேர்) இடித்துரைக்கு கொண்டும் (முதுகுக்குப்பின்) குறைகூறிக் கொண்டும் திரிகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் கேடுதான். அவன் பொருளை சேகரிக்கிறான். மேலும் அதனை எண்ணி எண்ணி வைத்திருக்கிறான்.' ( 1041,2)

'ஒருபோதும் இல்லை. ஆனால் அநாதையுடன் கண்ணியமாக நீங்கள் நடந்துகொள்வது இல்லை. மேலும் வறியவர்களுக்கு உணவளிக்க நீங்கள் ஒருவரையொருவர் தூண்டுவதுமில்லை. மேலும் வாரிசு சொத்துக்களை முழுமையாக நீங்களே விழுங்கிவிடுகிறீர்கள். மேலும் செல்வத்தின் மீது அளவுகடந்து மோகம் கொள்கின்றீர்கள்.' (891720)

'நற்செயல்கள் என்பது உங்களுடைய முகங்களை கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும் இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை விடுவிப்பதற்கும் வழங்குவதும் மேலும் தொழுகையை நிலைநாட்டி ஸக்காத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும் வாக்குறுதியளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும் வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்துக்கும் அசாத்தியத்துக்கும் இடையிலான போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்களாவர். இவர்களே உண்மையாளர்கள். இவர்கள் இறையச்சம் (தக்வா) உடையவர்களாவர். (2 172)

தொகுப்பு: **அபூ ஸப்வான் உமைர்...**

## பெருநாள் புத்தாடை

பெருநாள் தினத்தன்று புத்தாடை அணிதல் நபி வழியாகும். பெருநாளுக்காக தாயாராகும் நாம் முதலில் யோசிப்பது பெருநாள் புத்தாடைகள் குறித்துத் தான். எனவே பெருநாள் புத்தாடைகள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் பார்ப்போமேயானால், ஒருமுறை கடை வீதியில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த பட்டு குளிராடை ஒன்றை உமர் (ரழி) அவர்கள் எடுத்து வந்து நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே... இதை விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள். பெருநாளின் போதும், தூதுக் குழுவினரை சந்திக்கும் போதும் நீங்கள் உங்களை அலங்கரித்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் இது (மறுமை) பேறு அற்றவர்களின் ஆடையாகும்' எனக் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

பட்டாடை மார்க்கத்தில் தடுக்கப்பட்டதால் நபி (ஸல்) அவர்கள் வாங்க மறுத்தார்கள். ஆனால் இந்த ஹதீஸில் பெருநாளைக்குப் புது ஆடை அணியும் நடைமுறை நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்திருக்கின்றது என்பதை அறிய முடிகிறது.

அதேசமயம் ஒவ்வொரு பெருநாளைக்கும் புது ஆடை எடுக்க வேண்டியதில்லை என்பதை உமர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்திருக்கும் கருத்திலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பெருநாளிலும் புது ஆடை வாங்கி அணிந்தால் தான் பெருநாள். இல்லையென்றால் அது பெருநாள் இல்லை என்ற நம்பிக்கை மக்களிடத்தில் காணப்படுகிறது. அதனால் பல்லாயிரக்கணக்கான நாணயத்தை கடனாகப் பெற்று புத்தாடைகள் வாங்கி விட்டு கடைசியில் அந்தக் கடனை அடைக்க முடியாமல் காலமெல்லாம் கஷ்டப்படும் அவலநிலைக்கு உள்ளாவோரும் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர்.

ஆனால் பெருநாளின் நிமித்தம் இருப்பதில் சிறந்த ஆடையை அணிந்து கொண்டால் போதுமானது. கடன்பட்டு அவஸ்தைக்கு உள்ளாக வேண்டிய அவசியமில்லை என்பது தான் இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

கலாநிதி **தம்பிசாஹிப் சித்தி பரீதா...**
புத்தளம் வீதி, சிலாபம்.

உலகில் கொவிட் 19 பரவல் தீவிரம்

# 28 நாட்களில் 23,000 பேர் பலி 03 மில்லியன் பேருக்கு தொற்று



கொவிட் 19 தொற்று இன்னமும் தீர்மானிக்க முடியாத நோயாகவே இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

கடந்த 28 நாட்களில் 23,000 க்கும் அதிகமானோர் தொற்று காரணமாக பலியாகியுள்ளனர். புதிதாக 03 மில்லியன் பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் அவசரநிலை திட்டப் பணிப்பாளர் டாக்டர் மைக்கல் ராயன் தெரிவித்துள்ளார்.

பரிசோதனைகள் குறைந்துள்ளதுடன் அந்த எண்ணிக்கை மிகப் பெரிதென்றும் உலகச் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று நோய் எந்தப் போக்கில் செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள இன்னும் நாளாகலாம். அதற்குமுன் அது மேலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடுமென்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொவிட் 19 தொற்று நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைந்து வந்தாலும் இன்னமும் அதிகளவு மரணங்கள் ஏற்படுகின்றன, அதிகமானோர் பாதிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனத்தின் அவசர நிலை திட்டப் பணிப்பாளர் டாக்டர் மைக்கல் ராயன் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதத்துக்கு ஒருமுறை சந்திக்கும் கொவிட்19 நெருக்கடிக்காலக் குழு அடுத்த மாத ஆரம்பத்தில் கூடவிருப்பதுடன் தொற்று பரவல் தொடர்பிலும் ஆராயவுள்ளது.

## உயிர்த்த ஞாயிறு...

அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 8:30 மணி முதல் 09 மணி வரையிலான அரை மணி நேர நேரம் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் முதல் இரண்டாவது குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம் வரை, வீதியின் இரு மருங்கிலும் மக்கள் அணி திரண்டு அமைதியான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## முட்டைகளுக்கான...

இதற்கமைய, ஒரு கிலோ வெள்ளை முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 880 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 920 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளை நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாயாகவும், சிவப்பு நிற முட்டை ஒன்றின் சில்லறை விலை 46 ரூபாயாகவும் காணப்படுகின்றது.

## மின்சார தேவை அதிரடியாக...

குறிப்பிட்டுள்ளார். நாட்டின் மின்சார தேவை அதிகரிப்பை கவனத்திற் கொண்டு ஹம்பாந்தோட்டையில் அண்மையில் நிறுவப்பட்ட டீசலில் இயங்கும் மின் உற்பத்தி நிலையம் உட்பட மின்சார சபைக்கு சொந்தமான அனைத்து அனல் மின் நிலையங்களும் மின் உற்பத்திக்காக உபயோகப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றில் 25 இல்...

அதற்கிணங்க எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு தொடர்பான விவாதம் மேற்கொள்ளப்பட உள்ளது. நேற்றைய தினம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவின் தலைமையில் கூடிய பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவிக்குழுவில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்ற சபை அமர்வுகள் இம்முறை எதிர்வரும் 25 முதல் 28 வரை நான்கு தினங்களுக்கு நடைபெறும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## ராஜபக்ஷக்களைப் புறந்தள்ளி...

ராஜபக்ஷக்களையும் எந்த சக்திகளாலும் பிரிக்க முடியாது. இவ்வாறு பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட சில முயற்சிகள் தற்காலிகமாத்தான் சில சமயங்களில் வெற்றியடைந்திருக்கிறன.பின்னர்,இதற் குப்பின்னாலிருந்த சக்திகளை முஸ்லிம்கள் அடையாளம் கண்டுவிடுவர்.கடந்த காலகங்களிலும் இவ்வாறுதான் நிகழ்ந்தன.இலங்கை அரசியலில் ராஜபக்ஷக்கள் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்கின்றனர்.இதனால், இவர்களைப் புறந்தள்ளி எடுக்கப்படும் எந்த அரசயல் தீர்வுகளும் நிரந்தரமாக இருக்காது.

நாட்டின் ஐந்தாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ, இளம் வயதிலிருந்தே பலஸ்தீன முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்.ஒடுக்கப்படும் மக்களுக்காக குரலெழுப்பும் மஹிந்த ராஜபக்ஷவை, மிதவாதமாகச் சிந்திக்கும் சிறுபான்மைச் சமூகங்கள் நன்கு புரிந்துவைத்துள்ளதாகவும் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

## ரூ.5,000 போலி நாணய ...

தனியான அறையில் இந்த போலி நாணயத்தாள் அச்சிடும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. அவ்விடம் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த நாணயத் தாள்களுடன் கணினி உள்ளிட்ட உபகரணங்களை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த பண்டிகைக் காலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 5000 ரூபா நாணயத் தாளொன்றை வழங்கிய நபர் தொடர்பில், பொலிஸாருக்கு கிடைத்துள்ள தகவல்களையடுத்து பொலிஸார், அவரைச் சோதனையிட்டனர்.

இதையடுத்து அவரிடமிருந்து போலி 5000 ரூபா நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன . அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவரிடமிருந்து மேலும் 5000 ரூபா போலி நாயணத் தாள்களையும் கைப்பற்ற முடிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் குறித்த நபர் அந்த 5000 ரூபா போலி நாயணத்தாள்களை மலசல குழியில் போட்டுள்ளார. பின்னர் அதனை மீட்டபோது அதிலிருந்த மைய், அழிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புதிதாக 1,320 டாக்டர்களுக்கு...

குறிப்பாக அவர்களில் பெருமளவிலானோர் கஷ்டப்பிரதேச வைத்திய சாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இது குறித்து சுகாதார அமைச்சு தெரிவித்ததுள்ளது.

நாட்டில் தற்போது 19,000 டாக்டர்கள்

சேவையிலுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 20,000 மாக அதிகரிக்கும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இந்தளவு அதிகளவிலான டாக்டர்கள் ஒரே தடவையில் நியமிக்கப்படுகின்றனர்.

இது,சுகாதாரத் துறையில் ஈட்டிக் கொள்ள முடிந்துள்ள பாரிய வெற்றியாகுமென அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வருடாந்தம் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1500 இதிலிருந்து 1800 ஆக காணப்படுகிறது. இதனை 5,000 மாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனை இலக்காகக் கொண்டு சுகாதாரத் துறையை மேலும் முன்னேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றில் IMF விவாதம்...

செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிமாற்றம் செய்யுமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் சிங்கள மொழி பெயர்ப்பை தருமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே, இந்தியஇலங்கை ஒப்பந்தத்தின் ஆங்கில வடிவம் மட்டுமே பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது. எனினும் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. மேலும், சிறப்பு ஏற்பாடாக, எம்.பி.க்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருத்து தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஆங்கிலத்தில் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது.

மொழிப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து சர்வதேச நாணய நிதியத்தின் விவாதத்திலிருந்து தப்பிப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் தீ அனர்த்த சேதம்

# நட்டஈட்டை பெற்றுக்கொள்ளும் வழக்கு தாமதமின்றி முன்னெடுப்பு

## நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தம் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில், வழக்குத் தொடர்வதை உரிய காலத்துக்கு முன்பதாகவே முறையாக முன்னெடுப்பதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் மந்த நிலையிலுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர், உரிய காலத்தில் முறையாக அது முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கப்பலால், நாட்டுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் வழக்கு தொடர்வது சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இவற்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், பல்வேறு காரணங்களால் இது தொடர்பான நடவடிக்கைகள் மந்தமாக இடம்பெறுவதை, கண்காணித்து வருகிறோம். இதனால், இதில் தலையிட்டு அதனை நிவர்த்தி செய்துள்ளோம். இதற்கான நட்டஈட்டைக் கோருவதற்கான மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ள நாற்பது பேர் கொண்ட விசேட குழு நியமிக்கப்பட்டது.

அக்குழுவின் அறிக்கை கடந்த வருடம் செப்டெம்பர் (23) முன்னர் தமக்குப் பெற்றுத்தரப்படும். எவ்வாறெனினும், இந்த அறிக்கை இவ் வருட ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியிலேயே தமக்குக் கிடைத்தது. இதற்கிணங்க இந்த அறிக்கையை தேவையான சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 06ஆம் தரத்துக்கு மாணவர்களை...

கோரப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக நேற்று ஏப்ரல் 20ஆம் திகதி மதியம் 12 மணி முதல் மே மாதம் 08ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அதற்கான காலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

g6application.moe.gov.lk/#/ என்ற இணையதளம் ஊடாக ஒன்லைன் மூலமான மேன்முறையீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஷவ்வால் மாத தலைப்பிறை ...

கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் இதில்,கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் எப்பகுதியிலாவது சவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டால், தகுந்த ஆதாரங்களுடன் 011 2432110, 0112451245, 0777316415 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் மக்களை கேட்டுள்ளது.

## எரிபொருள் திறன் குறித்து ...

தகவல்கள் பரவி வருகின்றன.

இது குறித்து தெளிவுபடுத்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள ஐ.ஓ.சி, அத்தகைய எச்சரிக்கை எதையும் வெளியிடவில்லையென்றும், இது சமூக ஊடக தளங்களில் பரப்பப்படும் ஒரு போலி செய்தியெனவும் குறிப்பிட்டுள்ளது. கால நிலைகளைப் பொருட்படுத்தாமல் வாகன தயாரிப்பாளர்களினால் குறிப்பிடப்பட்ட அதிகபட்சம் வரம்பு வரை, வாகனங்களில் எரிபொருளை நிரப்புவது முற்றிலும் பாதுகாப்பானதென ஐ.ஓ.சி. மேலும் தெரிவித்துள்ளது.



தினகரன் பத்திரிகையை வெளியிடும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் லேக்ஹவுஸில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பணியாற்றிய ஊழியர்கள் பலரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்வில் தினகரன் பத்திரிகையின் ஆலோசகராக பணியாற்றிய ஏ. எல். எம். நிலாமுக்கு நிறுவனத்தின் ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி விருது வழங்கி கௌரவித்தார். நிதிப் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவாசம், பொது முகாமையாளர் எஸ். கே. கொத்தலாவல, மஜ்லிஸ் தலைவர் ஷம்ஸ் பாஹிம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். படம். அஷ்ரப் ஏ.ஸமத்

# ராகுல் காந்தியின் மனு நிராகரிப்பு சூரத் நீதிமன்றம் நேற்று உத்தரவு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



அவதூறு வழக்கில் இடைக்கால தடை விதிக்கும்படி தாக்கல் செய்த ராகுல் காந்தியின் மனுவை, சூரத் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

ராகுல் காந்தி கடந்த 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின் போது, கர்நாடக மாநிலம் கோலாரில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர், நிரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என எல்லா திருடர்களின் பெயர்களுக்கு பின்னேயும் மோடியென வந்தது எப்படி? என்ற வகையில் பேசியிருந்தார் என தகவல்கள் வெளிவந்து சர்ச்சை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக அவர் மீது குஜராத் மாநில முன்னாள் மந்திரி அமைச்சர் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான புர்னேஷ் மோடி, சூரத் மாவட்ட தலைமை குற்றவியல் மாஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்ததில், ராகுல் காந்தி குற்றவாளியென தீர்மானித்து, 02 ஆண்டு சிறை தண்டனை விதித்து மாஜிஸ்திரேட்டு எச்.எச்.வர்மா கடந்த மாதம் (23) தீர்ப்பு வழங்கியிருந்தார்.

எனினும், மேல்முறையீடு செய்ய ஏதுவாக ராகுலுக்கு விதித்த 02 ஆண்டு சிறை தண்டனையை ஒரு மாதத்துக்கு நிறுத்தி வைத்ததுடன், பிணை வழங்கியும் மாஜிஸ்திரேட்டு உத்தரவிட்டார். இந்த தீர்ப்பையடுத்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டது.

## 2023 இல் 21 அபிவிருத்தித்... 03ஆம் பக்கத் தொடர்

அத்துடன், இவ்வருட இறுதிக்குள் நுவரெலியா மற்றும் அறுகம்பேயின் அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானி மூலம் வெளியிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அதன் செயல்பாடுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. 2021-2022 இரண்டு ஆண்டுகளில், நகர அபிவிருத்தி அதிகார சபை வர்த்தமானி மூலம் 32 அபிவிருத்தி திட்டங்களை வெளியிட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் 09 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

## அறுவைச் சிகிச்சைகள்...

பரவுவதை துரிதமாக அகற்றி வழமை நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மீளத் திறப்பது தொடர்பில குறிப்பிட்ட திகதியை அறிவிக்க முடியாதெனவும் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில், அறுவை சிகிச்சை அறைக்குள் கிருமிகள் எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## MOP உரத்தின் விலையை ...

செய்யப்பகிறது. இந்தத் தொகை விவசாயிகளுக்கு சிரமமாக இருப்பதால், விலையைக் குறைக்கத் தீர்மானித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில், இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்கள் உள்ளன.இதனால்,சந்தையில் போட்டி உருவாகியுள்ளது. இதன்படி, யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் டி.எஸ்.பி (Triple Super Phosphate) மற்றும் எம்.ஓ.பி (Muriate of Potash) ஆகிய உரங்களின் விலை மேலும் குறையுமென, தனியார்துறை உர விற்பனையாளர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

## அரச விரோத செயற்பாடுகளை...

டலஸ் அழகப் பெரும, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, வசந்த யாப்ப பண்டார, உதயன கிரிந்திகொட, முன்னாள் நகர சபை உறுப்பினர் ஆனந்த சனத்குமார ஆகியோர் நேற்று (20) அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்து மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் இருவருக்கும் தெரிவிப்பதற்காக அவர்கள் அவ் விஹாரைகளுக்கு விஜயம் செய்தனர்.

மல்வத்த மகாநாயக்க தேரர் அதிவணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து விடயங்களை தெரிவித்த பின்னர் டலஸ் அழகப் பெரும உள்ளிடோர் அஸ்கிரிய விகாரைக்கு சென்று அதிவணக்கத்துக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.இவ்வேளையில் அஸ்கிரிய பிரிவின் அனுநாயக்கர் வணக்கத்துக்குரிய ஆனமடுவே தம்மதஸ்ஸி, ஆவணப்படுத்துனர் மெதகம தம்மாநந்த, சிரேஷ்ட செயற்குழு சங்க சபை உறுப்பினர் கொடகம மங்கள ஆகிய தேரர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

அங்கு கருத்து தெரிவித்த அஸ்கிரிய அனு நாயக்கர், இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் நாட்டுக்கு பாதிப்பு நிலைமை ஏற்படுமானால் அது தொடர்பாக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் விடயங்களை குறிப்பிட்டு மக்களை அறிவுறுத்துவது மக்களின் பிரதிநிதிகளின் பொறுப்பு என சுட்டிக்காட்டினார். ஒரு நாட்டின் ஜனநாயகத்தைப் போலவே பேச்சு சுதந்திரமும் கருத்து சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த வாதமும் இல்லை என்றும் சுதந்திரத்தை அதிகமாக அனுபவிப்பதால் சிக்கல் ஏற்படும் என்றால் அங்கு ஏதோ பிரச்சினை உள்ளதென அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் மூலம் கிடைக்கும் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதால் பல சிக்கல்கள் உருவாகி அரசு போன்று பொதுமக்களும் சிரமத்துக்குள்ளாவதால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதனை கட்டுப்படுத்த பல சட்டங்களை கொண்டு வர அரசாங்கத்துக்கு நேரிடுகிறதென தம்மதஸ்ஸிசி தேரர் தெரிவித்தார்.

இன்று எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அன்று அரசாங்கக் கட்சியிலிருக்கும் போது நாட்டின் தேவைக்காக பல சட்டங்களை கொண்டு வந்துள்ளதையும் அவர் இங்கு ஞாபகப்படுத்தினார். ஏதேனும் ஒரு சட்டத்தால் மக்களின் வாழ்க்கை சுதந்திரத்திற்கு, ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்படுமானால் அதற்கு எதிராக செயல்பட வேண்டும் எனவும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக மேலும் ஆராய்ந்ததன் பின்னர் அது தொடர்பாக உறுதியான கருத்தை தெரிவிப்பதே சிறந்ததென அனுநாயக்க தேரர் தெரிவித்தார்.

இந்த சட்டத்தில் குறைகள் காணப்பட்டால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அடிப்படைப் பொறுப்பு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவ செய்யும் உறுப்பினர்களுக்கே உள்ளதெனவும் மகா சங்க தேரர்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்ய முடியாது என்பதால் அது தொடர்பான கருத்துக்களை மாத்திரமே தெரிவிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக அதிகளவு பேசப்பட்டு வருவதால் மகா சங்கத்தினரிடம் ஆலோசனை நடத்த முன்வந்திருந்தாலும் சில சட்டங்கள் பாராளுமன்றத்தில் மகாசங்கத்தினரின் கருத்தைக் கேட்காமலேயே நிறைவேற்றப்பட்டுள்ளதாக தம்மதஸ்ஸி தேரர் தெரிவித்தார்.


Capital TRUST Research (Pvt) Ltd
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

Many investors are on the sidelines awaiting clarity on the debt restructuring...

Daily Market Watch
20th April 2023

Market Commentary

Stock market activity continued to remain relatively low with a turnover of only LKR 933.5 mn recorded during the day. Most stocks traded broadly unchanged, resulting in the All Share Price Index closing the trading session almost flat at 9279.19. After a couple of days of profit taking, Expolanka Holdings however recovered, rising by 2.41% during the session while Lanka IOC closed marginally higher, up 0.57%. Many investors are on the sidelines awaiting clarity on the debt restructuring for which many discussions are scheduled now onwards and investors are eagerly awaiting for the concluding announcement.


Market Performance

| | 20.04.2023 | 19.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,279.2 | 9,291.4 | -0.13 |
| S&P SL 20 Index | 2,718.2 | 2,710.4 | 0.29 |
| Turnover (LKR mn) | 933.5 | 632.7 | 47.5 |
| Foreign Purchases (LKR mn) | 247.1 | 41.7 | 492.7 |
| Foreign Sales (LKR mn) | 103.5 | 85.9 | 20.4 |
| Market Cap (LKR bn) | 3,955.1 | 3,958.9 | -0.1 |
| Market Cap (US$ bn) | 12.3 | 12.3 | -0.1 |
| Traded Companies | 234 | 239 | -2.1 |
| Market PER (x) | 5.1 | 5.1 | 0.0 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.0 | 4.0 | 0.3 |


Top Gainers and Loosers





Relative Strength Index (RSI)




Contributors to ASPI





Turnover Breakdown





Key Rates

| | 20.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.09% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.96% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

Market Benchmarks




Largest Trades




Corporate News

CASH DIVIDENDS

LB Finance PLC (LFIN) - LKR 2.00. XD date – 25.04.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு




*(அட்டாளைசேனை குறூப் நிருபர்)*

ஸ்ரீ லங்கா சுகந்திர கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு அட்டாளைச்சேனை லொய்ட்ஸ் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கட்சியின் அமைப்பாளர் ஐ.எல்.எம்.மிஜ்வாத் தலைமையில் நடைபெற்ற (17) இந்நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள், விவசாயிகள், அரச உத்தியோகஸ்தர்கள் குடும்பப்பெண்கள் உட்பட பலதரப்பட்டோர் கலந்துகொண்டனர்.

விசேட "இப்தார்" சொற்பொழிவை அக்கரைப்பற்று பட்டின ஜும் ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி ஏ எல்.முஹம்மத் ஐயூப் நடாத்தி வைத்தார்.

# சிவசேத்திரம் நடனப் பள்ளி நடத்தும் வருடாந்த நடன நிகழ்ச்சி நாளை லண்டனில்



சிவசேத்திரம் நடனப் பள்ளிநடத்தும் வருடாந்த நடன நிகழ்ச்சி லண்டன் நகரில் நாளை 22ஆம் திகதி மாலை 05 மணி முதல் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நடனப் பள்ளியின் பிரதமஆசிரியையான திருமதி. சசிகுமார் சிவாந்தினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அவரிடம் பயிற்சி பெற்ற மாணவிகள் தமது பரதநாட்டிய திறமையை வெளிப்படுத்தவுள்ளனர்.

திருமதி சிவாந்தினி இதற்கு முன்னரும் இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திய அனுபவம் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜாதிக லொத்தறய் மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — புதன்கிழமை 2023.04.19 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5091 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 5 1 4 3 |

| தன நிதானய | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1121 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 86,642,837.20 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 07 34 38 69 |


| கொவிசெத (Govisetha) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3333 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 97,166,683.04 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 05 23 34 71 |

| மெகா பவர் | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1439 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 315,360,734.00 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 59 61 62 72 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |

| ராசி சுப பலன் (Handahana) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 400 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,500,000.00 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 10 33 57 |
| விசேட இலக்கினம் | மீனம் |

| ஜாதிக சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1546 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ.12,321,101.60 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 1 3 9 9 |



# ஜூனில் ஆப்கான் அணி இலங்கை வருகை



மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்காக ஆப்கானிஸ்தான் அணி எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த சுற்றுப்பயணத்தில் ஆப்கான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே ஜூன் 2, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் மூன்று ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. எனினும் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் பற்றிய விபரம் பின்னர் வெளியிடப்படவுள்ளது.

இலங்கை அணி உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் ஆடுவதற்காக வரும் ஜூன் நடுப்பகுதியில் சிம்பாப்வே பயணிக்கவுள்ள நிலையில் அந்தப் போட்டிகளுக்கு முன்னரே இந்தத் தொடரை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்தத் தொடர் பற்றி இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்காதபோதும், தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒளி, ஒலிபரப்பு உரிமையை பெற்றுக்கொள்வதற்கு விருப்பத்தை வெளியிடும் நிறுவனங்களுக்கு அதற்கான விண்ணப்பத்தை இலங்கை கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி கடைசியாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது. அதில் மூன்று ஒருநாள் போட்டிகள் இடம்பெற்றபோது தொடர் 1–1 என சமநிலை பெற்றது.



அட்டாளைச்சேனை பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு மற்றும் அலுவலக திறப்பு விழா அண்மையில் கழகத்தின் தலைவர் பி.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.
(படம்: அஷ்ரப் ஏ சமத்)



உடப்பு கிரிக்கெட் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய வளர்மதி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரிப்பதை படத்தில் காணலாம். இதன்போது உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் இரா.கலைச்செல்வன், உடப்பு பொலிஸ் அதிகாரி யூ. கேதுஜன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.
(படம்: உடப்பு குறூப் நிருபர்)

## இலங்கை அணியில் மாற்றமில்லை



அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முதல் டெஸ்டில் ஆடிய அதே 15 பேர் கொண்ட இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலியில் மூன்று நாட்களுக்குள் நிறைவடைந்த முதல் டெஸ்டில் இலங்கை, இன்னிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்களால் வெற்றியீட்டி டெஸ்ட் வரலாற்றில் தனது மிகப்பெரிய வெற்றியை பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியில் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், தினேஷ் சந்திமால் மற்றும் சதீர சமரவிக்ரம ஆகியோர் சதம் பெற்றிருந்தனர். பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் சோபித்தனர்.

இந்த டெஸ்ட் தொடரில் 1–0 என இலங்கை முன்னிலை பெற்றிருக்கும் நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி அதே காலி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை குழாம்: திமுத் கருணாரத்ன (தலைவர்), குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிஷான் மதுஷ்க, சதீர சமரவிக்ரம (வி.கா.), ரமேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, துஷான் ஹேமன்த, லசித் எம்புல்தெனிய, அசித்த பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, மிலான் ரத்னாயக்க.

## இலங்கை ரக்பியை மேம்படுத்த ஆசிய ரக்பி தலைவர் உறுதி



இலங்கை ரக்பியின் மேம்பாட்டுக்காக எப்போதும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு விரும்புவதாக ஆசிய ரக்பி நிறுவனத் தலைவர் கைஸ் அல் தலாய், விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ரக்பி விளையாட்டின் மேம்பாட்டுக்காக நியமிக்கப்பட்ட நிலைக்குழு தொடர்பில் விளக்குவதற்கு அமைச்சர் ரொஷான் ரணசிங்க, டுபாயில் உள்ள ஆசிய ரக்பி தலைமையத்தில் அதன் தலைவர் கைஸ் அல் தலாயை கடந்த புதன்கிழமை (19) சந்தித்தார்.

இலங்கை ரக்பி சம்மேளனம் கடந்த பல ஆண்டுகளாக விளையாட்டின் மேம்பாட்டுக்காக செயற்படாதது, இலங்கை அடிப்படைச் சட்டத்தை மீறியது போன்ற பல செயற்பாடுகள் காரணமாக விளையாட்டுச் சட்டத்தில் உள்ள பிரிவுகளுக்கு அமைய விளையாட்டு அமைச்சு தலையிடுவதைத் தவிர வேறு மாற்றுத் தீர்வு இருக்கவில்லை என்று ரொஷான் ரணசிங்க, தலாயிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்திற்குள் சரியான நடைமுறை ஊடாக சம்மேளத்தின் தேர்தலை நடத்தி ரக்பி விளையாட்டை முறையான நிர்வாகத்தின் ஊடாக சிறந்த பிரதிபலனை பெற செயற்படுவதாகவும் இதன்போது விளையாட்டுத் துறை அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இலங்கை ரக்பி மீதான தடையை நீக்கியதற்காக விளையாட்டுத் துறை அமைச்சர் ஆசிய ரக்பிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசியாவில் தொடரும் சுட்டெரிக்கும் வெப்பம்



தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் முன்னர் காணாத கடுமையான வெப்பத்தால் அவதிப்பட்டு வருகின்றனர்.

பங்களாதேஷில் கடந்த வாரம் 60 ஆண்டுகளில் இல்லாத கடும் வெப்பநிலை பதிவாகி இருப்பதோடு, வெப்பம் தாக்கி இந்தியாவில் குறைந்தது 13 பேரும் தாய்லாந்தில் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

புவி வெப்பமடைதல் மோசமான காலநிலையை அதிகரிக்கிறது என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். “புவி வெப்பமடைதலின் ஒவ்வொரு அதிகரிப்பும் பல மற்றும் ஒரே நேரத்தில் ஏற்படும் அபாயங்களை தீவிரப்படுத்தும்” என்று காலநிலை மாற்றம் குறித்த ஐ.நாவின் அரசுகளுக்கிடையேயான குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் எச்சரித்திருந்தது.

உலக வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க நிலைமை தீவிரமாகும் என்று அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஏழை எளியோர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். அவர்களுக்குப் போதுமான இடவசதியும், குளிர் சாதன வசதிகளும் இருப்பதில்லை.

பங்களாதேஷில் 1960களின் பின்னர் அதிகபட்சமாக 40.6 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவான நிலையில் தலைநகர் டாக்காவில் மழை தேடி இடம்பெற்ற தொழுகையில் நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டனர்.

அண்டை நாடான இந்தியாவிலும் வெப்பநிலை அதிகரித்திருக்கும் சூழலில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் வழக்கத்தை விடவும் மூன்று தொடக்கம் நான்கு பாகை வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் மேற்கு மாகாணமான டாக்கில் வெப்பநிலை 44.6 பாகை செல்சியஸ் வரை உச்சம் பெற்றிருக்கும் நிலையில், இந்த சுட்டெரிக்கும் வெப்பம் அடுத்த வாரத்திலும் தொடரும் என்று அந்நாட்டு வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் செஜியாங் மாநிலத்தில் இந்த வாரம் வெப்பநிலை 38 பாகை செல்சியஸைத் தாண்டியது. ஜப்பானில் வெப்பநிலை 30 பாகை செல்சியஸுக்கு மேல் உயர்ந்துள்ளது. கசகஸ்தானின் டராஸ் நகரில் 33.6 பாகை செல்சியஸ் உட்பட மத்திய ஆசியாவிலும் இந்த மாதம் அசாதாரணமாக வெப்பநிலை அதிகரித்துள்ளது.

“தாய்லாந்து, சீனா மற்றும் தெற்காசியாவில் இந்த ஆண்டின் சாதனை அளவான வெப்பநிலை காலநிலை போக்கை தெளிவாகக் காண்பிப்பதாக இருப்பதோடு எதிர்வரும் ஆண்டுகளில் அது பொது சுகாதார சவால்களுக்குக் காரணமாக இருக்கும்” என்று காலநிலை பகுப்பாய்வுக்கான காலநிலை கொள்கை நிறுவன பிராந்திய முன்னணியைச் சேர்ந்த விஞ்ஞானி பஹத் சயீத் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# யெமனில் தொண்டு விநியோகத்தில் கூட்ட நெரிசல்: 85 பேர் உயிரிழப்பு



யெமனில் ரமழான் மாத தொண்டு நிகழ்ச்சி ஒன்றின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குறைந்தது 85 பேர் உயிரிழந்திருப்பதோடு 300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் சானாவில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே கடந்த புதன்கிழமை (19) இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. ஒருவருக்கு தலா 9 டொலர் வரை வழங்கப்பட்ட நன்கொடையை பெறுவதற்கு அந்தப் பாடசாலையில் பெருமளவு மக்கள் திரண்டதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

2015 ஆம் ஆண்டு யெமன் அரசு தலைநகரில் இருந்து துரத்தப்பட்டது தொடக்கம் அந்த நகர் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்தத் தொண்டு விநியோகத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு இன்றி நிதிகள் சீரற்ற முறையில் விநியோகிக்கப்பட்டதே நெரிசலுக்குக் காரணம் என்று அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதில் பெரும் எண்ணிக்கையானவர்கள் காயமடைந்திருக்கும் நிலையில் 13 பேர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக சானாவிலுள்ள சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

“உயிரிழந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் உள்ளனர்” என்று ஹூத்தி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். கூட்டத்தை கட்டுப்படுத்த ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் வானத்தை நோக்கி சுட்டபோது, மின்சார கம்பியில் பட்டு வெடித்ததால் மக்களிடையே பீதி ஏற்பட்டு நெரிசலுக்கு காரணமானது, என்று பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் ஒருவர் மேல் ஒருவர் ஏறி வெளியேற முயன்றதில் சடலங்கள் கொத்தாக குவிந்து காணப்படும் காட்சியை அந்நாட்டு தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

யெமனில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டு யுத்தம் நீடித்து வருகிறது. அங்கு உலகின் மிக மோசமான மனிதாபிமான அவலம் நீடித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

யெமன் மக்கள் தொகையில் முக்கால் பங்கினரான 23 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தவறான காரில் நுழைந்த இரு பெண்கள் மீது சூடு




அமெரிக்காவின் டெக்சஸ் நகரில் உள்ள கார் நிறுத்துமிடத்தில் தவறான காருக்குள் நுழைந்த இரண்டு பெண்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனர்.

இரு பெண்களும் விளையாட்டின்போது ரசிகர்களை உற்சாகப்படுத்தும் குழுவின் உறுப்பினர்களாவர். அதில் ஒருவருக்கு மோசமான காயம் ஏற்பட்டது.

கார் நிறுத்துமிடத்தில் இருவரும் பயிற்சி செய்துகொண்டிருந்தனர். பின்னிரவில் தங்கள் காரை நோக்கி அவர்கள் திரும்பினர்.

நண்பரின் கார் என்று நினைத்துக் கதவைத் திறந்தபோது அதில் இருந்த ஆடவர் சூடு நடத்தியுள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகத்தில் 25 வயது பெட்ரோ தெல்லோ ரொட்ரிகெஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக அமெரிக்காவில் இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன.

## 67 மில்லியன் பிள்ளைகளுக்கு வழக்கமான தடுப்பூசி இல்லை



2019, 2021ஆம் ஆண்டுகளுக்கு இடையே சுமார் 67 மில்லியன் பிள்ளைகளுக்கு வழக்கமான தடுப்பூசிகள் போடப்படவில்லை என்று ஐக்கிய நாடு சபை கூறியுள்ளது.

கொவிட்–19 நோய்ப்பரவலால் அந்தக் காலக்கட்டத்தில் பல இடங்கள் முடக்கநிலையில் இருந்தன. அது சுகாதாரப் பராமரிப்புக் கட்டமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக பிள்ளைகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடப்பட்டதால் விளைந்த நன்மைகள் படிப்படியாக வீணாகிவிட்டதாய் ஐ.நா கவலை வெளியிட்டுள்ளது.

மீண்டும் அதை ஒரு நல்ல சூழலுக்குக் கொண்டுவருவது சவாலாக இருக்கப்போவதாகவும் அது கூறியது.



# நோன்புப் பெருநாள் சிறப்பு மலர்



# ஈதுல் பித்ர்- நோன்புப் பெருநாள்; ஒழுங்கு விதிமுறைகள்

முஸ்லிம்களுக்கு இரண்டு பெருநாட்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஈதுல் பித்ர் என்ற ஈகைத்திருநாள். மற்றையது ஈதுல் அழ்ஹா என்ற தியாகத் திருநாள். இவை இஸ்லாத்தின் கிரியைகளாகும். இவற்றின் நோக்கங்களை அறிந்துணர்ந்து இவற்றை உயிர்ப்பிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு சென்றபோது அங்கிருந்தவர்கள் இரு தினங்களை பெருநாட்களாகக் கொண்டாடிக்கொண்டிருந்தனர். அப்போது நபியவர்கள் 'உங்களது இரு பெருநாள் தினங்களிலும் நீங்கள் விளையாடுகின்றீர்கள். அல்லாஹ் உங்களுக்கு இதனை விட சிறப்பான இரு தினங்களை பெருநாளாக தந்துள்ளான். அவைதான் ஈதுல் பித்ரும் (நோன்புப் பெருநாள்) ஈதுல் அழ்ஹாவுமாகும் (ஹஜ் பெருநாள்)' என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத், நஸாஇ)

அந்த வகையில் பெருநாள் தினத்தில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகளை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு வரையறுத்து அறிவித்துள்ளார்கள்.

1. பெருநாள் தினங்களில் நோன்பு நோற்பது தடுக்கப்பட்டுள்ளது. (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)
2. ஆண்கள், பெண்கள் அனைவரும் பெருநாள் தொழுகையை நிறைவேற்ற செல்வது சுன்னத்.

'குமரிப் பெண்கள், ஹைழுடன் இருக்கும் பெண்கள், தன்னை மறைத்துக்கொள்ளும் கன்னியான அடிமைப் பெண்கள் அனைவரும் பெருநாள் தினத்தில் தொழுகைக்காக வெளியேறிச் செல்லுமாறும் மாதவிடாயுள்ள பெண்கள் தொழுகையைத் தவிர்க்குமாறும் நல்ல விடயங்களில் கலந்துகொள்ளுமாறும் முஸ்லிம்களுக்காக துஆ செய்யுமாறும் நபியவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

3. 'நபி (ஸல்) அவர்கள் பெருநாள் பிரசங்கத்துக்கு முன்பதாக தொழுகை நடத்தினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)
4. தொழுகையின்போது முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும் இரண்டாவது ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் சொல்வது சுன்னத்.

இக்கருத்தை உமர், உஸ்மான், அலி, அபூ ஹுரைரா, இப்னு அப்பாஸ், அபூ ஸஈத் அல் குத்ரி, அபூ ஐயூப் அல் அன்சாரி, ஸைத் இப்னு ஸாபித் (ரலியல்லாஹு அன்ஹும்) போன்ற ஸஹாபாக்களின் அறிவிப்புகளில் காணலாம்.

முதல் ரக்அத்தில் நான்கு தக்பீர்களும் இரண்டாவது ரக்அத்தில் நான்கு தக்பீர்களும் கட்டும் இன்னொரு வடிவத்தை அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது ஹனபி மத்ஹபின் வழிமுறையாகும்

5. பெருநாள் தொழுகையின் முதல் ரக்அத்தில் சூறா 'காப்'வும் இரண்டாம் ரக்அத்தில் சூறா கமரும் ஓதுவது சுன்னத்.

நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகையில் முதல் ரக்அத்தில் சூறா காபையும் இரண்டாம் ரக்அத்தில் சூறா கமரையும் ஓதினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

மற்றொரு அறிவிப்பின்படி முதல் ரக்அத்தில் 'சூரத்துல் அஃலா'வையும் இரண்டாவது ரக்அத்தில் 'சூரத்துல் காஷியா'வையும் ஓதினார்கள் (ஆதாரம்: முஸ்லிம்) என்றும் வந்துள்ளது.

6. பெருநாள் தொழுகைக்கு முன்னரோ பின்னரோ எதுவித சுன்னத்தான தொழுகையும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும். அத்தோடு நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகையை நேர காலத்துடன் தொழுதுமுள்ளார்கள்.



நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைக்காக வெளியேறிச் சென்று இரண்டு ரக்அத்களை தொழுவார்கள். அதற்கு முன்னரோ பின்னரோ தொழ மாட்டார்கள் (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம், திர்மிதி, அபூ தாவூத், நஸாஇ, இப்னு மாஜா)

அதேநேரம் பெருநாளுக்கென சில ஒழுங்கு முறைகள் (ஆதாப்) காணப்படுகின்றன. அதாவது,

1. தொழுகைக்கு செல்லமுன் குளித்துக்கொள்ளுதல்.

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் நோன்புப் பெருநாள் தொழுகைக்காக வெளியேறிச்செல்ல முன்னர் குளித்துக்கொள்பவராக இருந்தார்கள்.

(ஆதாரம்: முவத்தா)

'பெருநாளின் சுன்னத்துகள் மூன்றாகும். நடந்து செல்வது, குளிப்பது, தொழுகைக்காக புறப்பட முன்னர் சாப்பிடுவது' என்று ஸஈத் இப்னு ஜுபைர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பெருநாள் தினத்துக்காக குளித்து சுத்தமாக்கிக்கொள்வது சுன்னத்தான ஒரு விடயம் என்பது அறிஞர்களின் ஏகோபித்த (இஜ்மா) முடிவாகுமென இமாம் நவவி (ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள்.

2. நோன்புப் பெருநாளின்போது எதையாவது சாப்பிட்டுவிட்டு தொழுகைக்காக செல்லுதல்.

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் தினத்தில் பேரீத்தம் பழங்களை சாப்பிடாது தொழுகைக்காக வெளியேறி செல்ல மாட்டார்கள். (ஆதாரம்: புஹாரி)

3. பெருநாள் தினத்தில் தக்பீர் (அல்லாஹ் பெரியவன்) என்று முழங்குதல்.

இப்னு உமர் (ரழி) அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறி தொழுமிடத்துக்கு செல்லும்வரை தக்பீர் முழங்கினார்கள். (ஆதாரம்: பைஹகி, இப்னு அபீ ஷைபா)

நாபிஃ இப்னு ஜுபைர் (ரழி) அவர்கள் இவ்வாறு தக்பீர் சொல்லக்கூடியவர்களாக இருந்தார்கள். தக்பீர் சொல்லாதவர்களை பார்த்து ஆச்சரியப்பட்டு 'தக்பீர் சொல்வதில்லையா?' என்று கேட்டார்கள்.

(ஆதாரம்: இப்னு அபீ ஷைபா)

இதுபற்றி இமாம் ஸுஹ்ரி குறிப்பிடும்போது 'வீட்டிலிருந்து வெளியேறியது முதல் மக்கள் தக்பீர் சொல்லக்கூடியவர்களாக இருந்தார்கள். இமாம் தொழுகை நடத்துவதற்காக வெளியேறிவிட்டால் தக்பீரை நிறுத்திக்கொள்வார்கள். (ஆதாரம்: இப்னு அபீ ஷைபா)

4. வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்ளுதல்.

'அருள் நிறைந்த பெருநாளாக இருக்கட்டும்', 'அல்லாஹ் என்னையும் உங்களையும் ஏற்றுக்கொள்ளட்டும்' போன்ற வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்ள முடியும். மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களின்போது ஸஹாபாக்கள் பரஸ்பரம் வாழ்த்துக்களை பரிமாறியிருக்கிறார்கள். இது ஒரு சிறந்த பண்பாடும்தான்.

பெருநாள் தினத்தில் ஸஹாபாக்கள் சந்தித்துக்கொண்டால் 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்க' என்று குறிப்பிடுவார்கள். (ஆதாரம்: பத்ஹுல் பாரி) இமாம் அல்பானி (ரஹ்) அவர்களும் இந்த ஹதீஸ் ஸஹீஹானது என்கிறார்கள்.

5. சிறந்த ஆடைகளால் அழகுபடுத்திக்கொள்ளுதல்

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஆடை காணப்பட்டது. அதனை அவர்கள் பெருநாள் தினங்களிலும், ஜும்ஆ தினத்திலும் அணிவார்கள். (ஆதாரம்: இப்னு ஹுஸைமா, பைஹகி)

நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் சிறந்த ஆடைகளை அணிவார்கள். (ஆதாரம்: பைஹகி)

6. உறவுகளை புதுப்பித்துக்கொள்ளுதல்.

நபிகள் (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுவதற்காக ஒரு பாதையால் சென்று வேறு பாதையால் திரும்பி வந்துள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இது பெருநாள் தொழுகையுடன் தொடர்பான ஒரு சுன்னத். பலரை சந்தித்து உறவுகளை புதுப்பித்து பலப்படுத்தும் நோக்கிலும் நபியவர்கள் இப்படி செய்திருக்கலாம்.

எனவே பெருநாளின் சட்டதிட்டங்களை அறிந்து அதன் ஒழுங்குகளை பேணியபடி அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் அமைய ஈகைத் திருநாளை மகிழ்ச்சிகரமாக அமைத்துக்கொள்வோம்.

அஷ் ஷெய்க் **யூ.கே. றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

## நோன்பப் பெருநாள்

பசித்திருந்து பலன்பெற்றோம் பெருநா ளென்று.
பாக்கியமே பாக்கியமே பாக்கியந்தான்.
புசிக்காத தொன்றுமட்டும் இல்லை இன்னும்
பவமொன்றுஞ் செய்யாதே மனத்தைக் காத்தோம்
நிசியுறக்கந் தவிர்த்தெழுந்து நிலையில்நின்று
நித்தியனைத் தொழுதிறைஞ்சி பாவந் தீர்க்கக்
கசிந்துருகிப் பிரார்த்தித்தோம் தலைவா எம்மைக்
கொடுநரகந் தவிர்த்துச்சுவன் தருவா யென்றே!

------

இரப்பவர்க்கு இல்லையென்னா(து) அருளும் வல்லோன்
ஏந்துகரம் விடுவதில்லை வெறுமையாக
சுரந்துகொண்டே இருக்குமவன் அருட்சுனையின்
செல்வத்தை அள்ளியள்ளிக் கொட்டிச் சேர்ப்பான்
பரிந்துரைகள் வேண்டாங்காண் பண்ண வன்பால்
பரிசுபெறப் படைத்தெம்மைக் காக்கும் வல்லோன்
சிரம்பணியும் அனைவருக்கும் ஒன்றேபோல
தனதருளைப் பொழிவானோர் ஐயம் இல்லை!

------

தக்பீரின் முழக்கமெல்லாப் பள்ளி தோறும்
செவியினிக்கப் பேரொலிக்கும் பெருநாட் காலம்
திக்கெல்லாம் காற்றள்ளிச் செல்லும் மக்கள்
செய்தபாவம் அழிந்தமனத் திருப்தி கொள்வார்
சொர்க்கத்தின் வாடைநெஞ்சுள் மணக்கும் வல்லோன்
தருவனெனச் செப்பியதால் தீனோர் தீனின்
பக்கலினி நாமென்னும் ஓர்மை கொள்வார்
பற்றியநற் கருமங்கள் தொடரு வாரே!

**ஜின்னாஹ்**

## துன்பறும் சோதரர் துயர் துடைப்போம்..!

வறுமையின் சிரமத் தாலே
வாழ்க்கையில் துன்புற் றோர்க்குப்
பொறுமையோ டுதவி நல்கிப்
புண்ணியந் தேடு வீரே
வறுமையின் சிரமம் போக்கி
மகிழ்ந் தருள் புரிவான் அல்லாஹ்
திருநிறை வாழ்வ ளித்துச்
சிறப்புறும் சொர்க்கம் சேர்ப்பான்
கடன் பெற்று வாழ்வோர் அந்தக்
கடன்களை கொடுப்ப தற்கு
வழியில்லா நிலையில் உங்கள்
வலக்கரம் நீள வேண்டும்
திடமுடன் உங்கள் வாழ்வைச்
சீர் செய்வான் கருணை யாளன்
திருநபி மொழிந்தார் இந்தத்
தேன்மொழி அறிந்து கொள்வீர்
முஸ்லிமாம் ஒருவ ருக்கு
முஸ்லிமே சோதரர் காண்
சோதரர் குறைகள் தம்மை
மறைத்திடல் கடமை கண்டீர்
குறைகளை மறைப்ப தாலே
குவலயம் வாழும் உங்கள்
குறைகளை மறுமை நாளில்
மறைப்பவன் அல்லாஹ் என்பேன்
நல்லதும் சோதரர்க்கு
நலம் செய்யும் கால மெல்லாம்
வல்லவன் அருள் சுரப்பான்
வாழ்விலே இன்பம் சேரும்
கல்வியை நாடி நீவீர்
கடினமாம் பாதை சென்றால்
அல்லாஹ்வும் சொர்க்கப் பாதை
அமைக்கிறான் என்றார் அண்ணல்
"பள்ளியில் அமர்ந் திருந்து
பரிசுத்த குர்ஆன் தன்னை
நல்விதம் ஓது வோர்க்கும்
கற்பவர் கற்பிப்போர்க்கும்
அல்லாவின் ரஹ்மத் என்னும்
அருள் மழை பொழியும் வானோர்
நல்லடியாரைச் சூழ்ந்து
வாழ்த்துவர்" என்றார் அண்ணல்

**சுஜப் எம். காசிம்**

## இறை இன்பம் பொங்கிப் பெருகும் பெரு நாள்

அருள்மிகு ரமழானே! சிறப்புமிகு ரமழான்! எப்
பன்னிரண்டி மாதங்களிலும் முதன்மைபெறும் ரமழான்காண்
உள்ளத்திலே இருளை அகற்றிடுமோர்
சுவர்க்க வாசலின் பூங்கனியின் நறுமணம்
கமழும் முப்பது நாட்களிலுமே
பாவக் கறையை போக்கிடும் பேரொளி
பரப்பி வந்த புனிதமே! எங்கள்
நபி நாயகம் தந்த அருள் மிகு ரமழானே !

ஏழையின் வெற்றுக் குடலை என்னவென்று
உலகறியச் செய்த இரக்கமிக்க நபிநாதரின்
சிந்தனைத் தெளிவைக் கற்றுத் தேறிடும்
செல்வந்தரெலாம் சமத்துவம் பேசிடும் காலமோ?
ஏழைவரி கட்டாயம் கடமைதனை யாக்கியே
கொடுத்துதவி செய்திடும் பொற்காலமோ!
ஏழைகள் முத்துக் குளிக்கும் அமிழ்தமோ
சமத்துவம் வீறு பெறும் இன்ப மாதமோ!

முப்பது நாளும் நோன் பிருந்து
இரவு பகல் தொழுகை தவறாமல்
மனமுருகி இரந்து கேட்கும் பிரார்த்தனைகளால்
நெஞ்சம் குளிரச் சுத்தம் செய்து
பாவக் கறைகளைக் கழுவிச் செல்லும்
அருள் மழை பெய்து ஓய்ந்திடும் திருநாளாம்
இன்பம் பொங்கிடும் இனிய பெருநாளாம்
சங்கை மிகு மாத்தின் தீபத் திருநாளாம்.

அருள் மிகு ரமழானே! புனித ரமழானே! இப்
புண்ணிய மாதத்தினுள் புதுமைகள் படைத்திட்டாயே
ஆற்றல் கொண்ட இறையோனின் நல்
அருளை பெற்றுக் கொண்ட வரெல்லோரும்
பயிற்சியை கொண்டாடும் இனிய பெருநாளாம்
அண்ணல் நபியின் வழி நின்று இறை
இன்பம் நெஞ்சில் நிறைந்து நிலைத்திடும்
போற்றிப் புகழ்ந்திடும் பெரு நாளாம்.

**இக்பால் அலி**

## பெருநாள் தின நல்லமல்கள்







இஸ்லாம் நன்மைகளை கொள்ளையடித்துக் கொள்ள நல்ல சந்தர்ப்பமாகவே இரு பெருநாட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. திக்ர் செய்தல், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தல், தர்மங்கள் செய்தல், நல்வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ளல், இனபந்துக்களை சேர்ந்து நடத்தல், நோயாளிகளைத் தரிசித்தல், அண்டை வீட்டாரை அரவணைத்தல், பெற்றோரை மனங்குளிர வைத்தல், நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுத்தல் போன்ற இன்னோரன்ன நற்காரியங்களில் ஈடுபட்டு சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் அந்நாளை கழிக்கவே இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

புனிதமிகு ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றுகளைப்புற்ற மனிதர்களை மகிழ்வித்து அவர்களது உள்ளங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இறைவனுக்கு நன்றி செலுத்தும் தினமாகவே நோன்பு பெருநாளை இறைவன் ஆக்கியுள்ளான்.

ஷவ்வால் மாதத் தலைப்பிறையைக் கண்டதும் ஸகாத்துல் பித்ர் எனும் கொடையை வழங்குவது வசதிப் படைத்தவர்கள் மீது கடமையாகும். பெருநாள் தினத் தேவைக்கு மேலதிகமாகக் கொண்டிருப்பவர்கள் இக்கடமையை நிறைவேற்றுவது அவசியம்.

இதனைப் பெருநாள் தொழுகையை நிறைவேற்ற முன் கொடுப்பது கட்டாயமாகும். ஷவ்வால் மாத இளம் பிறை தோற்றமளித்த கணம், அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு செலுத்தும் நன்றி உணர்வின் வெளிப்பாடாக அமையும். உங்கள் பெருநாளை தக்பீரைக் கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நோன்புப் பெருநாளைப் பொருத்தமட்டில் பிறை கண்டது முதல் அடுத்த நாள் காலை பெருநாள் தொழுகைக்காக தக்பீர் கட்டும் வரை தக்பீர் மொழிவது சுன்னத் என்ற கருத்தை இமாம்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பெருநாள் தொழுகை வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னா முஅக்கதா. பெருநாள் தொழுகையைப் போன்று குத்பாவைக் கேட்பதும் ஸுன்னா முஅக்கதாவாகும். பெருநாள் தினத்தன்று இன பந்துக்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் போன்றவர்களை சந்தித்து முஸாபஹா செய்து உறவுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அத் தினங்களில் அதிகமாக துஆவில் ஈடுபட வேண்டும். நாட்டின் சுபீட்சத்துக்கும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் நீங்கவும், இன ஒற்றுமைக்காகவும், அதிகமாக துஆ கேட்க வேண்டும். விசேடமாக எம்மை விட்டு பிரிந்து இன்று மண்ணறைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், உலமாக்கள், எமக்கு கல்வியூட்டிய ஆசான்கள், உஸ்தாத்மார்கள் அனைவரினதும் கப்ருகளை தர்சித்து அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்வது சாலச் சிறந்ததாகும்.

ஒவ்வொரு பெருநாளும் ஓர் அமைதி நாளாகும். இறைவனின் வழிகாட்டலில் வாழ்வதன் மூலம் ஒரு முஸ்லிம் தன் இதயத்தில் அமைதியை நிலை நாட்டுகின்றார். இதன் மூலம் இறைவனுடன் ஓர் அழிக்க முடியாத அமைதி உடன்படிக்கையை செய்து கொள்கிறார். பெருநாள் என்பது நன்றி செலுத்தும் நாள், மன்னிப்பு நாள், வெற்றியின் விழா நாள், நன்மையை அறுவடை செய்யும் நாள், சாதனைகள் நிறைவடைந்த நிறைவு நாள், நல்லோர்களையும், நண்பர்களையும், உறவினர்களையும் நினைவு கூறும் நாள் இவற்றிற்கெல்லாம் மேலாக அது இஸ்லாத்தின் நாள், இறைவனின் நாள் இந் நாளிலே நல்லமல்கள் புரிந்து இறைவனுக்கு முழுமையாக அடிபணிந்து வாழ்வோம்.

மௌலவி **எம்.யூ.எம்.வாலிஹ்...**
(அல் அஸ்ஹரி, பாரி)



# நோன்புப் பெருநாள் சிறப்பு மலர்



# ரமழான் தந்த சகோதரத்துவமும் சகவாழ்வும் தொடரட்டும் !

உலக மக்களின் வழிகாட்டியாக அல்குர்ஆன் இறக்கப்பட்ட ரமழான் மாதத்தை நோன்பு வைத்துக் கொண்டாடிய தினங்கள் முடிவுக்கு வருகின்றன. முஃமின்களைப் பொறுத்தவரை முழு ரமழானுமே பெருநாள் தினங்கள் தான். நோன்பாளிக்கு இரண்டு சந்தோஷங்கள் உள்ளன. நோன்பு துறக்கும் வேளையில் அவனடையும் சந்தோஷம் ஒன்று. அவன் நோற்ற நோன்பின் காரணமாக அல்லாஹ்வைச் சந்திக்கக் கிடைப்பது இன்னொன்று என நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

ரமழானை நல்ல முறையில் பயன்படுத்தி தம்மை தக்வா உள்ளவர்களாக மாற்றிக் கொண்டு ஏனைய காலங்களிலும் தக்வாவுடன் செயற்படுபவர்களுக்கு அல்லாஹ்வைச் சந்திக்கும் பாக்கியம் எஞ்சியிருக்கிறது என்பதுவே இந்தப் பெருநாள் தரும் சுபசோபனமாகும்.

ரமழானில் மட்டுமே கிடைத்த நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வுகள் ஒரு நோன்பாளியை நோன்பு துறக்கச் செய்வதனால் அவரது நோன்புக்கான கூலி அனைத்தையும் பெற்றுக் கொள்வதைத் தாண்டி பல நன்மைகளை சமூகத்துக்குப் பெற்றுத் தந்திருக்கிறது. உறவுகளைப் புதுப்பிக்கவும் பலப்படுத்தவும் இந்த இப்தார் நிகழ்வுகள் உதவியிருக்கின்றன. தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் எனப் பலரையும் இணைக்கும் இடமாக இப்தார் நிகழ்வுகள் அமைந்திருந்தன. தமக்கிடையே நிலவிய வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து ஒரே உம்மத் என்ற வகையில் இந்த இப்தார் நிகழ்வுகள் அமைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. உலகம் முழுவதும் நடக்கின்ற இந்தச் செயற்பாடுகள் உலகளாவிய சகோதரத்துவத்தை வலியுறுத்துவதாக அமைகிறது.

இஸ்லாம் சொல்லுகின்ற சகோதரத்துவம் மகத்தானது. இதன் உயர்ந்த நிலையை மக்காவாசிகளை மதீனாவாசிகளின் சகோதரர்களாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மாற்றியமைத்ததை சொல்ல முடியும். ரமழானுடைய காலத்தில் துன்பப்படுபவர்களுக்கு உதவிக் கரம் நீட்டும் நல்ல பண்புள்ளவர்களாக முஸ்லிம்கள் காணப்பட்டார்கள். நோன்பு துறப்பதற்கான கஞ்சி விநியோகிப்பது, தேவையானவர்களுக்கு உலர் உணவுகள் வழங்குவது, பித்ரா வழங்கி பெருநாள் கொண்டாட உதவுவது என பல வகையிலும் அடுத்த சகோதரனுடன் பரிமாறிக் கொள்ளும் நல்லமலை ரமழானில் பலரும் முன்னின்று செய்தார்கள். நெருக்கடி மிகுந்த காலப்பிரிவில் தமது சகோதரர்களின் துன்பத்தில் பங்கு கொண்ட இந்தப் பண்பு ரமழானுக்குப் பின்னரும் தொடர வேண்டும். ஏனெனில் இஸ்லாம் சொல்லுகின்ற சகோதரத்துவம் ரமழானுடன் முடிந்து விடுவதல்ல.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சொன்னதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அறிவிக்கிறார்கள், ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவருக்கு அநீதியிழைக்கவும் மாட்டார். அவரை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) விட்டுவிடவும் மாட்டார். எவர் தம் சகோதரரின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கிறாரோ அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகிறாரோ அவரைவிட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒன்றை நீக்குகிறான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கிறாரோ அவருடைய குறைகளை மறுமைநாளில் அல்லாஹ்வும் மறைக்கிறான். (ஆதாரம்: புஹாரி)

அண்டை வீட்டாருடனான உறவு தொடர்பில் மிக இறுக்கமான கொள்கையை கடைப்பிடிக்கும் மார்க்கம் இஸ்லாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டிருப்பவர் தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தரவேண்டாம். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஆதாரம்: புஹாரி). அண்டை வீட்டார் என்ற பதம் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் என்று வேறுபடுத்தப்பட்டு இல்லை. இம்முறை கொண்டாடப்படும் நோன்புப் பெருநாளில் அண்டை வீட்டார் மீது அதிக கவனம் செலுத்துவதற்கு முஸ்லிம் சமூகம் கடமைப்பட்டிருக்கிறது. அண்டை வீட்டாருக்கான வரையறை தொடர்பில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் கூற்றே பலமானதாகக் கருதப்படுகிறது. அவரது கூற்றின்படி, தன்னைச் சூழவுள்ள நாற்பது வீடுகள் அண்டை வீட்டாருக்குள் அடங்குகின்றன.

அடுத்ததாக, உள்ளத்தால் நெருக்கமானவர்கள் எனும் 'முஅல்லபதுல் குலூப்' என்ற வகையிலும் அவன் தனது சக இனத்தவர்களுடன் நெருங்கிச் செயற்படக் கடமைப்பட்டிருக்கின்றான். ரமழானுடைய காலங்களிலே முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களையும் அழைத்து இப்தார் நடத்தினார்கள். அதேபோல முஸ்லிம் அல்லாதவர்களும் முஸ்லிம்களை அழைத்து இப்தார் நடாத்தினார்கள். சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு முஸ்லிம்களுக்கு கஞ்சி விநியோகித்த பௌத்த மதகுரு ஒருவர் தொடர்பிலான செய்திகளும் வெளிவந்திருந்தன. பள்ளிவாசல் கஞ்சி விநியோகங்களின் போது பல இடங்களிலும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் கஞ்சி வழங்கப்பட்டன. இப்படியாக அடுத்த சமூகத்தவருடனான உறவைக் கட்டியெழுப்புவதில் இந்த ரமழான் பெரும் பங்கு வகித்திருக்கிறது. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஸகாத் பெறத் தகுதி உடையோர்களில் இந்த முஅல்லபதுல் குலூபுகளும் அடங்குகின்றனர். இந்த வகையில் முஅல்லபதுல் குலூபுகளுடனான ரமழான் பெற்றுத் தந்த உறவு ரமழானைத் தாண்டிய ஏனைய காலங்களிலும் தொடர வேண்டும்.

மனிதர்கள் அனைவருமே ஆதம் (அலை) அவர்களின் பிள்ளைகளே என்ற வகையிலும் முஸ்லிம் அல்லாதோரையும் அல்குர்ஆன் இறங்கிய ரமழான் பெருநாளின் சந்தோஷத்தில் இணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ரமழான் இலங்கை முஸ்லிம்களையும் இணைத்து உலக முஸ்லிம்களுடன் பிணைத்து சகோதரத்துவத்தை வளர்த்து விட்டுச் செல்கிறது. ஏனைய மனிதர்களையும் மனிதனின் பொதுவான பண்புகளுடன் இணைத்து எமக்கு மனித நலனில் ஈடுபாடு காட்டச் சொல்லி விட்டுச் செல்கிறது. பெருநாளாகிய இந்தத் திருநாளில் இருந்து முஸ்லிம் சமூகத்துக்கிடையில் சகோதரத்துவத்தையும் அடுத்த சமூகங்களுடனான உறவையும் கட்டி எழுப்பி அடுத்த பெருநாளை இதைவிடப் பலமடங்கு சந்தோஷமானதாக அமைத்துக் கொள்வோம்.

ஈத் முபாரக் !

**பியாஸ் முஹம்மத்...**

## பெருநாள் சபதம்

கூனற் பிறையே
கொழுந்தின் ஒளியே
வானிற் கண் சிமிட்டி – நீ
வலம் வந்ததனால்
நாளை பெருநாளென
நான்–உறுதி கொண்டேன்!
ஏனெனில்–
பிறைகண்டு நோற்று
பிறைகண்டு துறக்கும்
பெருமைக்குரிய
இனமன்றோ எம்மினம்!

"இருமுனையும் கூரான
இளம்பிறையே–எம் சின்னம்
அல்லாமா இக்பாலின் கூற்றிது
ஒரு முனை வீரம்!
மறு முனை விவேகம்!!
உனைப்
"பொன்னரி வா" ளெனப்
பகன்றனன்
புரட்சிக்கமால்!
அந்த நன்னெறி வாளை
நானிலம் கண்டதால்
நாளை மலர்கிறது பெருநாள்!

முப்பது நாட்களும்
முழுதாய் நோன்பிருந்து
பசித்திருந்து–தனித்திருந்து
விழித்திருந்தா – இந்தப்
"பதவி" கிடைத்தது
"ஈதுல் பித்ர்" எனும்
இணையற்ற பதவி
எமக்கு.
அதனை
இதமாய் – பதமாய்
இன்சுவை அமுதமாய்
எடுத்தேந்தி மகிழ்வோம்!
பள்ளி செல்வோம்
"பாங்கு" டன் தொழுவோம்!
உறவினைரைச் சந்திப்போம்
உற்சாகம் கொள்வோம்!
சிற்றுண்டி உண்போம்
பேருண்டியாக
பிரியாணி புசிப்போம்!
உற்றார் உறவினரோடு
ஒன்றாய் அமர்ந்திருந்து
உண்ணுவதிலும் ஓர்
ஓர்மை இருக்கிறது
உரிமை இருக்கிறது!
உளப்பாங்கிருக்கிறது – அதனை
உணர்த்துகிற பெருநாளிது!

புனல் நீராடி – புத்தாடை பூண்டு
நறுமணம் பூசி– பள்ளி செல்வதிலும்
ஒரு பரவசம் இருக்கிறது
பகலெல்லாம் பட்டினியாய்
பசித்திருந்த நாட்களெலாம்
எமைப்
புல்லரிக்க வைக்கின்றன!
முப்பது நாட்களின்
"சுகாதார" சுகானுபவம் – எமை
ஏங்கத்தான் வைக்கிறது!
ஏழைக்கிரங்கவும்
எளியோர்க்குதவவும்
கோழைக்கு உர மூட்டவும்
கொள்கை புரண்டோரை
நல் வழிப்படுத்தவும்
இந்தப் பெருநாள்
எடுத்தோதுகிறது எமக்கு!

அடுத்த வீட்டுக்கும்
அயல் வீடுகளுக்கும்
அரிசி – பேரீத்தம்
பழம் வழங்கி மகிழ்வோம்!
பக்கத்து வீட்டுப்
பாத்திமாப் பெண்ணுக்கு
பட்டுப் பிடவை
தராது விடினும் – ஒரு
நூல் பிடவையாவது
கொடுத்து மகிழ்வோம்!
அடுத்த வீட்டு – அப்துல் காதருக்கு
பழையகாட் சரமொன்றைப்
பரிசாய் அளிப்போம்!
பிஞ்சுச் சிறுமியர்க்குப்
பாவாடை சட்டையும்
பிஞ்சுச் சிறார்கட்கு
டீ – சேர்ட்டும் களிசானும்
வழங்கியே மகிழ்வோம்!
எம்மிடம் இருக்கும் வரை...
இயன்றவரை....
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்

இரப்போர்க்கு – இல்லையெனாது
கொடுக்கின்ற நிலையை
உருவாக்கிக் கொள்வோம்
அதை சபதமாய்ப் பூணுவோம்

பொத்தலிலே பால் நிலவு
புகுந்து விளையாடும்
ஓட்டைக் குடிசையதன்
ஒரு மூலைதன்னில்
குந்தியிருந்து – "குர்–ஆன்" ஓதி
கண்ணீர் சிந்து
ஏழைப் பெண்டிர்தனின்
ஏற்றமிகு வாழ்வுக்கு எம்மால்
இயன்ற வகை செய்வோம்!
இஃதே
இன்றைய பெருநாளில் – நாம்
எடுக்கின்ற சபதமாகட்டும்!

எல்லாப் புகழும் இறைவனுக்கே!
ஈத் முபாரக்!

**கலைவாதி கலீல்**
எலுவிலை, பாணந்துறை






அல்லாஹ் அவனது அடியார்கள் மீது பொழிந்துள்ள அவனது கருணையின் காரணமாக ஒவ்வொரு ஃபர்ளான அமலுடனும் அதே போன்ற உபரியான இபாதத்தையும் மார்க்கமாக ஆக்கியுள்ளான். ஃபர்ளான தொழுகைக்கு முன் பின் சில சுன்னத்தான நஃபிலான தொழுகைகள் இருப்பதை நாம் அறிவோம். அதேபோன்று தான் ஃபர்ளான ரமழான் நோன்பிற்கு முன்னும் பின்னும் சில சுன்னத்தான நஃபிலான நோன்புகள் உள்ளது. இந்த உபரியான இபாதத்களைப் பொறுத்தவரை அது ஃபர்ளான இபாதத்தில் நம்மிடம் ஏற்பட்ட கோளாறுகளையும் குறைகளையும் ஈடுசெய்யக்கூடியதாக உள்ளது. அதனடிப்படையில் தான் ஷவ்வால் மாத ஆறு நோன்பை நபி (ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள்.

ரமழானைத் தொடர்ந்து ஷவ்வால் மாதம் ஆறு நோன்பு நோற்பது விரும்பத்தக்க சுன்னாவாகும். இது கடமையான நோன்பல்ல. என்றாலும் இதற்கென சிறப்பும் கூலியுமுள்ளது. ஒரு தடவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ரமழான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்றவர், காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார் என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம்)

இந்நபி மொழிக்கு விளக்கமாக இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறியிருப்பதாவது, ஈதுல் ஃபித்ரைத் தொடர்ந்து ஆறு நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்பது சிறந்ததாகும். அதே போன்று அதை பிரித்து ஷவ்வாலின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை நோற்றாலும் ஷவ்வாலின் நோன்பை தொடர்ந்து நோன்பு நோற்றதின் சிறப்பை அடையலாம் என்பது நமது தோழர்கள் கருத்தாகும்.

(ஆதாரம்: ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம்)

ரமழான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து வரக்கூடிய மாதமான ஷவ்வால் ஆறு நாள் நோன்பு நோற்பது ஒரு வருடம் நோன்பு நோற்பதற்கு ஈடாகும் என்பதை மேற்கூறிய நபிமொழி தெரிவிக்கிறது. இதற்கான விளக்கத்தை அல்லாஹ்வின் தூதர்(ஸல்) இவ்வாறு கூறினார்கள்.

ரமழானுக்குப் பிறகு யார் ஆறு நாள் நோன்பு நோற்பார்களோ அது வருடம் முழுமைக்குமான நோன்பாகும் யார் ஒரு நன்மைக் கொண்டு வருவாரோ அவருக்கு அது போன்று பத்து மடங்கு நன்மைகள் வழங்கப்படும்.

(ஆதாரம் : சுனன் இப்னு மாஜா)

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஒரு (ரமழான்) மாத நோன்பு பத்து மாதத்திற்கு ஈடாகும். அதைத் தொடர்ந்து ஆறு நாள் நோன்பு இரண்டு மாதத்திற்கு ஈடாகும். அது தான் வருடம் முழுமைக்குமானதாகும்' என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: சுனன் தாரமி)

சில ஃபுகஹாக்களும் ரமழானுக்குப் பின் உள்ள ஷவ்வாலின் ஆறு நோன்பு ஒரு வருட ஃபர்ளான நோன்பிற்கு ஈடாகும் என்று கூறியுள்ளார்கள்.

ஷவ்வால் நோன்பின் பலனைப் பொறுத்தவரை ரமழானின் ஃபர்ளான நோன்பில் ஏற்பட்டுள்ள குறைகளுக்கும் தவறுகளுக்கும் அது பரிகாரமாகிவிடும். ஏனெனில் மறுமையில் ஃபர்ளான நமது கடமைகளில் நாம் செய்த தவறுகளுக்கு உபரியான வணக்கங்களின் மூலம் தான் ஈடுசெய்யப்படும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள், 'நிச்சயமாக மறுமையில் அல்லாஹ் தனது அடியானிடம் அவர்களின் அமலில் முதலாவதாக தொழுகையைக் குறித்துத் தான் விசாரணை செய்வான். அது சரியாக இருந்தால் அவன் ஈடேற்றத்தையும் வெற்றியையும் அடைவான். அது கெட்டுவிட்டால் அவன் நஷ்டமடைந்து விடுவான். அவனது ஃபர்ளுகளில் ஏதாவது குறை ஏற்பட்டால் மேன்மையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் என்னுடைய அடியானுக்கு ஏதாவது உபரியான வணக்கங்கள் உள்ளதா என்று பாருங்கள். அதன் மூலம் ஃபர்ளான வணக்கத்தில் ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்யுங்கள் என்று கூறுவான். பின்னர் ஏனைய அமல்களும் அது போன்று தான் இருக்கும்.

(ஆதாரம்: ஜாமிஉத் திர்மிதி)

ஆகவே ஷவ்வாலின் ஆறு நோன்பின் மகத்துவத்தையும் சிறப்பையும் அடைந்து கொள்ள முயற்சிப்போம்.

**அப்துல் ரஹ்மான்...**

## தக்வா எனும் பேரூற்று

மலாயிக்காவின் துஆக்கள்
கேட்குமொரு நிழலில்
புனிதத்தின் வாசம் பரவுகிறது
பாவக்கறைகளை
இறை
அகற்ற அகற்ற
அர்ஷின் நிழல் விரிகிறது

ஆத்மாவைக் கழுவு
ஈமானை அகவுணர்
கல்புக்குள் குர்ஆனியத்தை விதை

சுவனத்தின் நிய்யத்தால்
ரையான் வாசலைக்கட
பித்ராவின் பெருநாள்
சக உதரத்தின் வாசலில் பூத்திருக்க
மகிழ்
நிசிகளில் நின்று தொழு
நீள் சுஜூதுகளில்
பிரார்த்தனை வளர்
குர்ஆனிய ஈரவசனங்களின்
சங்கீதத்தால் இரவுகளை நிரப்பு
ஈகையின் நீள் கரங்களால்
பெருநாளை மகிழ்
உன்
கல்பிலூறட்டும்
தக்வா எனும் பேரூற்று!

**முல்லை முஸ்ரிபா**



# நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்



மலர் தயாரிப்பு
மர்லின் மரிக்கார்

## இஸ்லாத்தின் உயரிய இலட்சியங்களை உலகமறியச் செய்திட உழைப்போம்



மறைமுகமானவற்றை நம்பியொழுகும் ஈமானின் வெளிச்சத்தை இறைவன் இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றும், ஈதுல் பித்ருடைய இத்தினத்தில் முஸ்லிம்களின் இல்லங்கள் இன்பத்தால் நிறைந்து வழியப் பிரார்த்திப்பதாகவும் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, முஸ்லிம்களின் மிகச்சிறந்த தினங்கள் இரண்டில் இதுவும் ஒன்று. இப்பெருநாள் தினத்தில் முஸ்லிம் சமூகத்தினர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென, இறைவனே விரும்புகிறான். இதற்காக, பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதும் தடை செய்யப்பட்டுள்ளது. இப்படியானதொரு தினத்தில், நமது ஹலாலான ஆசைகள் பூர்த்தியடைய நான், அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். இரவில் தொழுததும், பகலில் நோன்பு நோற்றதும் நம்மைத் திருப்திப்படுத்தின. இதில், அல்லாஹ்வும் திருப்பதிப்படுவானாக. இஸ்லாத்தின் உயர்ந்த இலட்சியங்களை ஏனைய சகோதர இன மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இப்பெருநாள் தினத்தில் நாம் நடந்துகொள்வது அவசியம். மாற்றுமத சகோதரர்களின் உள்ளக்கிடக்கைகளை அறிந்து அவர்களுக்கும் அள்ளிக்கொடுப்பதையே இந்நாள் நமக்குக் கடமையாக்கியுள்ளது. ஈகைத் திருநாள் என்பது அன்னமளிக்கும் அற்புத தயாளத்தை அர்த்தப்படுத்துகிறது. வாரி வழங்கி மற்றவர்களின் மனக்கஷ்டங்களை போக்கும் மனப்பக்குவத்தையும் இப்பெருநாள் தினத்தில் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்துக்கு இரு கரம் ஏந்தி முஸ்லிம்களாகிய நாம் பிரார்த்திப்போம்.

## அருள் நிறைந்த ரமழான் இருள் நீக்கிச் செல்லட்டும்



அருள் நிறைந்த ரமழான் எமது துயர இருள்களை நீக்கி நாட்டிலே அன்பும் சுபீட்சமும் ஓங்க வழிகாட்டி செல்லட்டும். உலகெலாம் ஈதுல் பித்ரை கொண்டாடும் பல கோடி இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு எனது இனிய நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன் சங்கை மிகு இப்பெருநாள் தினத்தில் முழு உலக அமைதிக்கும் எமது தாய்நாட்டின் நிம்மதியான வாழ்விற்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவிடம் மனமுருகிப் பிரார்த்திப்போமாக என கிராமியப் பொருளாதாரப் இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, புனித நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளது. அது எமக்கு இறையச்சம் கருணை, பொறுமை என பல பாடங்களை போதித்துச் சென்றுள்ளது. மேலும் எமது புனித மார்க்கமானது அமைதி, இரக்கம், ஒற்றுமை, மனிதநேயம், ஜீவகாருண்யம் ஆகிய உயரிய குணவியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாம் கொண்டுள்ள உயரிய குணவியல்புகள் மூலம் எமது ஒற்றுமை மிக்க தாய் நாட்டை கட்டியெழுப்ப உறுதி பூணுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு கண்ணியமிக்க ரமழான் மாதத்தில் நாம் எடுத்துக்கொண்ட பயிற்சிகளையும் செய்துவந்த இபாதத்துக்களையும் தொடர்ந்து செய்வதுடன் வசதியற்றிருக்கும் எமது சகோதரர்களை இனங்கண்டு தானதர்மங்களை செய்து இறைவனின் நல்லருளை பெற்ற நல்லடியார்களாக மாறுவோம்.

## ரமழான் தந்த பயிற்சிகளை வாழ்வில் பின்பற்றுவோம்



இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித ரமழான் மாதம் முழுவதும் நோன்பிருந்து நாம் பெற்ற படிப்பினைகளை தொடர்ந்து வருகின்ற காலங்களில் வாழ்வில் கடைப்பிடித்து நடப்பதற்கு இன்றைய நன்நாளில் திடசங்கற்பம் பூணுவோமென பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ரமழான் மாதம் எம்மில் நல்ல பண்புகளை ஏற்படுத்தி விட்டு விடைபெற்றுச் சென்றுள்ளது. இம்மாதத்தின் மூலமாக நாம் பொறுமை, இரக்கம் காட்டல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பு, உதவி செய்தல் மற்றும் இன்னோரன்னநற்பண்புகளை பெற்றுக் கொண்டுள்ளோம். அத்தோடு ஏழைகளின் வயிற்றுப் பசியை நாமும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது எமக்கு ஒருமாத கால பயிற்சியையும் அளித்துள்ளது.

நன்மைகள் பூத்துக்குழுங்கிய மாதமான புனித ரமழான், இறைவன் பால் மனிதனுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்து காணப்பட்டதோடு நாம் மேற்கொண்ட வணக்க வழிபாடுகளை வல்ல நாயன் கபூல் செய்து அவனது திருப்தியை பெறும் வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டுமென இத்தினத்தில் இருகரமேந்தி இறைவனை பிரார்த்திப்போம்.

## மனித உள்ளங்களுக்கு சாந்தியை வழங்கிய புனித ரமழான்



சாந்தி சமாதானம் நிறைந்த ரமழான் மாதம், மனிதனின் பாவக்கறைகளை சுட்டெரித்து மனிதனை மனித புனிதனாக மாற்றவென இறைவனால் வழங்கப்பட்ட ஒரு மாதமாகும். இம்மாதத்தில் நாம் இறைவனுடன் மிகவும் நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவனது கட்டளைக்கு அடிபணிந்து இபாதத்துகளை மேற்கொண்டோம். அந்த வகையில் நோன்பின் இரவுகளை வணக்க வழிபாடுகளூடாக நாம் உயிர்ப்பித்தோம். இனிவரும் காலங்களில் நாம் பெற்ற இந்தப் பயிற்சியை வாழ்வில் கடைபிடித்து நடப்பதற்கு இன்றைய நன்நாளில் இருகரமேந்தி பிரார்த்திப்போமென பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஈதுல் பித்ர்" எனப்படும் ஈகைத் திருநாளானது சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் இவ்வுலகில் பரப்பும் நோக்கில் இறைவனால் வழங்கப்பட்ட ஒரு மாதமாகும் என்றும் கூறியுள்ளார்.

## சமாதானமும் சந்தோசமும் நிறைந்த பெருநாளாகட்டும்



ரமழான் மாத நோன்பினை நிறைவு செய்து விட்டு உலக முஸ்லிம் மக்களுடன் இணைந்து ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்ற இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, முஸ்லிம்களின் புனித நூலான அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒருமாதம் நோற்கப்படுகின்ற ரமழான் நோன்பின் மூலம் ஆன்மீக ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் உலகிற்கு எடுத்துச் சொல்லப்படுகின்ற செய்தியானது மிக முக்கியமானது. நோன்புகாலத்தில் பிறரது வயிற்றுப் பசி தொடர்பாக சரியான புரிதல் ஏற்படுவதன் மூலம் முஸ்லிம்கள் அர்ப்பணிப்புடனான சமூகமொன்றை உருவாக்குவதற்காக உயர்வு தாழ்வு என்ற வேறுபாடுகளின்றி ஒன்றுபடுகின்றார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

மார்க்கரீதியான சரியான புரிதல்கள் மூலம் ஒழுக்கமான பிரஜைகளாகவுள்ள முஸ்லிம் சமூகம் வரலாறு பூராகவும் இலங்கை வாழ் மக்கள் மத்தியில் ஏனைய சமூகத்தார் மற்றும் மதங்களுடன் அந்நியோன்னிய உறவொன்றினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நம்பிக்கையை சிதறடிக்காமல் முன்னோக்கிச் செல்வதனையே முஸ்லிம் மக்கள் விரும்புகிறார்கள் என்பதனை ஒரு அமைச்சர் என்ற வகையில் நாம் அறிந்து வைத்திருக்கிறோம் என்பதை இவ்வாறான நாளொன்றில் ஞாபகப்படுத்த வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் அருளுடன் கூடிய, சமாதானமும் சந்தோசமும் நிறைந்த ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்.

## சமூக ஐக்கியத்துக்கான சந்தர்ப்பங்களை தவறவிடமால் பயன்படுத்தும் நாள் ஈதுல் பித்ர்



நோன்புப் பெருநாளின் சௌபாக்கியங்கள் சகல முஸ்லிம் சகோதரர்களதும் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்திடப் பிரார்த்தித்து, வாழ்த்துவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 'இறையியல் கோட்பாடுகளில் உன்னத இலட்சியமுடையது புனித நோன்பு. இந்த அருள்மிகு மாதத்தை அல்லாஹ்வின் திருப்தியுடன் கழிக்கக் கிடைத்தமைக்கு முதலில் நாம் அவனுக்கு நன்றி செலுத்துவோம். இறைவனின் திருப்திக்காக மட்டுமே நாம் நோன்பு நோற்றோம். பாவக்கறைகளைப் போக்குவதற்கு நாம் செய்த நல்லமல்களை எல்லாம் வல்ல அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக..!

ரமழான் தந்த பயிற்சியுடன் எதிர்வரும் காலங்களில் ஒரு வரையறைக்குள் வாழப் பழகுவோம். இந்நன்னாளில் சகோதர வாஞ்சையுடன் பழகி, சகலரையும் சந்தோசப்படுத்துவோராக முஸ்லிம்கள் மாற வேண்டும். கடந்த காலங்களை விடவும் இனி எமது எதிர்காலம் முன்னோக்கி நகர வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் இழுத்தடிக்கப்படாத புதிய யுகம் ஒன்று உருவாக இந்நன்னாளில் பிரார்த்திப்போம்.

எந்த விடயமானாலும் எல்லோரும் திருப்திப்படும் வகையில் அமைவதுதான் சமூக ஐக்கியத்துக்கு வலுச்சேர்க்கும். இந்த ஐக்கியத்தை அடித்தளமாகக் கொண்டுதான் எமது எதிர்கால செயற்பாடுகள் இருக்கும். அனைவருக்கும் "ஈதுல் பித்ர்" நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துக்கள்.

## சகோதர உணர்வுடன் சந்தோஷங்களை பகிர்ந்துகொள்ளும் நாளாகட்டும் பெருநாள்



ரமழான் மாத நோன்பினை நிறைவு செய்துவிட்டு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடுகின்ற இலங்கை முஸ்லிம் அனைவருக்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித நோன்பு இறைவனால் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய அருளாகும். இக்கடமையின் மூலம் ஒரு முஸ்லிம் அகிலத்தின் இரட்சகனான அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுகின்ற அதேவேளை தனது வாழ்க்கைக்குரிய பயிற்சிகளையும் பெறுகின்றான். ஈதுல்பித்ர் நோன்பின் முடிவில் இதன் பிரதிபலிப்பாக தனிப்பட்ட வாழ்வில் மாற்றங்களை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கின்றான்.

குடும்பத்தோடும், சமூகத்தோடும் நோன்பை நிறைவு செய்து மகிழ்ச்சியாக கொண்டாடும் ஈதுல்பித்ர் பெருநாள் தினத்தில் ஏனைய சகோதர சமூகங்களோடும் சகோதரத்துவத்துடன் சந்தோசத்தினை பரிமாறி இப்பெருநாளை கொண்டாடுவதற்கும் இந்நன்நாளில் எமது நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சுபீட்சமும் அருளும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ் எம் அனைவர்களது வணக்க வழிபாடுகளையும் ஏற்று பூரண கூலியை வழங்க பிரார்த்திப்பதுடன் ஈதுல் பித்ர் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ரமழானில் பெற்ற பயிற்சியை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்போம்



இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக விளங்கும் ரமழான் மாத நோன்பை நோற்று இறை வணக்கங்களில் ஈடுபட்டு பெற்ற பயிற்சியை வாழ்நாள் முழுவதும் எடுத்து நடப்பதற்கு இந் நன்நாளில் திடசங்கற்பம் பூணுவோம் என்று பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான பௌஸான் அன்வர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றான ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு நோன்பு பெருநாளைக் கொண்டாடும் அனைத்து சகோதரர்களுக்கும் ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நோன்பின் ஊடாக பல படிப்பினைகளையும் பயிற்சிகளையும் பெற்றுள்ளோம். பொறுமை, சகிப்புத் தன்மை என்பன எம்மில் மேலோங்கியுள்ளது. அடுத்தவரின் உணர்வுகளை எம்மால் புரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. ரமழான் மாதம் எமக்கு உடல் உள ரீதியான பயிற்சியாகவே அமைந்திருந்தது.

ஆகவே ரமழானில் பெற்ற பயிற்சியையும் பக்குவத்தையும் வாழ்நாளில் எடுத்து நடப்போம். அத்தோடு நாட்டினதும் மக்களினதும் சுபீட்சம் விமோசனத்திற்காகவும் பலஸ்தீன் உட்பட உலகின் அமைதி, சுபீட்சத்திற்காகவும் இந்நாளில் பிரார்த்திப்போம்.

## அமைதி, மகிழ்ச்சி, செழிப்பை ஏற்படுத்திடும் நாளாக பிரார்த்திக்கிறேன்



ஈத் அல்பித்ர் திருநாள் என்பது மன்னிப்பு, அன்பு மற்றும் இரக்கத்திற்கான நாளாகும். இக்குணாதிசயங்கள்தான் இஸ்லாத்தின் அடிப்படை. ஈத் என்பது மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டத்தின் நாள். அயலவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருடனும் சமாதானம் பேணவேண்டிய நாள் என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது, அருள் நிறைந்த ஈதுல் பித்ர் திருநாளில், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மங்களகரமான சந்தர்ப்பம், உறவுமுறை, சமாதானம் ஆகியவற்றின் பிணைப்பை புத்துயிர் பெறச் செய்வதற்கும், ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது. இந்நன்நாள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்கள்!

## அன்பு, மனிதநேயம் மேலோங்க திடசங்கற்பம் பூணுவோம் !



இஸ்லாமியர்களாகிய நாங்கள் நோன்பு நோற்று அதன் பண்பினைப் பேணி பெருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான தினத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன் என்று முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் துறை அமைச்சரான பாராளுமன்ற உறுப்பனர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, நோன்பு காலத்தில் தன்னடக்கம், நாவடக்கம், உணவுக் கட்டுப்பாடு, சமூக நலன்களைப் பேணி நல்ல பண்புகளைப் பெற்ற நாம் நறுமணம் கமழும் இந்நோன்புப் பெருநாள் தினத்தில் அன்பு, பாசம், மனித நேயம் எல்லா இல்லங்களிலும் பூத்துக் குலுங்க ஒற்றுமையின் மகத்துவத்தை நன்கு உணர்ந்து பெருநாளை சந்தோசத்துடன் கொண்டாடுவது அவசியம்.

அப்பொழுதுதான் இந்த நோன்பென்ற மழையில் நனைந்த அனைவரும் அகிலத்தையே வெற்றிக்கொள்ளக் கூடிய பக்குவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இந்த இனிய நன்நாளில் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்களாகிய உங்கள் அனைவருக்கும் புனித நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

(மாவத்தகம தினகரன் நிருபர்)

## முஸ்லிம்களின் முன்மாதிரிகள் சகலருக்கும் சான்றாக இருக்கட்டும் !



ரமழானை கண்ணியப்படுத்தி நல்லமல் செய்வதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல இறைவனுக்கு இப்பெருநாள் தினத்தில், நன்றியுடையோராக இருக்க வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, முஸ்லிம்களின் முன்மாதிரிகள் சகல சமூகங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் இலட்சியங்களில் இவையே இழையோடியிருக்கின்றன. எதைச் செய்தாலும் இறைவனின் திருப்திக்காக என்ற எண்ணத்துடன் செயற்படுவதுதான் இஸ்லாம். இந்தப் புனித எண்ணம் தான் எமது ஆத்மீக வெற்றிக்கு வித்திடும். கஷ்டங்கள், துயரங்களின்போது பொறுமையை கடைப்பிடித்து வாழ்வதையே இஸ்லாம் பயிற்றுவித்துள்ளது. இந்தப் பொறுமைக்கான நற்கூலிகளை இறைவனே பொறுப்பேற்றுள்ளான். இதை விடுத்து, எடுத்தெறிந்த போக்குகளால் எதையும் சாதிக்க முயலக்கூடாது. சந்தர்ப்பவாதப் போக்குகளும், சுயநல எண்ணங்களும் எந்தச் சமூகத்தையும் ஈடேற்றாது.

எல்லை மீறுவது, வரம்பு கடப்பதெல்லாம் ஈமானுள்ள முஸ்லிம்களின் செயற்பாடாகாது. எதிர்கொள்ள நேர்ந்துள்ள சவால்களில் வெற்றியடையும் தருணம் எம்மை எதிர்நோக்கியுள்ளது. எனவே, எந்தச் சந்தர்ப்பங்களிலும் எதற்கும் பலிக்கடாக்களாக மாறாமலிருக்க முஸ்லிம்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

## அல்லாஹ் அளித்துள்ள மாபெரும் பரிசு



அல்லாஹ்வின் இறைக் கட்டளையை ஏற்று தக்வாவை முன்னிருத்தி புனித ரமழான் மாதம் முழுவதும் பசித்து தாகித்து தன் இச்சைகளையெல்லாம் அடக்கி தற்காலிகமாக அல்லாஹ்வால் தடுத்த விடயங்களை அல்லாஹ்வுக்காக விட்டு நோன்பு நோற்று இரா வணக்கம் செய்து குர்ஆன் திலாவத் ஓதி தான தர்மங்கள் செய்து இன்னோரன்ன பல நல்லமல்களை செய்த முஸ்லிம்களுக்கு அவர்களை கண்ணியப்படுத்தும் முகமாக அவர்களுக்கு மாபெரும் பரிசாக அல்லாஹு தஆலா ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தை வழங்கியுள்ளான் என்று அல் ஹிக்மா நிறுவனப் பணிப்பாளர் அஷ்ஷைக் ஷைஹுத்தீன் மதனி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, காலநிலை மாற்றம் காரணமாக தற்காலத்தில் அதிக வெப்பநிலையை அனுபவிக்கும் மக்கள் இக்காலத்தில் அதிகமாக நீர் அருந்துங்கள் என்ற வைத்தியர்களின் ஆலோசனை பிரகாரம் எந்நேரமும் தன் கையில் தண்ணீர் போத்தல்களுடன் இருக்கும் மக்களுக்கு மத்தியில் தினமும் சுமார் பதிமூன்றரை மணி நேரம் பசித்து தாகித்து அணுவளவும் தாகத்தை உணராது முஸ்லிம்கள் நோன்பு நோற்கிறார்களே, இதன் இரகசியம் என்ன என முஸ்லிம் அல்லாதவர்கள் ஆச்சரியப்படுமளவுக்கு என்றால் அல்லாஹ்வின் தக்வா எனும் இறையச்சம் தான் இதற்கு பிரதான காரணம். அத்தோடு பசித்து தாகித்து இருப்பதால் மனித உடலுக்கு மிகப் பெரிய ஆரோக்கியம் இருக்கிறது என்பதை வைத்தியர்களும் விஞ்ஞானிகளும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இது அல்லாஹ் நோன்பாளிகளுக்கு கொடுத்த பரிசு மாத்திரமல்ல இறையச்சத்தினால் மாத்திரமே இவ்வாறான நிலைமை ஏற்பட முடியும் என்பதை அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்கள் உலக மக்களுக்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர். அல் ஹம்து லில்லாஹ்.

எனவே இப்புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலக முஸ்லிம்களுக்கும் இப்புனித தினத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈத் முபாரக்

# சிவில், சமூக அமைப்புக்கள் அரசியல் சார்ந்த விவகாரங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி






கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையின் ஏற்பாட்டில் கல்ஹின்னை ஜப்பான் ஹெல்பிங் ஹேன்ஸ் அமைப்பின் அனுசரணையுடன் கல்ஹின்னை பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடத்தில் கையளிக்கும் நிகழ்வு கல்ஹின்னையில் தலைவர் மபாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி கலந்து கொண்டார்.

அத்தோடு கல்ஹின்னை ஜம்மிய்யதுல் உலமா சபையின் கிளைத்தலைவர் அல் ஆலீம் ரஸான் ஹஸனி, அல் ஆலீம் உப தலைவர் காமில் முப்தி , கத்தாபு பள்ளிவாசல் தலைவர் கத்தாபியா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் அல் அலீம் நிமாஸ் கத்தாபி, பாடசாலைத் தைக்கப் பள்ளிவாசலின் உறுப்பினர் அல் ஆலீம் ரஸான் ஹக்கீமி, கண்டி மாவட்ட வை. எம். எம்.ஏயின் பணிப்பாளர் அல் ஹாபீழ் இஹ்திசான் முஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அல் மனார் தேசிய பாடசாலை, ஜமாலியா பாடசாலை, கல்ஹின்னை ஆரம்ப பாடசாலை அதிபர், அனைத்து பாடசாலைகளின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அரசியல் பிரமுகர்களான எஸ்.எம். கலீல், உவைஸ் ராசான் உள்ளிட்டவர்களும் அடங்குவர்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி உரையாற்றும் போது,







சமகாலத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்தது. முஸ்லிம் மக்களுடைய உரிமைகளுக்கும் தேவைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் சிவில் சமூக அமைப்புக்களது பங்களிப்பு இன்றியமையாததொன்றாக அமைந்துள்ளது. முஸ்லிம்களது தேவைகளைப் பேசுவது அரசியல்வாதிகளின் பொறுப்பும் கடமையுமாகும் என்று இருந்துவிடக்கூடாது. எனவே சிவில் சமூக அமைப்புக்கள் பொது விடயங்களில் மாத்திரமன்றி அரசியல் சார்ந்த விவகாரங்களிலும் கவனம் செலுத்தி மக்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் தனித்துவமான பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,...

இந்தியாவின் கேரளா மக்கள் எந்த நாட்டிலும் எந்த மூலையிலும் இருப்பார்கள் என்பதை நாம் வெளிநாடுகளுக்குச் சென்றால் பார்க்கலாம். நான் 27 நாடுகளுக்குச் சென்றிருக்கின்றேன். அங்குள்ள வாலிபர்கள் அந்தந்த காலகட்டத்தில் தங்களுடைய செயற்பாடுகளை சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பான், கட்டார் போன்ற ஏனைய நாடுகளிலுள்ள கல்ஹின்னை வாலிபர்கள் தான் பிறந்து வளர்ந்த ஊரின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் ஜப்பான் நாட்டிலுள்ள உதவும் கரங்கள் என்ற அமைப்பு கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையின் ஊடாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு




கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்க முன் வந்ததையிட்டு நான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையில் உள்ள இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்களை நான் சமூகப் பணிகளில் ஈடுபடுத்தி எதிர்காலத்தில் நவீன முறையில் எவ்வாறு செயற்படுதல் வேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வழி காட்டி வந்துள்ளேன். அவர்களுடைய செயற்பாடுகளை என்னுடைய காலத்தில் நேரடியாக கண்ணுற்று மிக்க சந்தோசம் அடைந்துள்ளேன்.தேசிய மட்டத்தில் பேசப்படும் அளவுக்கு அவர்களுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

2022 ஆம் ஆண்டு எமது பேரவையின் வருடாந்த மகாநாட்டின் பரிசை கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளை பெற்றுக் கொண்டமை இந்த ஊருக்கு கிடைத்த பெருமையாக நான் கருதுகின்றேன்.

குறிப்பாக தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அதன் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏனைய அமைப்புக்களோடு சேர்ந்து செயற்படுவது வரவேற்கத்தக்க அம்சமாகும். இதில் பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள், ஜம்மிய்யதுல் உலமா ஆகிய சமூக அமைப்புக்களோடு சேர்ந்து செயற்படுவது இந்த அமைப்புக்கு மேலும் வலுவூட்டி இருக்கிறது என்று தான் கூற வேண்டும்.

கடந்த மூன்று தசாப்த காலமாக கல்வித் துறையில் நாங்கள் பின்தங்கி இருந்தோம். இது ஒரு பெரியதொரு இடைவெளியாகும். அந்த இடைவெளிக்குப் பங்காளியாக நாங்களும் இருந்துள்ளோம். அதற்கு நாங்கள் எல்லோரும் பொறுப்புக் கூற வேண்டும். சமகாலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியின் ஊடாக எல்லா விடயங்களிலும் இளைஞர்கள் செயலாற்றக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒத்துழைக்கக் கூடியதாக கல்ஹின்னை வை.எம்.எம். ஏ. நாளுக்கு நாள் விருத்தி அடைந்து வருகிறது. எதிர்காலத் தலைவர்கள் இங்கே உருவாகுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் இங்குள்ள கிளையினர்களுக்கு அடிக்கடி கூறி வரும் விடயம்தான் ஏனைய சிவில் அமைப்புக்களோடு சேர்ந்து போக வேண்டும் என்று. எனவே அவர்கள் இதனை நன்கு கடைபிடித்திருக்கின்றார்கள்.

கொரோனா தொற்று விவகாரம், அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகள் என்று இந்நாடு பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. இதனுடைய தாக்கம் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் ஏற்பட்டுள்ளன. இந்த ஊரில் இருக்கின்ற முஸ்லிம் ஹாஜியார் தன் ஊருக்கும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. தேசியப் பேரவைக்கும் அதிகளவிலான உதவிகளைச் செய்து வந்துள்ளார். இவர் போன்ற பெரிய தனவந்தர்கள் ஊருக்குக் கிடைத்துள்ளமை இறைவனின் அருளாகும். ரமழான் காலத்தில் மக்களுக்குத் தேவையான உலருணவுப் பொதிகள் வழங்குதல், நிரந்தரமான அத்தியாவசியமான கல்விக்கான தேவையைக் கருத்திற் கொண்டு செயற்படுவதைப் பார்க்கும் போது மகிழ்ச்சிகரமானதாக இருக்கின்றது. ஒரு சமூகத்தின் உயர்வை நிறுத்தி வைப்பவர்கள் அந்தந்த சமூகத்திலுள்ள புத்திஜீவிகள் என்பார்கள். அந்த வகையில் இங்கு புத்திஜீவிகளை உருவாக்கக் கூடிய ஆசிரியர் குழாத்தினர் அதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். உலமாக்களும் ஆசிரியர்களும் தனவந்தர்களும், சமூகப் பணியாளர்களும் ஒன்று சேர்ந்து நான்கு சக்கரங்கள் போன்று ஒரு சம நிலையோடு பயணம் செய்வது என்பது ஒரு பாக்கியமாக கருதுகின்றேன்.




எமது சமூகத்தின் உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்படுகின்றன. எங்களை அறியாமல் ஒரு சில சலுகைகளும் அபிலாஷைகளும் கைநழுவிப் போய்க் கொண்டிருக்கின்றன. அதில் கூடுதலான எங்களுடைய அரசியல் தலைமைகள் கவனம் செலுத்தும் போது சிவில் சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பையும் அண்மைக்காலமாக எதிர்பார்க்கின்றார்கள். இன்று நாட்டில் முக்கியமாக எல்லை நிர்ணய விடயம் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் சிறுபான்மையின மக்களாகிய முஸ்லிம்களுக்கு பாதிப்பு உள்ளதாக கருத்து தெரிவிக்கின்றனர். இதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான கால எல்லை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த ஊர் பாதிக்கப்பட்டிருக்கிறது என அறிந்துகொள்ள முடியவில்லை. எங்களது மடவளை போன்ற முஸ்லிம் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

புதிய எல்லை நிர்ணயம் தொடர்பில் பாதகமான விளைவுகள் இருக்குமாயின் அதனைச் சுட்டிக் காட்டி மீளாய்வு செய்து திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் புதிய எல்லைகளை நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அது தொடர்பான குழுவின் பணிகள் முடிவடைந்துள்ளன. அதன் அறிக்கை இன்னும் சில தினங்களுக்குள் வழங்கப்படவுள்ளது. இந்த விடயத்தில் அரசியல் தலைமைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது தமது பிரதேசத்திலுள்ள சிவில், சமூக அமைப்புக்கள் இது குறித்து என்ன குறைபாடுகள் நிலவுகின்றன என்பதை அறிந்து செயற்படுதல் அவசியமாகும்.




அரச காவல்துறையில் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகக் குறைவாகவே காணப்படுகின்றனர். பொலிஸ், இராணுவப் படைகளில் எங்களது வாலிபர்கள் இணைந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே இதில் எமது வாலிபர்களையும் உள்வாங்கச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். முஸ்லிம்கள் காவல்துறையில் கவனம் செலுத்துவதில்லை என்ற கேள்வி நிலை இருக்கிறது. இது பற்றி அலசி ஆராய்ந்த போது முஸ்லிம் பாடசாலைகளில் பொலிஸ் கெடட், ஆமி கெடட் போன்றவைகளில் கவனம் செலுத்துவது இல்லை.பாடசாலைகளில் இந்த கெடட் பயிற்சியை வழங்கி ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தயாராக இருக்கிறது. அதற்கான ஊழியர்களை அமர்த்தி தேசிய மட்டத்தில் அவற்றை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கென ஒரு சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த சபையில் நானும் இருக்கின்றேன். சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் கெடட் அணியை ஆரம்பித்து அதன் ஊடாக ஒழுக்கமான மாணவ சமூகத்தை உருவாக்குவதோடு முப்படைகளிலும் எமது வாலிபர்களை சேர்த்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நாங்கள் முயற்சி செய்ய வேண்டும். நான் கூட 1983 களில் விமானப் படையில் இணைந்து கொள்வதற்காகச் சென்று அரசியல் பரிந்துரை இன்மையால் அந்த தொழிலை இழந்தவன். 1984 லில் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கபூர் இருக்கும் போது தெரிவு செய்யப்பட்ட நான் அரசியல் பரிந்துரை இல்லாமையினால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தான் இழந்ததை எமது சமூகத்தைச் சார்ந்தவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையும் அவாவும் இருக்கிறது.




சமீப காலமாக அரபுக் கல்லூரிகளின் காணி உரிமை தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. ஏதோ ஒரு வகையில் கவனக் குறைவாக இருந்துவிட்டால் அந்த இடத்தை ஆய்வு செய்து தகாத முறையில் அதனைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள எத்தனிக்கின்றனர். அதுதான் கபூரி அரபுக் கல்லூரியின் பிரச்சினையாகும். எனவே எதிர்காலத்தில் இன்னுமொரு மத்ரஸாவுக்கு இப்படியான பிரச்சினைகள் எழாமல் இருப்பதற்கான பல வக்பு சொத்துக்களை அடையாளம் கண்டு எதிர்காலத்தில் எந்தப் பாதிப்பும் வராமல் நீண்ட காலச் செயற்றிட்டத்தை வகுத்துச் செயற்பட இருக்கின்றோம். இலங்கையில் 50 க்கும் மேற்பட்ட மத்ரஸாக்கள் வக்பு செய்யப்பட்டுள்ளன. அதன் ஆவணங்கள் பதியப்படவில்லை. எனவே கபூரியாவுக்குப் பாதகமான தீர்ப்பு வருமாக இருந்தால், எதிர்காலத்தில் குறித்த மத்ரஸாக்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். எனவே இதற்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு குழுவை நியமித்து உயர் சட்டத்தரணிகளைக் கொண்டு அதற்கான முயற்சிகளை நாங்கள் செய்து வருகின்றோம்.

இவ்வாறான நிலையில் வக்பு என்றால் என்ன என்பது பற்றி உலமாக்கள் சமூகத் தளங்கள் ஊடாகவும் ஊடக வாயிலாகவும் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. இறைவனுக்கான சொத்தை ஒருவர் அன்பளிப்புச் செய்தால் அந்த சொத்தின் உரிமையாளர் குறித்த நிர்வாகம் அல்ல. அது இறைவனுக்கு உரித்தான சொத்து ஆகும். வக்பு என்பது இறைவனுடைய சொத்து. வக்பு சபையில் முஸ்லிம் சமூகத்திற்கான நிதி ஒன்று இருக்கிறது. எங்களுடைய பள்ளிவாசல்களிலிருந்து வக்பு சபைக்கு ஆறு விகிதப்படி வரியைக் கட்டுகின்றோம். அங்கு மொத்தமாக 800 கோடி வரை அங்கே சேகரிக்கப்பட்டுள்ளது. அதை யாரும் பாவிப்பது இல்லை. நாங்களும் இதற்கு முன்னர் தவறாகப் புரிந்து கொண்டோம். இந்தப் பணத்தை முஸ்லிம் அமைச்சரான ஹலீம் போன்றவர்கள் ஏன் பாவிக்கவில்லை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று கேட்கின்றோம். அவர்கள் இப்பணத்தின் மீது அச்சம் இருக்கிறது. இது இறைவனின் சொத்து ஆகும். அந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் இப்பணத்தைப் பயன்படுத்தவில்லை. அது பற்றியும் மீள் பரிசீலனை செய்து அப்பணத்தை நல்ல காரியங்களுக்கு செலவு செய்ய வேண்டும் என்பது பற்றி அவர்கள் திட்டமிட வேண்டும். எனவே வக்பு சொத்து இறைவனின் சொத்து. அதில் வேறு யாரும் கையாடுவது இறைவனுக்குச் செய்யும் துரோகமாகும். எனவே இது பற்றி உலமாக்கள் தெளிவினை பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசான் முஹமட் உரையாற்றும் போது

ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள சிவில் சமூக அமைப்புக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் தத்தமது பிரதேசங்களிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் கல்ஹின்னை வை.எம்.எம்.ஏ. கிளை நிறுவனம் சிறந்த முறையில் தன் பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் கற்றல் உபகரணங்கள் வழங்குதல், இரத்ததானம் செய்தல் போன்ற பல்வேறு சமூகத் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இப்பிரதேசத்தில் இவ்வமைப்பு மகத்தான பணிகளை மேற்கொண்டு வருகின்றமை வரவேற்கத்தக்க அம்சமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



இக்பால் அலி...




# சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சுய ஒழுக்கம் முக்கியமானது

## சுற்றாடல் அமைச்சர் மாண்புமிகு நசீர் அகமது பேட்டி

**2023ஆம் ஆண்டில் உலக புவி தினத்தின் அதிகார்பூர்வ தொனிப்பொருள் "எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்". இந்தத் தொனிப்பொருளை மனதில் வைத்து, உலக புவி தினத்தை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டும்?**

எதிர்கால சந்ததியினருக்கு புவியின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன் ஏப்ரல் 22, 1970 அன்று முதல் சர்வதேச புவி தினம் நினைவுகூரப்பட்டது. அமெரிக்காவின் பிலடெல்பியா, சிக்காகோ, லொஸ் ஏஞ்சல்ஸ் போன்ற நகரங்களில் திரண்ட சுற்றாடல் இயக்கங்கள் மற்றும் பொதுமக்களின் ஈடுபாட்டுடன் இது நடந்தது. உலகில் சுமார் ஒரு பில்லியன் மக்கள் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக நம்பப்படுகிறது. மனித இனத்திற்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவைக் கருத்தில் கொண்டு, உலகின் பல நாடுகள் உலக புவி தினத்தை ஆண்டுதோறும் வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் நினைவுகூருகின்றன. இந்த ஆண்டிற்கான கருப்பொருள், "எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்", இது புவி வெப்பமடைவதைக் குறைப்பது, காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பது மற்றும் பசுமையான உலகப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதைக் குறிக்கிறது.

இலங்கை தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வரவு செலவுத் திட்ட உரையை முன்வைத்த போது, எதிர்காலத்திற்கான பிரதான மூலோபாய அபிவிருத்தி தூண்களில் ஒன்றாக நீலப் பசுமைப் பொருளாதாரத்தை முன்வைத்து மிக உயர்ந்த வழியைக் காட்டியுள்ளார். இதன் பொருள், அடுத்த சில ஆண்டுகளில் அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கம், நீலப் பசுமைப் பொருளாதாரத்திற்கு இலங்கையை விரைவாக மாற்றுவதை மையமாகக் கொண்டது. இதுவே இவ்வருட உலக புவி தினத்தின் தொனிப்பொருளாகும், இலங்கை அதனைச் செய்கிறது.

**புவி தினத்தை கொண்டாடும் போது பூமியின் இயற்கை வளங்களை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறோம். இன்று இலங்கையில் நாம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால் என்ன, நீங்கள் முன்வைக்கும் தீர்வுகள் என்ன?**

காடழிப்பு, புதைபடிவ எரிபொருளை எரித்தல், உயிரியல் பன்முகத்தன்மை சீரழிவு, நீர், மண் மற்றும் காற்று மாசுபாடு ஆகியவை மிகப்பெரிய சவால்களாகும். சுற்றுச்சூழல் அமைச்சகம் என்ற வகையில், பல்வேறு இலக்கு குழுக்களுக்கு பல பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். அவையாவன, வனப்பகுதியை அதிகரிக்க மரம் நடும் திட்டங்களை ஏற்பாடு செய்தல், கழிவு உற்பத்தியைக் குறைத்தல், மாசுக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தல் போன்றவையாகும்.

பொதுவாக நன்னீர் மற்றும் சுத்தமான சூழல் ஆகியவை எதிர்கால சந்ததியினருக்கு தேவையான அடிப்படை இயற்கை வளங்களாகும். எனவே, நன்னீர் மற்றும் தூய்மையான சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நிலத்தடி நீர் எடுப்பதைக் கட்டுப்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு மற்றும் கார்பன் வெளியேற்றம் ஆகியவை எதிர்காலத்திற்கான நீர்/சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான முன்முயற்சிகளாக அடையாளம் காண முடியும்.

பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் கடந்த காலங்களில் தேக்கமடைந்திருந்த சில உயர்மட்ட சுற்றாடல் கொள்கைகள் மற்றும் உத்திகள் மீண்டும் முன்னெடுத்துச் செல்லப்பட ஆரம்பித்துள்ளன. உதாரணமாக, கார்பன் திட்டங்கள், பசுமை நிதியளிப்பு கருவிகள் மற்றும் திட்டங்கள், சூரிய, காற்று மற்றும் ஐதரசன் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவது குறித்து நிறைய விவாதங்கள் உள்ளன. எனவே சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற முறையில், நாம் செல்லும் திசை குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று, ஒரு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நேரடியாக கண்டு கொண்டிருக்கும் உலகில் நாம் வாழ்கிறோம்

**உலகில் வேறொரு நாட்டின் மீது தாக்கம். உதாரணமாக, காலநிலை மாற்றம் என்பது அனைவரினதும் பிரச்சினை. புவி வெப்பமடைதல் காரணமாக, பனிக்கட்டிகள் உருகி, வெள்ளம் ஏற்படுகிறது. பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தின் பெரும் சதவீதத்திற்கு செல்வந்த ஃ வளர்ந்த நாடுகள் பொறுப்பு என்பதை நாம் அறிவோம். இந்த பிரச்சினைக்கு என்ன செய்யலாம்?**

ஒவ்வொரு நாட்டிற்கும் கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கான இலக்குகளை வழங்கும் பாரிஸ் ஒப்பந்தம் போன்ற உலகளாவிய ஒப்பந்தங்களுக்கு நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் மதிப்பளிப்பது இதைச் செய்வதற்கான ஒரு நடைமுறைச் சாத்தியமான வழியாகும்.

உலகளவில் கார்பன் வர்த்தகம் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இலங்கை போன்ற நாடுகளை விரிவுபடுத்திய காடுகளை பராமரிக்கவும், அதற்கேற்ப ஊதியம் வழங்கவும் ஊக்குவிக்க வேண்டும். முக்கிய பசுமை- இல்ல வெளியீட்டாளர்களும் "எரிப்பு இயந்திரம்" போன்றவர்கள், எனவே, முழு உலகமும் "எரிப்பு இயந்திரத்திற்கு" ஒரு மாற்றீட்டைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியை விரைவுபடுத்த வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (CEA) தொழில்துறை உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும், காற்றின் தரக் கண்காணிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமங்களை (EPL) வழங்குவதன் மூலம் கார்பன் உமிழ்வு, மீள் காடுகளை அழித்தல், மாசைக் கட்டுப்படுத்தல் பொறிமுறைகளைக் குறைப்பதற்கான கார்பன் வரவு திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி மற்றும் அநுராதபுரம் போன்ற இலங்கையின் முக்கிய நகரங்கள் அளவீட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**இந்தப் பிரச்சினைகளைத் தடுக்க என்ன மாதிரியான சட்டத்தை இயற்றலாம்?**

தேசிய அளவில், CEA மூலம் சுற்றுச்சூழல் அமைச்சகம், தற்போதுள்ள சட்டங்களை கடுமையாகச் செயல்படுத்தி வருகிறது மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம், இரசாயன மற்றும் அபாயகரமான கழிவு மேலாண்மை உரிமச் செயல்முறை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு செயல்முறை (EIA) போன்ற மாசுக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு வழிமுறைகளை நெருக்கமாக ஒழுங்குபடுத்துகிறது. புதிய சட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் தொடர்ந்து அடையாளம் கண்டு அறிவிப்போம்

மேலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பதற்கான விதிமுறைகளில் உறுதியான சாதனைகள் உள்ளன.

சர்வதேச அளவில், பிராந்திய ஒத்துழைப்பின் மூலம் கூட்டாக எல்லை தாண்டிய பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டும். சார்க் போன்ற அரசுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு, முழுப் பிராந்தியத்திற்கும் பொதுவாகப் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உள்ளடக்கி மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, வளர்ந்து வரும் மைக்ரோ-பிளாஸ்டிக், குழாய் உமிழ்வு போன்றவற்றின் மீது உடனடி கவனம் தேவை.

இந்த விடயத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய அம்சம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குடிமக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது ஆகும்.

**இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து நாங்கள் பேசினோம். உலகின் மற்ற நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? இப்போது நான் இந்தக் கேள்வியைக் கேட்பதற்குக் காரணம், ஒருவேளை நாம் மற்ற நாடுகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம். அவர்களின் மாதிரிகளை நாம் இலங்கைக்கு பயன்படுத்தலாமா?**

உலகளாவிய ரீதியில் வாகன உமிழ்வைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல், தொழில்துறை உமிழ்வு மற்றும் புதைபடிவ எரிபொருளை எரிப்பதைக் குறைத்தல் ஆகியவற்றில் அதிக அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். சூரிய சக்தி, நீர் மற்றும் காற்று போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறுவதை விரைவுபடுத்துவதும் மிகவும் முக்கியம்.

இயற்கை வளங்கள் என்று வரும்போது முழு உலகமும் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, உலகம் முழுவதும் கட்டுமான மணலுக்கு உள்ள தட்டுப்பாடு. மாற்று மூலத்துடன் உலகம் எவ்வாறு இயங்கி வருகிறது மற்றும் குறைந்த அளவு பொருட்களைக் கொண்டு கட்டுமான முறைகளை மறுவடிவமைப்பு செய்தல் ஆகியவை இலங்கை உன்னிப்பாக ஆராயும் அம்சங்களாகும்.

**நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது உலகத் தலைவர்களின் கடமை மட்டுமல்ல. நாமே நமது தலைவர்களாக இருக்கலாம். இந்த உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் நமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் பங்களிக்க முடியும். பூமியைப் பாதுகாக்க நாம் என்ன செய்யலாம்?**

நாம் அனைவரும் நமது அணுகுமுறைகளையும் நடத்தைகளையும் மாற்றுவது மிக முக்கியமானது. சுய ஒழுக்கம் என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உள்ள முக்கிய கூறுகளில் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான நல்ல நடைமுறைகளை ஆரம்ப நிலை முதலே கற்றுத்தர வேண்டும். CEA ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் முன்னோடி நிகழ்ச்சியை, நல்ல சுற்றுச்சூழல் நடைமுறைகளை, குறிப்பாக பள்ளி மட்டத்திலும் இளைஞர்களிடையேயும் புகுத்துவதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஒரு முன்முயற்சியாக நடத்தி வருகிறது. நிலையான வாழ்க்கை முறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் கழிவுகளைக் குறைத்தல், நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், மரம் நடுதல், பசுமை விவசாயம், கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல் போன்றவற்றைப் பின்பற்ற வேண்டும்.

**வளிமண்டலத்தில் பச்சை வாயுக்கள் அதிகளவில் இருக்கும்போது, அது சூரியனின் வெப்பத்தை அதிகமாக தேக்கி வைக்கின்றது இது புவி வெப்பமடைதலுக்கு வழிவகுக்கிறது. பருவநிலை மாற்றம்/ புவி வெப்பமடைதல் கடல் மட்டம் உயரும் என்பதை நாம் அறிவோம். காலநிலை மாற்றம் / புவி வெப்பமடைதல் ஆகியவற்றால் வேறு என்ன தீங்கு விளைவிக்கும்?**


வெப்பநிலை உயர்வு என்பது கதையின் ஆரம்பம் மட்டுமே. பூமி ஒரு அமைப்பாக இருப்பதால், அனைத்தும் இணைக்கப்பட்டிருக்கும், ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றங்கள் பெரும்பாலும் மற்ற எல்லாவற்றிலும் மாற்றங்களை உண்டுபண்ணுகின்றது காலநிலை மாற்றத்தின் விளைவுகள் இவ்வாறு அமையும்,


அமைச்சர் மாண்புமிகு நசீர் அகமது

> **கடுமையான வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, கடுமையான காட்டுத் தீ, உயரும் கடல்மட்டம், வெள்ளம், உருகும் துருவ பனி, பேரழிவு புயல்கள், பல்லுயிர் பெருக்கம் குறைவது**

காலநிலை வானிலை போன்றது அல்ல, ஆனால் இரண்டு நிகழ்வுகளும் நெருங்கிய தொடர்புடையவை. வானிலை என்பது விரைவாக மாறக்கூடிய குறுகிய கால நிலைமைகளைக் குறிக்கும் அதே வேளையில், ஒரு குறிப்பிட்ட இடத்தின் நீண்ட கால தன்மையை காலநிலை தீர்மானிக்கிறது, எடுத்துக்காட்டாக, அது மிதமானதாக இருந்தாலும் அல்லது வெப்பமண்டலமாக இருந்தாலும் சரி. வானிலைக்கும் காலநிலைக்கும் இடையிலான உறவு முக்கியமானது: முந்தையது பிந்தியவற்றுக்கு அடிபணிந்துள்ளது. காலநிலை வெப்பநிலை, வானிலை பன்முகத்தன்மை, குளிர்காலத்தின் பண்புகள், மொத்த மழைப்பொழிவு மற்றும் புயல்களின் தீவிரம் போன்ற வானிலை நிகழ்வுகளின் தன்மை ஆகியவற்றை தீர்மானிக்கிறது. இந்த நுட்பமான உறவின் காரணமாகவே நாம் வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவாக அடிக்கடி ஏற்படும் வானிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகள் ஆகிய இரண்டையும் எதிர்கொள்கிறோம்.

இதனால், முழு அமைப்பையும் பல சாதகமான தாக்கங்களுடன் மாற்ற முடியும் எனினும் இந்த மாற்றம் வேகமாக இல்லையென்றாலும் மெதுவாகவும் படிப்படியாகவும் மாறிவரும் சூழலுக்கு ஏற்பவும் மாற்றிக்கொள்ள முடியும்.






# சட்டத்தை மீறி அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை

சுற்றுச்சூழல் மனித குலத்தின் இருப்பை தீர்மானிக்கும் பிரதான காரணியாகும். இதனைத் தொனிப்பொருளாகக் கொண்டு 1970ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட உலக புவி தினம் ஏப்ரல் 22ஆம் திகதி இடம்பெறுகிறது. இம்முறை உலக புவி தினத்தின் தொனிப்பொருள் பூமிக்காக முதலீடு செய்யுங்கள் என்பதாகும். இதன்மூலம் பூமியின் மீது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எதிர்கால சந்ததிக்காக சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும் வகையில் மேற்கொள்வதற்கு மனிதன் கடமைப்பட்டுள்ளான். மனிதன் தனது நாளாந்த நுகர்வுச் செயற்பாட்டுக்காக பயன்படுத்துகின்ற அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுக்கும்போது மற்றும் உற்பத்தி செயற்பாடுகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக கனிம வளங்கள் பயன்படுத்தப்படுகிறது. மனித நாகரிகத்தின் ஆரம்பம் தொடக்கம் மனிதன் தமது நாளாந்த பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு வகைகளிலும் கனிமப் பொருட்களை பயன்படுத்தியுள்ளான். கனிம வளம் என்பது இயற்கையான செயற்பாடுகள் காரணமாக பல மில்லியன் ஆண்டுகளாக பூமியில் உருவான பொருள் என்பதோடு இந்த வளத்தை பயன்படுத்திய பின்னர் தேய்மானம் அடைவது பூமியின் வளமாகும்.

பூமியில் இருந்து பெறப்படும் கனிம வளங்களுக்காக இருக்கின்ற கேள்வி நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணமாக தற்போது சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் என்ற வகையில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அதனால் வேறு நாட்களை விடவும் பூமியின் வளங்களின் முகாமைத்துவம் தொடர்பில் தேசிய அளவில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மனித நாகரிகம் வளர்ச்சி பெற்றவுடன் கனிம வளத்திற்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணமாக சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பலதுக்கும் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. மனிதனை அபிவிருத்தியில் இருந்து ஒதுக்க முடியாதது போன்று கனிம வளங்களை அபிவிருத்தி செயற்பாடுகளில் இருந்து தூரமாக்க முடியாது.

இலங்கைக்குள் கனிம அகழ்வு மற்றும் தயாரிப்பு செயற்பாடுகள் சார்ந்து சுற்றுச்சூழல் மற்றும் சமூக விஞ்ஞான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தரும் மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற பிரதான நிறுவனமாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் உள்ளது. பேண்தகு அபிவிருத்திக்கான பயணத்தில் கனிம தாய்வீடாக பணியகம், சுற்றாடல் பாதுகாப்புக்காக முறையான செயற்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

பேண்தகு அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் பயணத்தில் கனிம தாய்வீடு என புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் சுற்றாடல் பாதுகாப்புக்கு அடிப்படையாக உள்ள பின்னணி மற்றும் அதற்காக மேற்கொண்டிருக்கும் எதிர்கால நடவடிக்கை என்ன?

சுற்றுச்சூழல் வளத்தை பாதுகாப்பது தொடர்பில் பிரதானமாக 1972 இல் சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் அவதானம் செலுத்தப்பட்டது.

அதன்படி, 113 நாடுகளின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் ஸ்டொக்ஹோம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதோடு அதன்மூலம் சுற்றாடலை பாதுகாப்பது தொடர்பில் 26 இலக்குகளை முன்னிறுத்திய பிரகடனம் ஒன்று அறிவிக்கப்பட்டது.

அந்த வழியில் சென்று இலங்கையில் 1980 ஆம் ஆண்டு தேசிய சுற்றாடல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையில் சட்டம் தயாரிப்பது அதன்மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் 1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ரியோ பிரகடனம் பெறப்பட்டதோடு, அதன்போது சுற்றாடல் தொடர்பில் பேண்தகு அபிவிருத்தியின் முக்கியத்துவம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டது.

1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கம் கொண்ட சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள் சட்டத்தின் மூலம் இலங்கையில் கனிம வளத்தின் முறையான பயன்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அமைக்கப்பட்டதோடு, கனிம வளங்களை பேண்தகு முறையில் பயன்படுத்துவதற்காக சட்டம் இயற்றப்பட்டது.

இதன்படி, பிரதானமாக கனிமப் பொருட்கள் பயன்பாட்டு அனுமதிப்பத்திர முறை மூலம் முறையான வகையில் கட்டுப்படுத்துவதற்கு கொள்கை உருவாக்கப்பட்டிருப்பதோடு, அந்த கட்டுப்பாட்டு முறைக்கு அப்பால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி கனிமப் பொருட்களை அகற்றும் நபர்களுக்கு தண்டனை வழங்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், கனிம வள பயன்பாட்டின் பின் பாதிப்புக்கு உள்ளான நிலத்தை மீண்டும் மறுசீரமைப்பது சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள் சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டிருப்பதோடு, சட்டவிரோதமான முறையில் சுரங்கம் தோண்டும் நபர்களுக்கு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து குற்றவாளியாக்கப்பட்ட பின், மீண்டும் அந்த நபர்களால் சேதப்படுத்தப்பட்ட அகழ்வு நிலத்தை சீரமைக்கப்பட வேண்டும் என்றும் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, கனிம வளத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற நபர்கள் அந்தத் தவறை செய்யும்போது பயன்படுத்துகின்ற இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அகற்றப்படுகின்ற கனிமப் பொருட்கள் அரச உடைமையாக்கப்படுவதற்காக, அவ்வாறான தவறுகளை மேற்கொள்கின்ற நபர்களுக்கு பிணை இன்றி கைது செய்ய முடியுமான வகையில் சுரங்கம் தொடர்பான சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை மீறி மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வுகள் தொடர்பில் வாகனங்கள் மற்றும் நபர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்ப்பதற்கும் தற்போது பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, தாய் பூமியை பாதுகாப்பதற்கும் கனிம வள பயன்பாட்டை முறைப்படுத்துவதற்காகவும் பாதிக்கப்பட்ட சுற்றாடல் கட்டமைப்பை மீண்டும் மறுசீரமைக்கும் நோக்குடனும் சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பணியகத்தின் மூலம் தற்போது செயற்படுத்தப்படும் தேசிய கனிமக் கொள்கையும் முக்கிய அம்சமாகும். அதன்படி இலங்கைக்கு தனித்துவமான விசேட சுற்றுச்சூழல் நிலைகளை கருத்தில் கொண்டு, கனிமம் தொடர்பான செயற்பாடுகள் காரணமாக இந்த முக்கிய சுற்றுச்சூழல் கட்டமைப்புக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை ஆய்வு செய்து, சுற்றாடல் மற்றும் கனிம தொழில்துறைக்கு இடையே சமநிலைப்போக்கை பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்கியும், குறித்த கொள்கைகள் மற்றும் ஆலோசனைகள் தயாரிக்கப்படுகின்றன.

தற்போது செயற்படுகின்ற தேசிய கனிம கொள்கை 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இற்றைப்படுத்தப்பட்ட கனிம கொள்கையும், முன்னர் இருந்த கனிமக் கொள்கையில் அடங்கம் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும், மாறுபட்டிருக்கும் தற்போதைய நிலைமைகளுக்கு அமைவாக கனிமங்களின் "இயல்பான மதிப்பு", கனிம வர்த்தகத்தில் கிடைக்கின்ற வெளிநாட்டு செல்வம் மற்றும் கனிமத் துறைக்கு இடையூறாக உள்ள "காணி உரிமை" போன்றவை இந்த கொள்கைகள் மூலம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. மேலும், காணி அளவு போன்று பல மடங்குகளாக கடல் ஆழத்தில் உள்ள கனிமம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் இந்தக் கொள்கையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிள மற்றும் பிராந்திய அளவில் பூமியின் வளங்கள் தொடர்பில் பிரதான சிக்கலாக இருப்பது மணல் பற்றாக்குறை மற்றும் மணல் அகழ்வு காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு மிகப் பெரிய சுற்றுச்சூழல் பிரச்சினையாகும். பணியகம் இதற்காக செயற்படுவது எவ்வாறு?

சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாத்து மணல் தேவையை பூர்த்தி செய்வதற்காக எடுக்க வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட கால செயற்பாடுகள் பணியகத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆற்று மணலுக்கு பதில் மாற்றாக கடல் மணலின் பயன்பாட்டை அதிகரிப்பதும், ஆற்றுப் படுகைகளில் மணல் அகழ்வை சுற்றாடலுக்கு சார்பான வகையில் நிறுவப்பட்டுள்ள பசுமை மணல் கொள்கையின் கீழ் மாத்திரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சிந்தனையின் கீழ் பூகோளரீதியில் ஆறுகளில் இருக்கின்ற மணல் ஆய்வு மேற்கொண்டு மணல் இருப்பு உள்ள இடங்களை அடையாளம் கண்டு அதற்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்குவது மற்றும் தொடர்ச்சியாக ஆய்வு செய்வதும் அதற்கு இணையாக மணல் நிலைகளை மிகவும் சுற்றுச்சூழல் சார்புடைய வகையில் தயாரிப்பது மற்றும் அவைகள் நடத்திச் செல்லப்படுகின்றன.

மணல் அகழ்வுகள் தவிர சேறு, மண், சரளை மற்றும் கருங்கல் போன்ற கனிம அகழ்வுகள் காரணமாக சுற்றுச்சூழல் ரீதியில் ஏற்படுகின்ற தேய்மானங்களை தவிர்ப்பதற்கு பணியகம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் எவை?

கனிமத்தைப் பெறும்போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை குறைப்பதும் மீண்டும் புதுப்பிக்கப்படாத இந்த கனிமத்தை சிக்கனமாக பயன்படுத்துவதும் எதிர்கால சந்ததிகளுக்கு வழங்குவதும் கனிம அகழ்வு காரணமாக தேய்மானத்திற்கு உட்படுகின்ற நிலங்களை புனரமைப்பதும் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. 1992 இன் 33ஆம் இலக்கம் கொண்ட சுரங்க மற்றும் கனிம பொருட்கள் சட்டத்தை செயற்படுத்துவதற்கு நிறுவப்பட்ட புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் இலங்கையில் கனிம வள ஒழுங்குபடுத்தலுக்காக தற்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் கீழ் கனிம அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வெளியிடும்போது, கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பின்பற்றப்படும்.

- **அகழ்வு நிலம் மறுசீரமைப்பு திட்டம் ஒன்றை பெற்றுக்கொள்ளல்.**
- **மறுசீரமைப்புச் செய்யாத அனுமதிப்பத்திரம் பெற்றோர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்த்தல்.**
- **அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் தொடர்பில் சட்ட முறைகள் செயற்படுத்தல்.**
- **அகழ்வு நிலத்தில் மறுசீரமைப்பு முன்னோடித் திட்டங்களை செயற்படுத்தல்.**
- **பணத்தினால் செய்யப்படுகின்ற உறுதி செய்யப்பட்ட மறுசீரமைப்பு பிணை ஒன்றை பெறுதல்**

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற செயற்பாட்டில் தொழில்நுட்ப ரீதியில் அகழ்வு நிலங்களை புனரமைப்பதற்காக ஆலோசனை வழங்கல், ஒழுங்குபடுத்தல், மற்றும் முழுநேர மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளல்.

கனிமத் துறையில் பேண்தகு மேம்பாட்டுக்காக பணியகத்தின் அணுகுமுறை எவ்வாறானது?

கனிம வளத்தை பேண்தகு முறையில் முகாமைத்துவம் செய்யும் அடிப்படை தேவையாக தேசிய கனிம வளத்தை போதுமான வகையில் மற்றும் தர முறையாக மதிப்பிடுதல் புவிச் சரிதவியல் பணியத்தில் முதன்மையான பணியாகும். கனிமத் துறையில் முதலீட்டை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு கனிமங்களின் பயன்பாடுகள் மற்றும் பெறுமதியை நிறுவுதல், கனிம பெறுமதி சேர்ப்புக்காக இருக்கின்ற வாய்ப்பை அடையாளம் கண்டு கனிம ஒழுங்குபடுத்தலுக்கு மேலதிகமாக வசதி வழங்குனராகவும் பணியகம் செயற்படுகிறது. அதேபோன்று நாட்டில் தற்போது பெரும் அளவில் இடம்பெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளின் விளைவாக நிலம் மற்றும் சுற்றாடல் பெரும் அளவில் மாசுக்கு உள்ளாகின்றது என்பது தெரிகிறது.




**ஆர் சஞ்ஜீபன்**
**தலைவர், புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகம்**



**எம்.எம்.ஜே.பி அஜித் பிரேமா**
**பணிப்பாளர் நாயகம் (பதில்)**
**புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகம்**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெளி நாட்டு முகவர்கள் சங்கம் (அல்பா) தாமரை கோபுரத்தில் 24 ஆவது மாடியில் உள்ள உணவக விடுதியில் இப்தார் நிகழ்வை நடத்தியது. நிகழ்வில் அமைச்சர்களான மனுச நாணயக்கார, நசீர் அஹமட், அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம். ஹரீஸ், ஏ.எச்.எம் பௌசி, எஸ்.எம். மரிக்கார், எஸ்.எம். முசாரப் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களும் அதிகாரிகளும், இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.








ரோட்டரிக் கழகம் மற்றும் காவேரிக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டட திறப்பு விழா இரத்தின புரி தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் இருளாண்டி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி ரொட்டரிக் கழகம் மற்றும் காவேரிக் கலாமன்றத்தின் தலைவர் வண. பிதா யோசுவா அடிகளார், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நீதிபதி ஜெனிபர் ஸ்மித், கௌரவ அதிதியாக அரசரட்ணம் பங்கையற்செல்வன், சிறப்பு அதிதியாக கஜேந்திரகுமார் ரட்ணம், எழுத்தாளர் கவிஞர் எஸ். கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். படம் மாவத்தகம தினகரன் நிருபர்

# வடக்கின் உதயம்

## கைதடியில் இரவு வேளையில் விபத்து
# போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி பலி!
### சாரதிகள் இருவர் கைது



**யாழ். விசேட, சாவகச்சேரி விசேட நிருபர்கள்**

யாழ். சாவகச்சேரி, கைதடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) இரவு 9.30 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியான குருநாகலையைச் சேர்ந்த 54 வயதுடைய ஆர்.எம்.குணரத்னவே உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் வண்டியின் பின்புறமாக இப்பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளான அதேவேளை, எதிரில் பயணித்த லொறியானது, அப்பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோதியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தைத் தொடர்ந்து மேற்படி பஸ், லொறிச் சாரதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் கட்டுக்கரைக் குளத்திலிருந்து சிறுபோகச் செய்கைக்கு நீர் விநியோகம்

**தலைமன்னார் விசேட நிருபர்**



இம்முறை மன்னார் மாவட்டத்தில் 3,665 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், அச்செய்கைக்குத் தேவையான நீரை பிரதான கட்டுக்கரைக் குளத்திலிருந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம்,

உயிலங்குளத்திலுள்ள கட்டுக்கரைக்குள விவசாயிகள் கூட்ட மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) நடைபெற்றபோதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சிறுபோகச் செய்கை விதைப்புக்காக மூன்று அல்லது மூன்றரை மாத நெல்லினம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுடன், நெல் விதைப்பு மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளை எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதிவரை மேற்கொள்ள முடியும்.

முறைத் தண்ணீர் விநியோகத்தை ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ளதுடன், அறுவடையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிவரை மேற்கொள்ள முடியுமென அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கட்டுக்கரைக்குளத்தில் 11.4 அடிவரை நீர் காணப்படுவதினால், 10 ஏக்கர் விவசாயக் காணிகளை வைத்திருப்பவர்களுக்கு பத்துக்கு ஒன்று எனும் விகிதத்தில் சிறுபோகம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை மன்னார் மாவட்டத்தில் சிறுதானிய பயிர்ச் செய்கையை 2,500 ஏக்கரில் மேற்கொள்ளவுள்ளதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் 'சிவாஜி கணேசன்' நூல் அறிமுக விழா

**யாழ். விசேட நிருபர்**

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தொடர்பாக தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளரான முனைவர் மருதுமோகன் என்பவர் சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய 'சிவாஜி கணேசன்' எனும் நூலின் அறிமுக விழா, யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நடிகர் திலகத்தின் புதல்வர் ராம்குமார் கணேசன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் தொடக்கவுரையை இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, 'நீங்கா நினைவில் சிவாஜி' எனும் தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா சிறப்புரையாற்றவுள்ளார்.

நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்தவும் நூல் அறிமுகவுரையை முனைவர் கா.வெ.செ. மருதுமோகன் நிகழ்த்தவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சி.ஸ்ரீ சற்குணராஜா நூலை வெளியிடவுள்ளதுடன், ராம்குமார் சிவாஜி கணேசன் சிறப்புப் பிரதிகளைக் வழங்கவுள்ளார். முனைவர் கோ.ச காதேவி, முத்தையா பிள்ளை ஸ்ரீகாந்த், தேவராயபிள்ளை லெட்சுமணன்ராஜ், டாக்டர் சதீஸ்குமார் சிவலிங்கம், முனைவர் மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

இதன்போது, சிறப்பு நிகழ்வாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளதுடன், இதற்கு செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலி லலீசன் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைப்பதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## தீயணைப்பு வாகன சக்கரத்தில் அகப்பட்டு யாழ். நகரில் ஒருவர் காயம்!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாநகரசபையினுடைய தீயணைப்பு வாகனச் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்த தீயணைப்பு படை வீரர் ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இத்தீயணைப்பு வாகனமானது Hand Break போடாமல் தரிப்பிடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (18) நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாகனம் மெது மெதுவாக நகர ஆரம்பித்த போது, இதனைக் கண்ட இந்நபர், அவ்வாகனத்தை நிறுத்த முற்பட்டுள்ளார். இதன்போது, வாகனச் சில்லுக்கு கல்லொன்றை வைப்பதற்கு அவர் முற்பட்ட போதே, சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்ததாக, சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈ தாக்கம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் சுமார் 5,000 தென்னைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 75 வீதமான தென்னைகளுக்கு கட்டுப்படுத்தல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், தெங்கு செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் நேற்று முன்தினம் (19) தெரிவித்தார்.

இவ்வருடத்தில் ஜனவரி 15ஆம் திகதிக்கு பின்னர் இந்நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.



யாழ். தென்மராட்சி, மீசாலை வடக்கு சுடர்ஒளி முன்பள்ளிச் சிறார்களுக்கு கைவிசேடம் வழங்கி வைக்கும் நிகழ்வு, அம்முன்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு முன்பள்ளிச் சிறார்களுக்கு கைவிசேடம் வழங்கி வைத்தார். அத்துடன், இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனும் கலந்துகொண்டார். (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

# தனுஷ்கோடியை சென்றடைந்த வவுனியாவைச் சேர்ந்த ஐவர்!

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



வவுனியா மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர், தலைமன்னாரிலிருந்து படகில் புறப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை (19) தனுஷ்கோடி, அரிச்சல்முனையைச் சென்றடைந்துள்ளனர்.

அவர்களை மீட்ட மெரைன் பொலிஸார், மண்டபம் மெரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்த போது, இலங்கை ரூபாவில் ஒரு இலட்சம் ரூபாவை படகுப் பயணத்துக்கு வழங்கியமை தெரியவந்தது. இந்த 5 பேருடன் சேர்த்து 238 பேர் அகதிகளாக தனுஷ்கோடிக்குச் சென்ற நிலையில், மண்டபம் அகதிகள் முகாமில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்புத்துறை பிரதேசத்தில் ஜெலட்நைட் குச்சிகள் மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தின் கொழும்புத்துறை, உதயபுரம் பிரதேசத்தில் 25 ஜெலட்நைட் குச்சிகளை நேற்று முன்தினம் புதன்கிழமை (19) கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, கடற்கரையை அண்டி அமைந்துள்ள பற்றையிலிருந்து இவை மீட்கப்பட்டுள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர். இவற்றை மீட்ட கடற்படையினரின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர், அவற்றை மேலதிக விசாரணைக்காக கடற்படை முகாமுக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

# இழுவைமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்த 6 பேருக்கு விளக்கமறியல்

**பரந்தன் குறூப் நிருபர்**



தடை செய்யப்பட்ட இழுவைமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 கடற்றொழிலாளர்களை எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெகநாதன் சுபராஜினி உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட இழுவைமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் 6 பேரையும் கடந்த செவ்வாய்க்கிழமை (18) இரவு கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை (19) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவை நீதவான் வழங்கினார்.

# அதிகரித்துவரும் இந்திய ஐபோன்களின் ஏற்றுமதி; சீன பத்திரிகை தகவல்

சீனாவில் உள்ள தமது உற்பத்தி தொழிலகங்களையும் விநியோக மையங்களையும் வெளிநாடுகளுக்கு நகர்த்தும் முயற்சியில் எப்பள் நிறுவனம் ஈடுபட்டு வரும் சூழலில் இந்தியத் தயாரிப்பாக ஏற்றுமதியாகும் ஐபோன்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து வருவதாக 'சவுத் சைனா போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

2022 இல் ஐபோன்களின் ஏற்றுமதி எண்ணிக்கை முதல் வருடத்தைவிட 65 சதவீதத்தால் அதிகரித்து இருந்ததாகவும், கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து ஏற்றுமதியான மொத்த ஸ்மார்ட் போன்களின் எண்ணிக்கையில் எப்பள் நிறுவன உற்பத்தி 25 சதவீதமாகக் காணப்பட்டதாகவும் இச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2020ம் ஆண்டில் ஸ்மார்ட் போன் தயாரிப்பாளர்களுக்கு இந்தியாவில் தொழில் தொடங்க 6.65 பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தக சலுகைத் திட்டங்களை இந்தியா அறிவித்திருந்தது. இதையடுத்து எப்பள் நிறுவனத்துக்கு பாகங்களைத் தயாரித்து வழங்கும் பொக்ஸ்கொன் நிறுவனம் பெங்களூரு விமான நிலையத்துக்கு அண்மித்ததாக 300 ஏக்கரில் கைபேசி பாகங்களைத் தயாரிக்கும் தொழிலகத்தை அமைக்க முன்வந்தது. 2027இல் எப்பள் நிறுவனத்துக்கான ஐபோன் பாகங்களில் 50 சதவீதம் இந்தியாவில் தயாரிக்கப்படும் என சவுத் சைனா போஸ்ட் ஆருடம் கூறியுள்ளது.

# இந்தியாவின் பான் கார்ட், ஆதார் அட்டை முறையை பாராட்டியுள்ள சர்வதேச நாணய நிதியம்

வரிவிதிப்பை எளிமையாக்கும் வகையில் இந்தியாவின் வரித் திணைக்களம் 1972ஆம் ஆண்டிலேயே வரி செலுத்துபவர்களுக்கு நிரந்தர கணக்கிலக்க நடைமுறையை அமுலுக்கு கொண்டு வந்ததாகவும் பின்னர் பொது நிர்வாக அலுவல்களுக்கு இந்த 'பான்கார்ட்' நடைமுறை விஸ்தரிக்கப்பட்டதாகவும் இதுவே பின்னர் டிஜிட்டல் பொதுத்துறை கட்டமைப்பு வலுவாக அமைவதற்கு ஆதாரமாக விளங்கியதாகவும் சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

வரி சேகரிப்பை எளிமைப்படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட பான் கார்ட், பின்னர் பொது நிர்வாக அலுவல்களை எளிமைப்படுத்தும் பொருட்டு விஸ்தரிக்கப்பட்டதால் வரி செலுத்தும் எல்லைக்கு அப்பால் உள்ளவர்களுக்காகவும் 40 கோடி அட்டைகள் மேலதிகமாக விநியோகம் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கும் சர்வதேச நாணய நிதியம், தற்போது கட்டாயமாக்கப்பட்டிருக்கும் ஆதார் அட்டைக்கான மூலைக்கல்லாக பான் கார்ட் விளங்கியதாக சுட்டிக்காட்டியுள்ளது.

'இந்தியாவின் டிஜிட்டல் பயணம் கற்றுத் தரும் பாடங்கள்' என்ற ஆய்வறிக்கையிலேயே இந்நிதியம் மேற்படி தகவல்களைத் தந்துள்ளது.

## இரண்டாவது புத்தர் என அழைக்கப்படும் குரு ரின்பாஷ் பத்மாஸ் சம்பவா

திபெத்திய பௌத்தத்தில் இரண்டாவது புத்தர் என அழைக்கப்படும் குரு ரின்பாஷ் பத்மாஸ்சம்பவா அம் மதத்தவரின் பிரதான ஆன்மிக வழிகாட்டியாக விளங்குகிறார் என 'பூட்டான் லைவ்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அவரைச் சுற்றி உலாவும் கதைகளும், நிகழ்வுகளும், மக்கள் மத்தியில் அவர் தொடர்பான நம்பிக்கைகளும் திபெத்திய பௌத்தத்தை ஜீவனுடன் வைத்திருப்பதற்கு உதவுவதாக திபெத்திய பாரம்பரியங்களை காப்பாற்றுபவராக அவர் திகழ்வதாகவும் இச்செய்திச் சேவை மேலும் குறிப்பிட்டுள்ளது.

திபெத்திய சிறு தெய்வங்களும் ஆவிகளும் திபெத்திய பௌத்தத்துக்கு எதிராக செயல்படும் சக்திகளாக செயல்பட்டு வந்ததாகவும், இத் தெய்வங்களின் உக்கிரத்தை தன் விசேட ஆன்மிக சக்தியால் மழுங்கடிக்கச் செய்ததோடு பௌத்த தர்ம போதனைகளின் காப்பாளர்களாக அவற்றை மாற்றியமைத்தமை அவரது அற்புத செயலாக திபெத்தியர் கருதுகின்றனர்.

# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் நினைவேந்தல் கண்காட்சி; வரலாற்று பதிவுகளை திரட்டித் தருமாறு இ.தொ.கா வேண்டுகோள்

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மூன்றாவது சிரார்த்த தினத்தையொட்டி எதிர்வரும் மே 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை கொழும்பு சௌமியபவனில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. தேசிய தலைவரது ஆளுமையை இளைய தலைமுறையினரும் உள்வாங்கிக் கொள்ளும் வகையில் கண்காட்சி ஒன்று இடம்பெற உள்ளதாக இ.தொ.கா ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது,

இக்கண்காட்சியில் அமரர் பயன்படுத்திய பொருட்கள் அவரது நினைவுகளின் நிழல்களாக விளங்கும் புகைப்படங்கள், விருதுகள், வரலாற்று பதிவுகளாக திகழும் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் பலவும் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

இக்கண்காட்சியை பயனுள்ள வகையில் மிக பிரமாண்டமாக நடத்தவிருப்பதால் எமது மக்களும் தமது பங்களிப்பினை வழங்க வாய்ப்பளிக்க விரும்புகின்றோம். எனவே, உங்களிடம் அமரர் ஆறுமுகன் தொண்டமான் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், கடிதங்கள், குறிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அனுப்பி வைக்கவும். அவைகள் உங்கள் பெயர் விபரங்களுடன் கண்காட்சியில் இடம்பெறும். அமரரின் நினைவேந்தலை அர்த்தமுள்ளதாக அனைவரும் உள்வாங்கிக்கொள்ள கை கோர்ப்போம். விபரங்களுக்கு சிரேஷ்ட ஊடக இணைப்பாளர், 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. மே 06ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக cwcmedia72@gmail.com மற்றும் congressnewspaper@gmail.com ஆகிய மின் அஞ்சல் முகவரியூடாகவும், 0719455222 என்ற வட்ஸ்எப் மற்றும் நேரடி அவசர தேவைகளுக்கு 0716876548 / 0704329131 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

# கந்தகட்டி தேசிய பாடசாலையின்

# பொன்விழா



## மலையக கல்விப் புலத்திற்கு காத்திரமான பங்களிப்பை நல்கி வரும் தேசிய பாடசாலையாகும்...










**பொன் விழா பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பங்கேற்றலுடன் பொன் விழா மண்டபத்திலே அரங்கேறவுள்ளது. வத்தேகம கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளர் W.M.N.T.குனரட்ண, கல்விப் பணிப்பாளர் I.M ஹாசிம்,மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பெருந்தோட்ட அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் பரத் அருள்சாமி, பன்விலை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சரத் வீரசிங்க, பாண்டிச்சேரி கலாநிதி ஞா.கோபி,இங்கிலாந்து திருமதி சுகந்தி ஆகியோரும் பிரசன்னமாகவுள்ளனர்.**

மத்திய மாகாண கண்டி மாவட்ட வத்தேகம கல்வி வலயத்தின் பன்விலை கல்விக் கோட்டத்தில் மாண்புற்று விளங்கும் தவலந்தன்னை கந்தகட்டி தேசிய பாடசாலை சாதனைகள் பல படைத்து தனது ஐம்பது வருட பொன் விழாவை 2022.09.15 ஆம் திகதி அனுஷ்டித்து பெரு விழாவாக நாளை மறுதினம் ஞாயிறன்று இனிதே கொண்டாடுகிறது.

1972 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ஆம் திகதியன்று, "கந்த கட்டி தமிழ் வித்தியாலயம்" எனும் பெயரால் அமரர் ஸ்ரீமான் நல்லதம்பிப் பிள்ளை அவர்களின் நன்கொடையால் கந்தகட்டி தோட்டத்தில் 02 ஏக்கர் காணியில் இக்கல்விக் கூடம் உதயமாகியது.

இந்த கல்வி கூடத்தின் வியத்தகு அதிபர், ஆசிரியர்கள், பலர் பாடசாலையின் பண்புத் தரத்தை கட்டி எழுப்பியுள்ளனர்.

பாடசாலை சமூகத்தை தமது தோள் மீதும் மார் மீதும் சுமந்து, இலக்கை நோக்கி நடந்தனர் இவர்கள். நாள், நேரம் பாராது கஷ்ட, நஷ்டங்களை கடந்து, முழுநாளும் பாடசாலையில் தம்மை அர்ப்பணம் செய்து கவனத்துடன் பணியாற்றினர். இவ்வித்தியாசாலையின் நா.தர்மலிங்கம்,முதலதிபர் சுறுசுறுப்பு மிக்கவரான இவர் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை தனது பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். கந்தகட்டியவிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கொஸ்கம எனும் சிங்கள மகா வித்தியாலயத்தில் இயங்கிவந்த தமிழ்




பிரிவுக்கு அதிபராக கடமையாற்றியவர்.

கொஸ்கம சிங்கள மகா வித்தியாலயம் அந்த காலத்தில்,1972 இற்கு முன் இரு மொழி பாடசாலையாக இயங்கியது. இரண்டு இனத்தவர்களின் பிள்ளைகள் ஒன்றாய் படிக்கும் இப்பாடசாலை பூமி ஒவ்வொரு நாளும் குருச்சேத்திரத்தை நினைவுப்படுத்தியபடியேதானிருக்கும். தமிழ் பிரிவு மட்டும் எப்போதுமே எல்லாவற்றிலும் இரண்டாம் வரிசையிலேயே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருந்தது. மாற்றாந்தாய் மனப்பாங்கு, வளப் பற்றாக்குறை, பாகுபாடு ஆகியன அங்கே கடமையிலிருந்த அதிபர் தர்மலிங்கம் அவர்களை, பல சந்தர்ப்பங்களில் வெகுவாக பாதித்து அவரை கூனிக்குறுகச் செய்தது. எனவே,எதிர்காலத்தை தீர்க்கதரிசனமாகவுணர்ந்து, தான் தனியாக ஒரு தமிழ் மொழி பாடசாலையின் அவசியத்தை இலட்சியமாக்கி, தமிழ் சமூகத்திற்கொரு தனியான கல்விச்சாலை அமைத்திட வேண்டும் என்பதில் தன்னாலான எல்லா முயற்சிகளையும் விடாது தொடர்ந்து செய்துவந்தார். அவரின் அர்ப்பணிப்பு மிக்க இந்த சிந்தனைக்கு, உதவுமுகமாக கொஸ்கம பிரதேசத்திற்கு அருகில் உள்ள, கங்கை விநாயகர் ஆலயத்தை தளமாகக் கொண்டு வாழும் உலுகங்கை நகர வர்த்தகர்களான சி.த.தங்கவேல் பிள்ளை (STM), பழனியாண்டி பிள்ளை, செல்லத்துரை, பிச்சை பிள்ளை, சோமசுந்தரம் , ( லியாங்களை) நக்கள்ஸை சேர்ந்தொருவர் தங்கராசு, நல்லதம்பி பிள்ளை, மாயாண்டி ஆகியோரின் பலம் மிக்க உதவி ஒத்தாசைகளுடன், அமரர் நல்லதம்பியா பிள்ளையின் கல்வித் தானத்தை இந்திய வம்சாவளி தமிழ் சமுதாயத்தினருக்கு கையளித்தனர். முதல் அதிபர் தர்மலிங்கம் ஒரு தனித்தமிழ் பாடசாலையை உருவாக்கும் பொருட்டு பல்வேறு பிரயத்தனங்களை செய்து, அரச அலுவலகங்கள் பெரும்பான்மை சமூகத்தினர், அரசியல் சூழ்ச்சிகள் என பல திசைகளிலுமிருந்து வரும் எதிர்ப்புகளுக்கும் அரசவூழியர் எனும் வகையிலும்,வேற்று பிரதேசத்தை சேர்ந்தவர் என்ற வகையிலும் முகம்கொடுக்க வேண்டியவரானார். இந்த தீவிர போக்குகளுக்கு மத்தியில் எப்படியாகிலும், "ஒரு தனி தமிழ் பாடசாலை"யை அடையும் பொருட்டு, துணிச்சலுடன் சபதம் ஒன்றையெடுத்து தனித்தமிழ் பாடசாலை ஒன்றை நிறுவும் வரை தான் முகச்சவரம் செய்யப்போவதில்லை என முடிவெடுத்து அதன் பிரகாரம் 1972 புரட்டாதி 15 ஆம் நாள் கொஸ்கம வித்தியாலயத்திலிருந்து தனது 72 தமிழ் மாணவர்களுடன், "முகச்சவரம் செய்து" தனித்துவ தனது பயணத்தில் வெற்றி வாகை சூடி, கந்தகட்டி தமிழ் வித்தியாலயத்தை பொறுப்பேற்று மாபெரும் புதிய வரலாற்றை பதிவு செய்தார். உறுதியும், தியாகமும் நிறைந்த இந்த சமுதாய முயற்சியின் விளைவாக உலகமுள்ள வரை கல்வி மாண்பை பெற்றுக்கொண்ட பயனாக, இன்று பன்வில பிரதேசத்தில் ஒரு தேசிய பாடசாலை நமது சமூகத்திற்கு தனித்துவமான கல்வி கட்டமைப்பை பெற்று, விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. இப்பாடசாலை தர்மலிங்கம் அதிபரின் அப்பழுக்கற்ற இந்த சேவைக்குத்தான், "ஆசிரிய தர்மம்" எனும் பதம் பொருந்திநிற்கும். 1972 முதல் இது நாள் வரை கந்தகட்டி பாடசாலையினது அதிபர் ஆசனத்தில் 12 அதிபர்கள் பயணித்துள்ளனர். ஒவ்வொரு அதிபர்களும் தமது பங்களிப்பினை கால சூழலுக்கு ஏற்ப பாடசாலை சமூகத்தை வழி நடாத்தியுள்ளனர்.

70 தசாப்தங்களில் சுயநிர்ணய பலம் உழுகங்கை நகரையொட்டிய தோட்டப்புற மக்களிடையே,"தனித் தமிழ் பாடசாலை" உருவாக்கத்தில் வெளிக்காட்டப்பட்டதானது இளைய தலைமுறையினராக இருக்கும் இன்றைய ஆசிரியர் சமூகத்திற்கு, வலிமைமிக்க உணர்வு நமது பெற்றோர்களிடம் இருந்துள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி நிற்கின்றது. பாடசாலையை தோற்றுவித்து வெற்றிகரமாக கல்விப்பயணத்தை நடாத்தி, 1974 ஆம் ஆண்டில் அதிபர் தர்மலிங்கம் ஓய்வு பெற்றுச் செல்கிறார்கள்.

பாடசாலைக்கு புதிய அதிபர் நியமனம் இல்லை. ஏற்கனவே நுழைவாயில் 2ல் குறிப்பிட்டவாறு தமிழர்களின் கல்வி மீது அரசு மற்றும் திணைக்களங்களின் பாராமுகம் அசமந்த போக்கு இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது. அதிபர் தர்மலிங்கத்தின் ஓய்வுக்குப்பின், பாடசாலையில் கணித ஆசிரியராக இருந்த சொலமன் ஆசிரியர் பதில் கடமை அதிபராக பொறுப்பேற்றார். பின் 74 ஆம் ஆண்டு இறுதி தவணையில் புதிய அதிபராக யோகராஜா நியமனம் செய்யப்படுகிறார். ஆனால் அதிபர் யோகராஜா சுகயீனம் காரணமாக 75ஆம் ஆண்டே இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் செல்கின்றார். மீண்டும் 75 ஆம் ஆண்டு ஆசிரியர் சொலமன் பதில் கடமை அதிபராக நியமிக்கப்படுகிறார். இந்தக் காலப்பகுதியில் ஒரு நள்ளிரவில் இனம் தெரியாதவர்களால் 10 × 20 பாடசாலை காரியாலயத்தின் பலகை அலுமாரியை உடைத்து அனைத்து மாணவர்களின் கோப்புகள் மற்றும் தஸ்தாவேஜுகள் திருடப்பட்டிருந்தன. திருடப்பட்ட பொருட்கள் ஒரு வாரத்துக்குப் பின் அருகில் உள்ள ஓடையில் அது கண்டுபிடிக்கப்பட்டது. மாணவர்களின் பிறப்புச் சான்றிதழில் எழுதப்பட்டிருக்கும் விவரங்கள் யாவும் அழிந்துபோய், ஊறிய வெறும் காகிதங்களாக காணப்பட்ட கோப்புகள் காயவைக்கப்பட்டு மீண்டும் அதே பலகை அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டது.


அதிபர் T.சந்திரகுமார்


நா. தர்மலிங்கம்


அதிபர் பொன் இராஜகோபால்


அதிபர் செ.தியாகநாதன்


ஆரம்பப் பாடசாலை அதிபர் பொன்னையா ஜமுதராஜா

இந்த நிகழ்வுக்குப் பின் 75ஆம் ஆண்டு ஆசிரியர் பாலசிங்கம் பதில் கடமை அதிபராக நியமிக்கப்பட்டார். ஓரிரு மாதங்களில் தமிழ் ஆசிரியர் நாமதேவன் பதில் கடமை அதிபராக பாலசிங்கத்துக்கு பதிலாக தெரிவு செய்யப்படுகிறார். நாமதேவன் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு முதல் தவணை முடியும் வரை பதில் கடமை அதிபராக பாடசாலையை நடாத்தி வந்தார். 1976 ஆம் வருடம் இரண்டாம் தவணையிலிருந்து நிரந்தர அதிபராக, அப்போது ஆகலை தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய பொன். பூபாலன் கந்தகட்டி தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக நியமனம் பெற்று பதவி ஏற்கின்றார். ஆகலை வித்தியாலயத்தில் திருமதி. வெரோனிக்கா பூபாலன் அதிபராக நியமனம் பெறுகிறார். 1976 ஆம் ஆண்டுக்குப் பின் கந்தகட்டி பாடசாலை பல புதிய பரிமாணங்களில் வடிவம் எடுக்கத் தொடங்குகின்றது. கல்வி மற்றும் இணைப்பாட செயற்பாடுகள் விருத்தி பெறுகின்றன. கலைத்துறையில் நாடகம், நாட்டுக்கூத்து, வானொலி நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளுதல் என்பன இடம்பெறுகின்றது. அதிபர் பொன். பூபாலன் பல்துறை தேர்ச்சி கொண்டவர். கவிஞர், எழுத்தாளர், விவசாயத் துறையில் பயிற்சி பெற்றவர், இவ்வாறு பன்முக ஆளுமைகளைக் கொண்ட அதிபர் பூபாலன் மாத்தளை பலாபத் வலயைச் சேர்ந்தவர். மும் மொழிகளையும் சரளமாக பேசக்கூடியவர், மேடைப் பேச்சாளர், இவரின் சகோதரர் பொன். லோகநாதன் பலாபத்வல தமிழ் வித்தியாலயத்தின் அதிபராவார்.

அதிபர் பொன் பூபாலனின் குடும்பமே ஓர் ஆசிரியர் குடும்பமாகும். அதிபர் பொன் பூபாலன் காலத்தில் வத்தேகம தேர்தல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஜீ .பெர்னாந்து மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் டி.பி வேரபிட்டிய, அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் என தேசிய அளவிலான தொடர்புகள் பாடசாலைக்கு கிடைக்கின்றன. தேசிய நிலையில் பாடசாலை பேசப்பட்டு வரும் பொழுது பாடசாலை நிர்வாகம் சார்ந்த சில நியமங்களை உருவாக்க வேண்டிய தேவை பாடசாலை கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அந்த வகையில் பாடசாலைக்கான பாடசாலை கீதம், பாடசாலை இலச்சினை, பாடசாலை மகுடவாசகம், பாடசாலை கொடி என்பன அதிபர் பொன். பூபாலனால் நிர்மாணம் செய்யப்படுகின்றது. அதிபர் பொன் பூபாலன் ஒரு கவிஞன் என்ற படியால் பாடசாலை கீதத்தை உடனடியாக எழுதி, அதில் மாணவர்களுக்கு பயிற்சியும் வழங்கி, பாடசாலைக் கீதத்தை நாளாந்த பாடசாலை வழமையில் கொண்டு வந்தார், "ஈழத்தாயின் மடியினிலே இன்பத்தென்றல் வாழியவே" எனத் தொடங்கும் பாடசாலைக் கீதம், பின்னாளில் இலங்கையில் தமிழீழப் போராட்டம் உக்கிரம் அடைய, "ஈழத்தாயின்" என்பது மாற்றப்பட்டு, "லங்கா மாதா மடியினிலே" என மாற்றி எழுதப்பட்டது . பாடசாலை இலச்சினை மற்றும் மகுடவாசகமான, "தெய்வம்", "ஞானம்", "தேசம்" என்பன 1977 ஆம் வருடம் அதிபரின் ஆகலை பாடசாலை விடுதியில் வைத்து ஆகலை சிற்பக் கலைஞர் அமரர் பி. கே. சுகுமாரால் ஊதா நிற கொடியில், பொன் நிற எழுத்துக்களால் வரையப்பட்டது. கந்தக் கட்டி பாடசாலைக்கு பாடசாலை கீதம், பாடசாலைக் கொடி, பாடசாலை இலச்சினை, மற்றும் பாடசாலை மகுட வாசகம் என்பன அமைக்கப்பட்டு அரச பாடசாலை என்ற அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டது.

அதிபர் பொன். பூபாலனின் கலைத்துறை பயணம் கந்தக் கட்டி பாடசாலையின் பெயரை மகிமைபடுத்தியது . கந்தகட்டி நாடகம் எங்கும் பேசப்பட்டது. மாணவர்கள் கலைத்துறையில் வெகுவாக ஆர்வம் காட்டியதால் மிக வெளிப்படையாக மிளிரத் தொடங்கினர். இந்தக் காலத்தில் தான், அப்போது பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த டி. பி.வேரபிட்டியாவினால் உருவாக்கப்பட்ட ஒரு நம்பிக்கை நிதியத்திற்கு, நிதி உதவி திரட்டும் பொருட்டு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, "கைலஞ்சம்" என்னும் நாடகம் நிதி உதவி காட்சியாக, மதீனா தேசிய பாடசாலையில் மேடையேற்றப்பட்டது. பெருமளவில் நிதியும் திரட்டி கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக சிறிதுகாலஞ் செல்ல கந்தகட்டி தமிழ் வித்தியாலயம், "கந்தகட்டி தமிழ் மகா வித்தியாலயம்" என அங்கீகரிக்கப்பட்ட நல்ல செய்தியை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான டி.பி. வேரப்பிடிய நேரடியாகவே பாடசாலைக்கு விஜயம் செய்து அறிவித்தார். பாடசாலைக்கு மேலும் 100× 20 கட்டடம் ஒன்றும் 50× 20 மனையியல் கூடம் ஒன்றும் அதிபர் பொன். பூபாலன் காலத்தில் கட்டப்படுகின்றது. பின்னாளில் கந்த கட்டி பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்று வந்த செ.தியாகநாதன் மற்றும் அப்போதிருந்த ஏனைய பழைய மாணவர்களுடன் வீடு வீடாகச் சென்று நல்ல தரமான புத்தகங்களைத் திரட்டி, பாடசாலை மனையியல் கட்டடத்தில் 20 ×10 அறையில் ஒரு நூல் நிலையத்தை அமைத்து பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது. நூலகம் அமைக்கப்பட்டதன் பின் உற்சாகம் கொண்ட பழைய மாணவர்களால் ஊர் மனைகள் தோறும், சென்று நிதி திரட்டி பாடசாலைக்கு பேண்ட் வாத்திய இசைக்கருவிகள் வாங்கப்பட்டு பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. அதிபர் பொன். பூபாலன் காலத்தில் பாடசாலைக்கும் பழைய மாணவர்களுக்குமிடையே மிக ஆரோக்கியமான நல்லுறவு கட்டி அமைக்கப்பட்டிருந்தது . மாணவர்களின் ஆக்கத் திறன் வெளிப்பட்ட காலம். அந்தக்காலத்தில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பு செய்யப்பட்ட, "குன்றின் குரல்" நிகழ்ச்சியில் கந்த கட்டி மாணவர்களின் நிகழ்ச்சிகள் வாராவாரம் ஒலிபரப்பு செய்யப்பட்டது. அழகுப்பிள்ளை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். அது மாத்திரமல்ல பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து ஒலிபரப்பப்படும் ரேடியோ வெரித்தாஸ் தனது நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு வாரமும் கந்த கட்டி மாணவர்களின் ஆக்கங்களை ஒலிபரப்பு செய்தது. இதன்பின்பு 1988ஆம் ஆண்டு அதிபர் பொன் பூபாலன் இடமாற்றம் பெற்று சென்றார். புதிய அதிபராக திருமதி பி.சி மலர். நியமனம் பெற்றார். அதிபர். பி.சி மலர் 1991ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். அந்த வெற்றிடத்துக்கு மீண்டும் அதிபர் பொன் பூபாலன் நியமனம் செய்யப்பட்டார்.

தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு வரை கந்த கட்டி தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் பதவியை அதிபர் பொன். பூபாலன் வகித்தார்.

பின்னர் பாடசாலையைப் பொறுப்பேற்ற பொன் இராஜகோபால் காலத்தில் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் விருதுகளைத் தட்டிக்கொண்டு சூழல் நேயச் செயற்பாடுகளிலும் புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் கல்விச் செயற்பாடுகளிலும் புதிய பாதையில் பயணித்து மலர்ச்சியடைந்து தேசியத்தில் முத்திரை பதித்தது.

2016 ஆம் ஆண்டின் பின்னர் பாடசாலையைக் கையேற்ற T.சந்திரகுமார் மாகாண மட்ட உற்பத்தி திறன் போட்டியில் பாடசாலைக்கு கீர்த்தியைப் பெற்றுக் கொடுத்து தமிழ் மொழித் தினப்போட்டிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் கல்விப் பெறுபேற்றிலும் முன்னேற்றம் பெற்றுச் செல்கிறது.

2019 ஆம் ஆண்டின் பின்னர் கந்தகட்டி ஆரம்பப் பாடசாலை உதயமாகி அதிபர் பொன்னையா ஜமுதராஜாவின் முனைப்பான பணியில் முன்னகர்கிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் 30 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், பல்துறை சாதனையாளர்கள், பண்பாளர்கள் என பலரையும் உருவாக்கியுள்ளது.

மருதமுத்து நவநீதன்
புசல்லாவை தினகரன் நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I. பின்வரும் பந்தியை வாசித்து, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை தருக.**

பரதன் இராமன் இருந்த இடத்தை அடைந்தான். இராமனைக் கண்டதும் கண்களில் நீர் பெருக அண்ணா என்று கதறிய வண்ணம் இராமன் காலடியில் விழுந்தான். அதன் பின்னர் அவனால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுதான்.

1. பந்தியிலுள்ள உயர்திணை, ஒருமை, வினைச்சொல்லினை தருக.

……………………………………………………………………………………

2. பந்தியிலுள்ள அடுக்குமொழிச் சொல்லைத் தெரிக.

……………………………………………………………………………………

3. இராமன் காலடியில் விழுந்தது யார்?

……………………………………………………………………………………

4. கண்களில் என்ற சொல்லுக்கு ஒத்த சொல்லைத் எழுதுக.

……………………………………………………………………………………

5. கண்களில் நீர் பெருக என்ற வாக்கியத்தின் பொருள் யாது?

……………………………………………………………………………………

6. இராமனின் தம்பி யார்?

……………………………………………………………………………………

**II. பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

7. குறவன் மாலை கட்டினான்.

……………………………………………………………………………………

8. சீமான் உதவி புரிந்தான்.

……………………………………………………………………………………

**III. கீழ்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.**

9. வெள்ளிடை மலை - ……………………………………………………………..

10. நகமும் சதையுமாக - ……………………………………………………………

11. வயிற்றெரிச்சல் - ……………………………………………………………………

**IV. பின்வரும் வாக்கியத்திலுள்ள பயனிலை அடைமொழியை தெரிவு செய்து கோடிடுக.**

12. சின்னத் தம்பி அழகிய பந்தை வேகமாக அடித்தான்.

13. மானைக் கண்ட சிங்கம் கர்ஜித்தவாறு பாய்ந்து கடித்தது.

**V. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.**

14. i. மணல்மேடு - ………………………. ii. கற்பாறை - ……………………...….

iii. மலைத்தொடர் - …………………….. iv. மயிலிறகு - ……………...………….

**VI. இடைவெளி நிரப்புக.**
**(நகைச்சுவையாக, சரியாக, அமைதியாக)**

15. தாத்தா எதுவும் பேசாமல் ……………………………………………. இருந்தார்.

16. ஆசிரியர் கேட்ட கேள்விக்கு மாணவன் ………………...……………….. பதிலைக் கூறினான்.

17. தெனாலிராமன் ……………………………………………….…… பேசக்கூடியவன்.

**VII. பின்வரும் சொற்களை அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்துக.**
(ஊசி, எறும்பு, அன்பு, ஈசல், ஓலை)

18. ……………………………………………………………………………………

19. பொருத்தமான இணைமொழிகளை இட்டு நிரப்புக.

i. வாழ்க்கையில் …………………………...……… மாறி மாறி வரக்கூடும்

ii. அவன் …………………………… பாதையில் கால் வலிக்க நடந்து சென்றான்.

20. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. Sunflower - ………………………….. ii. River - …………………………..……

iii. Tiger - …………………………... iv. Eagle - ……………………………...

21. பின்வரும் படங்கள் உணர்த்தும் கருத்தின் சிங்கள சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.





i. ………………………………… ii. …………………………………


**VIII.**

22. 94371 என்ற எண்ணினால் கீழே குறிக்கப்படும் பெறுமானங்களைக் குறிப்பிடுக.

| | இலக்கம் | பெறுமானம் |
|---|---|---|
| i. பத்தாயிரத்தினிடம் | ………………. | ………………. |
| ii. நூறினிடம் | ………………. | ………………. |
| iii. பத்தினிடம் | ………………. | ……………….. |


23. பேருந்தொன்று மு.ப. 10.15 இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு பி.ப. 11.30க்கு கண்டியை அடைந்தது எனில் அப்பயணத்திற்கு செலவாகிய நேரம் என்ன?

……………………………………………………………………………………

24. 

இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………




**மேலேயுள்ள வரைபடத்தினை அவதானித்து விடை தருக.**

25. பஸ் தரிப்பிடத்திலிருந்து மரம் வரையான தூரம் எவ்வளவு?


……………………………………………………………………………………

26. கோயிலிலிருந்து மரம் வரையான தூரத்திற்கும் வீட்டிலிருந்து மரம் வரையான தூரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு தூரம்?

……………………………………………………………………………………

27. கிரிஸ் பஸ் தரிப்பிடத்திலிருந்து வீடுவரை பயணித்தானெனில் எத்தனை Km தூரம் சென்றிருப்பான்?

……………………………………………………………………………………

28. 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியை தசமமாகத் தருக.

……………………………………………………

29. பதினைந்தாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தாறு இதனை எண்ணில் எழுதுக.

……………………………………………………………………………………

**IX. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடமானது
i. களுத்துறை ii. காலி iii. திருகோணமலை

31. மூடாமல் சமைக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்
i. பலா ii. மரவள்ளி iii. ஈரப்பலா

32. இரவில் திரியும் பறவையினம் அல்லாதது
i. காகம் ii. ஆந்தை iii. வௌவால்

33. ஒருவர் தன்னுடைய வதிவிடத்தை உறுதிசெய்ய செல்லவேண்டிய இடமானது
i. பிரதேச செயலகம் ii. பொலிஸ் நிலையம்
iii. கிராம அலுவலகம்

34. ஒருவருக்கு துருப்பிடித்த ஆணி குத்தினால் தாமதமின்றி அவருக்கு குடிக்கக் கொடுக்க வேண்டிய மூலிகை
i. மரமஞ்சள் ii. துளசி iii. கொத்தமல்லி

35. கலா வாவியை கட்டுவித்த மன்னன்
i. மகாசேனன் ii. தாதுசேனன் iii. பண்டுகாபயன்

(18ஆம் பக்கம் பார்க்க)

17 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்


36. தாவரத்தின் பூவிலிருந்து தாவரத்திற்கு கிடைக்கும் பயன்
i. நறுமணத்திற்கு ii. இனப்பெருக்கத்திற்கு iii. அழகுக்கு

37. நிலநடுக்கத்தின் போது தன்னை பாதுகாக்க உடனடியாக ஒருவர் செய்ய வேண்டியது
i. இருக்கும் இடத்திலேயே இருத்தல் ii. மரத்தின் கீழே இருத்தல்
iii. திறந்த வெளிக்குச் செல்லல்

38. விலங்குகளின் மூலம் பரம்பல் அடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
i. இறப்பர், கடல் மாங்காய் ii. காசித்தும்மை, மரமுந்திரிகை
iii. மரமுந்திரிகை, புலிநகம்

39. உடலுக்கு தேவையான புரதத்தை வழங்கும் விலங்குணவு
i. பருப்பு ii. சோயா iii. மீன்


40. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள கோள்கள் இரண்டும் முறையே
i. புதன், வெள்ளி ii. வெள்ளி, புதன் iii. புதன், செவ்வாய்

41. 
படத்திலுள்ள இலையை கொண்ட தாவரமானது
i. வெண்டி
ii. பப்பாளி
iii. மரவள்ளி

42. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேக பாதை எது?
i. வடக்கு அதிவேக பாதை ii. தெற்கு அதிவேக பாதை
iii. கட்டுநாயக்க அதிவேக பாதை

43. நீரில் மாத்திரம் வாழும் பிராணியானது
i. ஆமை ii. தவளை iii. இறால்

44. மண் அரிப்பில் அதிகளவு செல்வாக்கு செலுத்தும் காரணியானது
i. மரங்களை வெட்டுதல் ii. புல் வளர்த்தல் iii. மரங்களை வளர்த்தல்

45. 
இக்குறியீடு உணர்த்துவது
i. இடி மின்னல் தாக்கம்
ii. மின்சாரம் தாக்குதல்
iii. மீள் சுழற்சி

46. கூட்டுப்பசளை செய்ய பயன்படும் பொருளானது
i. இலை, பிளாஸ்ரிக் ii. கடதாசி, இலை iii. இலை, சமையல் கழிவு

47. பின்வருவனவற்றுள் நீரில் மிதக்கும் பொருளானது
i. கல் ii. கண்ணாடி iii. பனிக்கட்டி

48. இலவசக் கல்வியின் தந்தை எனப் புகழப்பட்டவர்
i. கலாநிதி ரி.பி.ஜாயா ii. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
iii. கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர

49. பின்வருவனவற்றுள் நீருடன் தொடர்புறாத சம்பிரதாயமானது
i. மருத்துநீர் தேய்த்து குளித்தல்
ii. சில மதத்தினர் இறந்த உடலை குளிப்பாட்டுதல்
iii. திருமணத்தின் போது இந்துக்கள் அக்னியை வலம் வருதல்

50. எல்லா இலங்கை நாணயத் தாள்களிலும் கையொப்பமிடுபவர்கள்
i. நிதியமைச்சர், பிரதியமைச்சர் ii. நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர்
iii. நிதியமைச்சர், ஜனாதிபதி

51. இலங்கை தேசப்படத்தில் சரணாலயம் எந்நிறத்தினால் குறிக்கப்பட்டிருக்கும்
i. சிவப்பு ii. பச்சை iii. நீலம்

52. இலங்கை சர்வதேச விமான நிலையம் அல்லாதது
i. கட்டுநாயக்க ii. மத்தள iii. பலாலி

53. நான்கு இதழ்களை மட்டும் கொண்ட மலருக்கு உதாரணம்
i. காட்டு மல்லிகை ii. மல்லிகை iii. வெட்சி

54. தென்மாகாணத்தை சேர்ந்த ஒரு நகரம்
i. களுத்துறை ii. பலாங்கொடை iii. அம்பலாங்கொடை

55. தொடர்பாடலுக்குரிய அச்சு ஊடகம் அல்லாதது
i. வானொலி ii. சுவரொட்டி iii. பத்திரிகை

56. அலங்கார வேலைப்பாட்டு தையலில் பூவின் காம்பைத் தைப்பதற்கு உகந்த தையல் முறையானது
i. விசும்புத் தையல் ii. நரம்புத் தையல் iii. கம்பளித் தையல்

57. உலகிலேயே மிகப்பெரிய முலையூட்டியானது
i. யானை ii. திமிங்கலம் iii. சிங்கம்

58. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் கலக்கும் போது உண்டாகும் நிறம் யாது?
i. கபிலம் ii. ஊதா iii. செம்மஞ்சள்

59. 
உருவிலுள்ள கால்களைக் கொண்ட பறவையினம்
i. காகம்
ii. கழுகு
iii. கோழி

**X.**

60. “நான் சென்ற சுற்றுலா” என்ற தலைப்பில் ஐந்து சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் சரியான எழுவாய், பயனிலை தொடர்பினை கொண்டிருக்க வேண்டும்.

……………………………………………………………………………………….

……………………………………………………………………………………….

………………………………………………………………………………………....

## கடந்த வார (07.04.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 1 | 21. 1 | 31. 1 |
| 2. 3 | 12. 2 | 22. 3 | 32. 2 |
| 3. 1 | 13. 3 | 23. 2 | 33. 3 |
| 4. 2 | 14. 2 | 24. 3 | 34. 1 |
| 5. 1 | 15. 1 | 25. 3 | 35. 3 |
| 6. 1 | 16. 1 | 26. 2 | 36. 3 |
| 7. 2 | 17. 2 | 27. 1 | 37. 1 |
| 8. 1 | 18. 3 | 28. 2 | 38. 1 |
| 9. 2 | 19. 2 | 29. 3 | 39. 2 |
| 10. 1 | 20. 2 | 30. 2 | 40. 1 |

# நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

## அருட்கடாட்சங்கள் கிடைத்து வாழ்வு சுபீட்சமடையட்டும்



இறைவழிபாடுகளில் திளைத்திருந்த நமக்கு நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதை இறைவனின் அருட்கடாட்சமாகப் பார்ப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, முஸ்லிம்களுக்கு இது உன்னத தினம். லௌகீக மோகத்திலிருந்து ஆத்மீக உலகுக்கான ஆயத்தங்களை அதிகளவில் செய்வதற்கே புனித ரமழான் அருளப்பட்டது. இவ்வாறு நல்லமல்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் அருள் கிடைக்கட்டும்.

பிறரது தேவைகள், அபிலாஷைகளை கௌரவித்து வாழ்வதையே இஸ்லாம் விரும்புகிறது. பல்லின சகோதரர்கள் வாழும் நமது நாட்டில் முஸ்லிம்களாகிய நாம் முன்மாதிரியாகச் செயற்பட்டு வழிகாட்ட வேண்டியுள்ளது. விதண்டாவாதங்கள், வீண் தர்க்கங்களில் ஈடுபடாமல் ரமழானின் பயிற்சியை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பதே சிறந்தது.

இந்நன்னாளில் முஸ்லிம்களின் ஹலாலான அபிலாஷைகள் நிறைவேற நானும் பிரார்த்திக்கிறேன்.

## பேதங்களைக் களைந்து நிலையான சமாதானத்திற்காக உழைப்போம்

(பாலமுனை விசேட நிருபர்)



இனங்களுக்கிடையில் ஒற்றுமை, சகவாழ்வினை ஏற்படுத்தி நாட்டின் நிலையான சமாதானத்திற்காக சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, ரமழான் மாதம் ஈமானுக்கு புத்துயிர் ஊட்டும் வசந்த காலமாகும். செயலிழந்துள்ள உள்ளங்கள் உயிரோட்டம் பெறுவதற்கும் அல்லாஹ்வை நினைவு கூறுவதற்கும், பாவம் செய்தவர்கள் அதிலிருந்து மீள்வதற்குமுரிய பொற்காலமாக ரமழான் மாதம் காணப்படுகின்றது. இம்மாதத்தில் நோன்பு நோற்று நற்கிரிகைகளில் ஈடுபட்ட நம்மனைவரது நற்செயல்களையும் எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டும்.

கருணையும், நன்மைகளும் நிறைந்த, தவறுகள் மன்னிக்கப்படும் புனிதமிகு அல்குர்ஆன் அருளப்பட்ட இப்புனிதமான ரமழான் மாதத்தில் ஈமானோடும் பற்றுதியோடும் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சத்திற்காக, நோன்பு நோற்று நற்காரியங்களிலும் ஈடுபட்டு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடி மகிழும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லைகள் நிர்ணயம்

### கருத்துகள், யோசனைகளுக்கு கால அவகாசம்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பிரிவுகளுக்கான தேசிய எல்லை நிர்ணய கமிட்டியினால் அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள புதிய எல்லைகள் நிர்ணயம் தொடர்பான வரைபு குறித்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் கருத்துகள் மற்றும் யோசனைகளை சமர்ப்பிக்க எதிர்வரும் 27 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனைகள் மாவட்ட செயலாளர் மற்றும் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்ற செயலாளருக்கும் பிரதியுடன் நில அளவையாளர் நாயகம் திணைக்களக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள தேசிய எல்லை நிர்ணயக் கமிட்டிக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் உள்ளூராட்சி மன்றங்களின் நகர ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறான யோசனைகள் சம்பந்தமாக ஆணையாளர், செயலாளர்களின் விதிப்புரைகளுடன் உடனடியாக தேசிய கமிட்டிக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றம் தொடர்பிலான எல்லை நிர்ணய வரைபு அறிக்கையை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் விடயம் தொடர்பான ஆர்வலர்கள் ஆராய்ந்து பார்க்க ஏதுவாகப் பார்வைக்கு வைக்குமாறும் இது சம்பந்தமாக தேவையான விளக்கத்தை வழங்கமாறும் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன, ஒற்றுமையை சுமந்து வந்த ரமழான்



சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்ற பேதமின்றி எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டில் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப இந்நாளில் திடசங்கற்பம் பூணுவோம் என்று இலங்கை தேசிய ஐக்கியத்துக்கான சர்வமதக் கூட்டமைப்பின் முஸ்லிம் விவகாரங்களுக்கு பொறுப்பான சம தலைவர் அஷ் செய்யது கௌரவ கலாநிதி ஹஸன் மௌலானா அல் காதிரி தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையில் இன, மத ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் ஒன்றுபடுத்தக்கூடியதாக இவ்வருட ரமழான் அமைந்திருந்தது. நாட்டின் பல பாகங்களிலும் சர்வமதத் தலைவர்கள் தலைமையில் நோன்பு துறக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விகாரைகளிலும் சுதந்திர சதுக்கம், காலிமுகத்திடல் உட்பட ஏனைய பொது இடங்களிலும் நோன்பு துறக்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இவை அனைத்திலும் எல்லா இன, மத மக்களும் பங்குபற்றினார்கள். இதன் ஊடாக இன, மத ஒற்றுமை வலியுறுத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஈதுல் பித்ர் நோன்பு பெருநாளைக் கொண்டாடும் அனைவரும் இன, மத, கட்சி பேதங்கள் பாராது ஒற்றுமையாக வாழ வேண்டும். இதன் நிமித்தம் எமது முன்னோரை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

## ஒற்றுமைக்கும் சகவாழ்வுக்கும் திடசங்கற்பம் பூணுவோம்



ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த இனிய பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, நோன்பு காலம் என்பது முஸ்லிம்களின் வசந்த காலமாகும். அந்தளவுக்கு ரமழானில் மகத்துவமிக்க நன்மைகள் பொதிந்துள்ளன. இப்புனித மாதத்தில் கற்றுக் கொண்ட வாழ்க்கைப் பாடத்தையும் படிப்பினைகளையும் எதிர்வரும் காலங்களில் நாம் எடுத்து நடத்தல் அவசியமாகும்.

எனவே மக்களிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளை மறந்து எதிர்காலத்தில் ஒற்றுமையுடனும் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் சகவாழ்வுடனும் வாழ வேண்டும் என்று வேண்டிக் கொள்வதோடு எனது இதயம் கனிந்த பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இடமாற்ற சபை முறையாக முன்னெடுத்த ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்து செய்யப்படாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் முறையாக ஆசிரிய இடமாற்ற சபை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த இடமாற்றங்கள் எந்த வகையிலும் ரத்துச் செய்யப்படமாட்டாது என கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

10 வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் சேவையாற்றியுள்ள ஆசிரியர்களுக்கு அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு உரிய வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களுக்கு அவர்களுக்கான உத்தியோகபூர்வ கடமைகளை வழங்காமலிருப்பதற்கு பாடசாலை அதிபர்களுக்கு எத்தகைய அதிகாரமும் கிடையாது என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அந்தவகையில் 2017ஆம் ஆண்டு முதல் இந்த முறைமையில் ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ள போது 4 ஜனரஞ்சக பாடசாலை அதிபர்கள் ஒன்றிணைந்து முழுமையான இடமாற்ற செயற்பாடுகளை சிக்கல்களுக்குள்ளாக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேல் சேவையில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் வர்த்தக நோக்கத்தில் தமக்கு நெருக்கமான ஆசிரியர்கள் சிலரை அதேபாடசாலையில் தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கு ஆளுநர் அலுவலகத்தில் தேசிய மரநடுகை நிகழ்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்



'நாட்டுக்கு சுவாசிக்கும் பலன் தரும் மரத்தை நடுவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் தேசிய மர நடுகை நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (20) நடைபெற்றது.

இந்த மர நடுகை நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கலந்துகொண்டதுடன், மரக்கன்றை நட்டு வைத்தார்.

இதில் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் சலுகா தினேந்திர பிரேமதிலக, ஆளுநரின் உதவிச் செயலாளர் ஏ.ஜி.தேவேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

## கோட்டைமுனையில் சூழலை அசுத்தமாக வைத்திருந்த சிலருக்கு எச்சரிக்கை!

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்



மட்டக்களப்பு மாநகர எல்லை பிரிவுக்கு உட்பட்ட கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நேற்று வியாழக்கிழமை (20) டெங்கு சோதனை நடத்தியதாகவும் இதன்போது, அசுத்தமாக சூழலை வைத்திருந்த சிலருக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் டெங்கு பாதிப்புக்குரிய மாவட்டமாக சுகாதார அமைச்சினால் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலுக்கு அமைய, அந்த மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணனின் தலைமையில் அந்தந்தப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் ஒத்துழைப்புடன் இந்த டெங்கு சோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது வீட்டு வளாகங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் உள்ளிட்டவை சோதனை செய்யப்பட்டு, உரியவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

## மூதூரில் 50 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் விநியோகம்

மூதூர் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் 50 குடும்பங்களுக்கு ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பன் அமைப்பின் நிதி உதவியில் உலர் உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) வழங்கி வைக்கப்பட்டன.

ஹஸன் அஸ்ஹரி நற்பணி மன்றத்தின் தலைவர் அல்ஹாஜ் எச்.எம்.தாரீக்கின் ஏற்பாட்டில் மூதூர் முதியோர் சங்க கட்டடத்தில் வைத்து இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. மூதூர் முதியோர் சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற குடும்பங்கள், ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பன் அமைப்பிடம் முன்வைத்த வேண்டுகேளை அடுத்து இவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஹஸன் அஸ்ஹரி நற்பணி மன்றத்தின் நிர்வாகிகள், முதியோர் சங்க நிர்வாகிகள், சமயத் தலைவர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டதாக, மூதூர் முதியோர் சங்கத்தின் செயலாளர் ஏ.எஸ்.எம்.கரீம் தெரிவித்தார்.

## கல்முனை மத்திய மருத்துவ ஆய்வுகூடத்தை பாலமுனையில் அமைக்க நடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்



கல்முனைப் பிராந்திய மத்திய மருத்துவ ஆய்வுகூடத்தை பாலமுனை மாவட்ட வைத்தியசாலையில் அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல், கல்முனைப் பிராந்தியத்திலுள்ள மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடந்த செவ்வாய்க்கிமை (18) நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்துக்குட்பட்ட ஆதார, மாவட்ட, பிரதேச மற்றும் ஆரம்ப வைத்தியசாலைகளை மையப்படுத்தி இம்மத்திய ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை சுகாதார அமைச்சின் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வழங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூட மத்திய நிலையம் அமையப் பெறும் பட்சத்தில் வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ ஆய்வுகூட வைத்திய அறிக்கைகளை விரைவாகவும் துல்லியமாகவும் வழங்க முடியும். தற்போது கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்படுகின்ற வளமுகாமைத்துவ செயற்றிட்டத்தினூடாக கொழும்பு மற்றும் பிற பகுதிகளுக்கு மாதிரிகள் வாகனங்களூடாக அனுப்பி வைக்கப்படுவதற்கு பதிலாக தற்போது கூரியர் சேவை மூலமாகவும் தபால் அலுவலகங்களூடாகவும் இதனை மேற்கொள்வதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பல மில்லியன் ரூபா சேமிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## சீரான உணவுப் பழக்கம் இன்மையே 75 வீதம் தொற்றாநோய்களுக்கு காரணம்

### பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி

ஒலுவில் விசேட நிருபர்



சீரான உணவுப் பழக்கவழக்கம் இன்மையால் இலங்கையில் 75 சதவீதமான மக்கள் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி, மருத்துவர் ஏ.யூ.அப்துல் சமட் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை (18) பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.ஏ.அப்துல் மலீக் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றிய போது,

"எமது பிரதேசத்தில் வீடுகளில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் கைத்தொழிலில் பெரும்பாலானோர் ஈடுபட்டு வருகின்றார்கள். எண்ணெய்க்காக சிலர் பாவனைக்கு உதவாத தேங்காய்களை பாவிப்பதினால் அதிலிருந்து பெறப்படும் எண்ணெய் நஞ்சுத் தன்மையாக காணப்படுவதுடன், புற்றுநோயை உருவாக்கக்கூடிய தன்மையும் காணப்படுகின்றது.

ஆகையினால், தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்கள் பாவனைக்கு உகந்த தேங்காய்களை பயன்படுத்த வேண்டும்.

மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கி நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினால் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நடமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்காக நாம் சுகாதாரமான உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்" என்றார்.

## ஆறு மாடுகளை கடத்திய இருவர் காத்தான்குடியில் கைது



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலிருந்து காத்தான்குடி பிரதேசத்துக்கு பிக்கப் ரக வாகனமொன்றில் சட்டவிரோதமாக 6 மாடுகளைக் கடத்திய இரு சந்தேகநபர்களை காத்தான்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) மாலை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், வாகனத்துடன் அம்மாடுகளையும் மீட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, காத்தான்குடி பிரதான வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்ட அவர்கள், அவ்வீதியால் பயணித்த பிக்கப் ரக வாகனத்தை பின்தொடர்ந்து சென்று, அதை காத்தான்குடியில் மடக்கிப் பிடித்து சோதனையிட்ட போதே இச்சம்பவம் தெரியவந்தது.

காத்தான்குடியைச் சேர்ந்த 35, 37 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர். அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மாடுகளை கடத்திச் சென்றமை, போலி ஆவணங்களைத் தயாரித்தமை, மாடுகளை சிறிய இடத்தில் அடைத்துவைத்து சித்திரவதை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களைக் கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## மாளிகைக்காட்டில் மூத்த உலமா காஸிமின் நினைவுப்பேருரை



சாய்ந்தமருது விசேட நிருபர்

அண்மையில் காலமான சாய்ந்தமருது, மாளிகைக்காடு உலமா சபையின் பிரதித் தலைவரும் பிரதி அதிபருமான சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீட பிரதானி மூத்த உலமா மௌலவி யூ.எல்.எம். காஸிமின் நினைவுப் பேருரையும் துஆ பிரார்த்தனையும் மாளிகைக்காடு கமு/கமு/அல் ஹுசைன் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (19) நடைபெற்றது.

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டிலும் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமரின் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ், துஆ பிரார்த்தனை நடத்தினார்.

அத்துடன், மௌலவி யூ.எல்.எம்.காஸிம் தொடர்பாக நினைவுப் பேருரையை மாளிகைக்காடு கமு/கமு/அல் ஹுசைன் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எம்.இப்றாஹிம் மற்றும் பழைய மாணவ சங்கச் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர் நிகழ்த்தினர்.

இதில் மாளிகைக்காடு கமு/கமு/அல் ஹுசைன் வித்தியாலய உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், மர்ஹூம் மௌலவி யூ.எல்.எம்.காஸிமின் குடும்பத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வின் இறுதியில் இப்தார் வைபவமும் நடைபெற்றது.

## பெரியநீலாவணையில் கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்



பெரியநீலாவணை விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை தொடர்மாடி வீட்டுத் திட்டப் பகுதியில் கேரள கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

35 வயதுடைய இளைஞர் ஒருவருக்கே இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இச்சந்தேகநபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக பெரியநீலாவணை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, இச்சந்தேகநபரை நேற்று முன்தினம் புதன்கிழமை (19) பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன், இவரிடமிருந்து 860 கிராம் கேரள கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து, இச்சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## ஆரையம்பதி பள்ளிவாசலில் இனநல்லுறவு இப்தார் நிகழ்வு




ஆரையம்பதி சிகரம் ஜும்ஆ பள்ளிவாலில் இன நல்லுறவு இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (19) மாலை நடைபெற்றது. மண்முனைப்பற்று பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எகெட் கரிட்டாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் இந்த இப்தார் நிகழ்வு நடைபெற்றது. இந்த இன நல்லுறவு இப்தார் சமூகங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சமதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வழிவகுக்குமென, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் தெரிவித்தார். (படங்கள்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# எம்பிலிபிட்டி வைத்தியசாலை சத்திரசிகிச்சை பிரிவுகளுக்கு பூட்டு

## மக்கள் அசௌகரியம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

எம்பிலிபிட்டி வைத்தியசாலையில் அறுவை சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சைப்பிரிவுகள் மூடப்பட்டுள்ளமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். இதனால் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இரத்தினபுரி, மாத்தறை, மொனராகலை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த சத்திரசிகிச்சை வைத்தியர்கள் இருவரும் தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளமையே இதற்கு காரணமென வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

மேலும் இவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட பெண் வைத்தியர் ஒருவரும் மேற்படிப்புக்காக வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாகவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

இதனால் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

சப்ரகமுவ, ஊவா மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வைத்திய சேவைக்காக வருகை தருகின்றனர்.

எனவே, வைத்தியசாலையின் இப்பிரிவுகள் மூடப்பட்டுள்ளமையால் நோயாளர்கள் தூரப்பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

எனவே விரைவில் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

## மலைச்சாரல்

### சடலம் மீட்பு



எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராவணெல்ல நீர்வீழ்ச்சியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இராவணெல்ல நீர்வீழ்ச்சியிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் வீதியின் பாலத்திற்கு கீழ் இருந்து நேற்றுமுன்தினம் மாலை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு எல்ல பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. மரணத்துக்கான காரணமும் இதுவரையில் கண்டறியப்படவில்லையென எல்ல பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

## இளைஞர்கள் இருவர் கைது

மொனராகலை பிரதேசத்தில் 15 வயது சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞனொருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச்சென்றே இளைஞன் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான இளைஞனும் சிறுமியும் காதலர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும் இச்சம்பவம் தொடர்பில் சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தனது வீட்டுக்கு அருகில் வசிக்கும் நபரொருவரும் 8 வயதில் தன்னை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக வாக்குமூலம் வழங்கியுள்ளார். இதனையடுத்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 19 வயதான காதலனும், சிறிய வயதில் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 28 வயதான நபரொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைத்திய பரிசோதனைக்காக சிறுமி, மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை சியம்பலாண்டு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரதமர் தலைமையில் பதுளை மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுக்கூட்டம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை மாவட்ட தேசிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தி இணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு அரச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், மாவட்ட தேசிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தி இணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், இராஜாங்க அமைச்சர்களான, அசோக்க, ஜானக்க வக்கும்பர, சாமர சம்பத் தசநாயக்க, ஏ.அரவிந்தகுமார் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்சன தெனிபிட்டிய, வடிவேல் சுரேஷ், திஸ்ஸ குட்டியாராய்ச்சி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் பதுளை மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள், தேவைகள், குறைபாடுகள் குறித்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், அது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

# ஸ்ரீபாத யாத்திரையை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவால் தீர்மானம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

ஸ்ரீ பாத யாத்திரையை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபாத யாத்திரை குறித்து ஏற்பாட்டுக் குழுவினரின் கலந்துரையாடலொன்று சிவனொளிபாதமலையின் தலைவரும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான பெங்கமுவே தம்மதின ஹிமி தலைமையில் கடந்த 18ஆம் திகதி இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சிவனொளிபாத பருவகாலத்தில் பல பிரச்சினைகள் இடம்பெற்றதாக அறிய முடிகிறது. இவற்றை கருத்தில் கொண்டே ஸ்ரீபாத யாத்திரையை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சிவனொளிபாதமலையின் தலைவரும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான பெங்கமுவே தம்மதின ஹிமி,

சிவனொளிபாதமலை யாத்திரை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பிக்கப்பட்டு வெசாக் பௌர்ணமி தினத்தில் நிறைவடைவதாக அவர் தெரிவித்தார்.

## நகர்வலம்

# கொழும்பு - சிலாபம் பிரதான வீதியில் விபத்து; இரு சிறுவர்கள் படுகாயம்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

கொழும்பு சிலாபம் பிரதான வீதியில் ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் (19) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் 15,16 வயதுகளையுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

கொழும்பு சிலாபம் பிரதான வீதியில் ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் (19) இரவு 8.00 மணியளவில் மோட்டார் சைக்கிள், வான் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு சிறுவர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்த இரு சிறுவர்களும் நீர்கொழும்பு பெரியமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

விபத்து தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



உடப்பு கிரிக்கெட் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 11 அணிகள் பங்குபற்றி இறுதிப்போட்டிக்கு "வளர்மதி' மற்றும் "புல் அன்டர்ஸ்"அணிகள் தெரிவாகியதுடன் இறுதிப்போட்டியில் 'வளர்மதி' விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இதில் வளர்மதி அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும், வெற்றிக் கேடயமும், 'புல் அன்டர்ஸ்' அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதன்போது உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் இரா.கலைச்செல்வன்,உடப்பு காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (படம்: உடப்பு குறூப் நிருபர்)

# உடுகம்பொலவில் முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவின் ஜனனதினம்

முன்னாள் அமைச்சரும், முன்னாள் ஆளுநரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியுமான மறைந்த ரெஜி ரணதுங்கவின் 86ஆவது ஜனனதின நிகழ்வுகள் உடுகம்பொலவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தலைமையில் நாளை 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. இதன்போது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



ரெஜி ரணதுங்க 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி உடுகம்பலையில் பிறந்தார். மினுவாங்கொடை நாலந்தா கல்லூரி, நீர்கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி மற்றும் கோட்டே ஆனந்தா கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

அவர் ருமேனிய குடியரசு பல்கலைக்கழகத்தில் அரசறிவியலில் பட்டம் பெற்றார்.

1962ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான ரெஜி ரணதுங்க, 1989ஆம் ஆண்டு முதன் முதலாக பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

1994 தேர்தலின் பின்னர், போக்குவரத்து, சுற்றாடல் மற்றும் சிவில் விவகாரங்கள் பிரதி அமைச்சராக பதவியேற்ற ரெஜி ரணதுங்க, துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பிரதி அமைச்சராகவும், சிவில் விமான சேவை, உணவு மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சுப் பதவிகளிலும் பணியாற்றியுள்ளார்.

ரணதுங்க தேசிய கைப்பந்து சம்மேளனத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



முத்தலிப் மன்றத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வுகள் அண்மையில் அநுராதபுரம் புதுக்குளத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# இரு வீதி விபத்துக்களில் இருவர் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மரதண்கடவல மற்றும் ஒயாமடுவ ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற இரு வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மரதண்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அநுராதபுரம் தம்புள்ளை ஏ 9 வீதியின் 101 ஆவது மைல் கல் பிரதேசத்தில் கெக்கிராவ நோக்கி பயணித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.


மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோருடன் காயமடைந்த நிலையில் மரதண்கடவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளதாக மரதண்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

ஒயாமடுவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட 14 ஆம் இலக்க மைல் கல் பகுதியில் எலயாபத்துவ பகுதியிலிருந்து ஒயாமடுவ நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிர்திசையில் வந்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞனொருவன் உயிரிழந்துள்ளார்.

பேமடுவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனொருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஒயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் திருப்பணி சபை ஸ்தாபிப்பு

**உடப்பு குறூப் நிருபர்**



உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமாசமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் ஆடித்திருவிழாவின் பின்னர் பாலஸ்தானம் செய்து ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆலயத்தின் சில இடங்களில் வெடிப்பு மற்றும் சில இதர வேலைகள் காரணமாக ஆலயத்தை ஓரளவு திருத்தப்பணி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்து ஆலய பரிபாலன சபையின் ஒத்துழைப்புடன் திருப்பணி சபையொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் உள்ள அங்கத்தவர்கள் தமது சிரமத்தையும் பாராது நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஓரளவு நிதியுதவி கிடைத்தாலும் இன்னும் கூடுதலான பணம் தேவையாக உள்ளது. எனவே பார்த்தசாரதிப் பெருமாளின் கருணையால் அன்பர்கள் நிதி வழங்கி இவ்வேலைத்திட்டத்தை நிறைவடைய நிதியுதவி செய்யுமாறு திருப்பணி சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

**விலைமனுக்களுக்கான அழைத்தல் - ஒரு வருட கால எல்லைக்கானது (2023/2024)**

**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் விஸ்தரிப்பிற்காக (கொடகமவிலிருந்து மத்தள வரையுமானது) எரிபொருளுடனான குத்தகை அடிப்படையில் 1 எண்ணிக்கையான தொழிலாளர்களை எடுத்துச் செல்லும் ட்ரக் மற்றும் 1 எண்ணிக்கையான அகழ்தல் இயந்திரம் (பிசி30) ஆகியவற்றை வாடகைக்கு அமர்த்துதல்**

**(CONTRACT No.: RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/55&56)**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கள் 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்படும்.
3. இந்த விலைமனுவின் மேலதிக விபரங்களை **www.rda.gov.lk** என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்தினூடாகவும் பெலியத்த, கஹாவத்த, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவு, பெறுகைப் பிரிவிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 047-2251892, 0766265264, 0763179185. தொலைநகல்: 0472251891, **prcbeleom.rda@gmail.com)**

---

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ˙திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/ PT/6448(MP) | Catenary Tension Cylinder & Repair Kits for Catenary Trolley Rope Reeving System of 65T ZPMC STS Cranes at ECT | 20,000.00 | 1,000.00 | 2023.05.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6447(MP) | Spares for Auto Greasing System of Stinis Twin Lift Spreaders at ECT | 20,000.00 | 1,000.00 | 2023.05.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/015 | 01 No. Industrial Type Washing Plant | 50,000.00 | 1,000.00 | 2023.05.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/13/14 | GI Box Bar – 600 Nos. & MS Plate – 230 Nos. | 180,000.00 | 3,500.00 | 2023.05.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/22/ PT/01/057 | Deck Shoes for the year 2022 (600 pairs) | 25,000.00 | 1,000.00 | 2023.05.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/054 | 1080 KGS. Grease EP 02 | 24,000.00 | 1,000.00 | 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/01/052 | 01 No. of Propeller Unit of Survey Boat "ECHO 3" | 70,000.00 | 1,000.00 | 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/03/054 | Spare parts for the UD Nissan Prime Movers | 35,000.00 | 1,000.00 | 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/13/54 | Spares of RAM Twin Spreader | 20,000.00 | 1,000.00 | 2023.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/055 | Spares for Grove Man Elevator | 20,000.00 | 1,000.00 | 2023.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/01/053 | 3800 Nos. Bar Soap (Local) 650 Grams | 190,000.00 | 3,500.00 | 2023.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/03/052 | 50,000 KG Abrasive Copper Grit SLAG | 50,000.00 | 1,000.00 | 2023.05.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/16/055 | Spare parts for the Terberg Yard Tractors | 45,000.00 | 1,000.00 | 2023.05.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/051 | 02 Nos. of RH and LH Propeller units of the Pilot Boats | 200,000.00 | 3,500.00 | 2023.05.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/01/054 | Front Leaf Spring Set for the UD Nissan Prime Movers | 25,000.00 | 1,000.00 | 2023.05.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/054 | 3600 KGS. Grease EP-2 | 120,000.00 | 3,500.00 | 2023.05.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/13/055 | Spare Parts for the Terberg Yard Tractors/YT 220 | 30,000.00 | 1,000.00 | 2023.05.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/055 | 02 Nos. Transmission Control Module (TCM) | 45,000.00 | 1,000.00 | 2023.05.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குனராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஏப்ரல் 21 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,
கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

---

## இலங்கை கட்டளைகள் நிறுவனம்

**(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)**

## வேன்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான விலைமனுக்களின் அழைத்தல் – 2023/24

2023/24 ஆம் ஆண்டிற்காக மாதாந்த பணக்கொடுப்பனவு அடிப்படையில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு 05 எண்ணிக்கையுடைய இரட்டை நோக்குடைய (Duel-Purpose Vans) வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

2011.01.01 ஆம் திகதிக்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட கொழும்பின் புறநகர் பகுதிகளை அமைவிடங்களாக கொண்டுள்ள வேன்கள் பரிசீலிக்கப்படும்.

2023.04.21 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கை ரூபா 2,000 + SSCL + VAT ஆகியவற்றை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர், கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா இடம், 17 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாக பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல்கள் 2023.05.10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - பெறுகைக் குழு,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா இடம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-08.
தொலைபேசி: 0112 671567 நீடிப்பு: 212**

---

## கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD13/1008/2023 | வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் உணவக (Cafeteria) செயற்பாடுகளை வழங்குவதற்கான விலைக்கோரல் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD18/896/2023 | கொழும்பு மாநகர சபைக்கான பொது முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தீர்வு | | ரூபா 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின்** இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
  அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425** எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
  ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
  - **வட்டார அலுவலகம் 04,**
    இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
    கொழும்பு 06.
  - **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
    மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

**அ.** ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை **2023-05-10ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து** விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆ.** விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் **2023 மே 10ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப்** பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

**இ.** நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். **விலைமனு முறி/ பிணை 2023.10.08ஆம் திகதி வரை** செல்லுபடியாதல் வேண்டும்.

**ஈ.** உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் **கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் **2023 மே 11ஆம் திகதி மு.ப. 10.00 மணி** அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

**உ.** **2023 மே 11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும்** என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஊ.** 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.**

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடன் இலக்கம் : 902728000001 மற்றும் 902523000025**

**கடனாளியின் முழுப் பெயர் : தினேஷ் சம்பத் வனிகசேகர மற்றும் குலதுங்க முதியன்சேலாகே கமனி மானெல் குலதுங்க.**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி "**தினமின**", "**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம் 134**, **பெத்தகான வீதி**, **கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.05.22** ஆம் திகதி **மு.ப 10.00** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **1351** ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, **மூன்று கோடி தொன்னூற்று ஒரு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து எட்டு ரூபா நாற்பத்து ஐந்து சதம் (ரூபா 39,159,858.45), 2023.01.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**1. கடன் தொகை 902728000001**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **இரண்டு கோடி ஐம்பத்து நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து நானூற்று முப்பத்து ஐந்து ரூபா அறுபத்து மூன்று சதத்தினையும் (ரூபா 25,402,435.63) 2023.01.31** ஆம் திகதி வரையிலான நிலுவையாக **முப்பது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து நூற்று எழுபத்து ஐந்து ரூபா ஐம்பத்து எட்டு சதத்தினையும் (ரூபா 3,091,175.58)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **இரண்டு கோடி எண்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து அறுநூற்று பதின் ஒன்று ரூபா இருபத்து ஒரு சதத்தினையும் (ரூபா 28,493,611.21)**

**இரண்டாவது கடன் தொகை 902523000025**

**1351** ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **எழுபத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து நூற்று ஐம்பத்து ஐந்து ரூபா தொன்னூற்று ஆறு சதத்தினையும் (ரூபா 7,758,155.96), 2023.01.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள **இருபத்து ஒன்பது இலட்சத்து எட்டாயிரத்து தொன்னூற்று ஒரு ரூபா இருபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 2,908,091.28)** இதன்படி முழுத் தொகையான **ஒரு கோடி ஆறு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து இருநூற்று நாற்பத்து ஏழு ரூபா இருபத்து நான்கு சதத்தினையும் (ரூபா 10,666,247.24)** இதன்படி மொத்த கூட்டுத் தொகையாக, **மூன்று கோடி தொன்னூற்று ஒரு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து எட்டு ரூபா நாற்பத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 39,159,858.45)** அறவீடு செய்வதற்கும்.

2. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **இரண்டு கோடி ஐம்பத்து நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து நானூற்று முப்பத்து ஐந்து ரூபா அறுபத்து மூன்று (25,402,435.63)** அறவிட வேண்டிய **15.94%** வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **எழுபத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து நூற்று ஐம்பத்து ஐந்து ரூபா தொன்னூற்று ஆறு (ரூபா 7,758,155.96)** அறவிட வேண்டிய **6.93%** வீத வருடாந்த வட்டியினையும் **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,
3. **2023.02.01** திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான **ஐம்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நூற்று தொன்னூற்று ஏழு ரூபா எண்பத்து ஒரு சதத்திற்காக (ரூபா 5,586,197.81)** மாதாந்தம் **2.00%** தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 902728000001 மற்றும் 902523000025**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

மத்திய மாகாணத்தில், **மாத்தளை** மாவட்டத்தில், **தம்புள்ள** நகரசபை எல்லையில் வகபனாவ பல்லேசிய பத்துவவில், தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில், தம்புள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவில். தம்புள்ள கிராமத்தில் அமைந்துள்ள **கல்வெடியவத்த** மற்றும் **முகலன் ஹேன** என அழைக்கப்படும் காணிக்கு **2014 செப்டம்பர் 27 ஆம்** திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் **ஏ.எம் அனுரரத்ன** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **3506 B என்ற** இலக்க காணிவரைபடத்தின்படி **X என்ற** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** தம்மன்ன கால்வாயும் **கிழக்கே 3506 A** என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **3C4** என்ற இலக்க காணித்துண்டும். **தெற்கே 15 அடி** பிரவேசப் பாதை மற்றும் **மேற்கே 3506 A என்ற** இலக்க காணிவரைபடத்தின்படி **3C1** என்ற இலக்க காணித்துண்டும் இங்கு குறிப்பிட்ட எல்லைகளினுள் அமைந்துள்ள ஒரு ரூட் பரப்பளவு கொண்ட **(ஏக்.00 ரூட். 01. பேச். 00)** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கும் **மேலும் மேலே 3506 B என்ற இலக்க காணிவரைபடத்தின்படி X என்ற காணித்துண்டு என்பது 3506 A என்ற இலக்க காணிவரைபடத்தின்படி 3C2 மற்றும் 3C3 என்ற இலக்க காணித்துண்டுகளின் ஒன்றிணைப்பாகும் இது பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.**

1. மேற்குறிப்பிட்ட தம்புள்ள கிராமத்தில் அமைந்துள்ள **கல்வெடியவத்த மற்றும் மூகலன் ஹேன** என அழைக்கப்படும் காணிக்கு **2006 டிசம்பர் 27** ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் **ஏ.எம் அனுரரத்ன** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **3506 A** என்ற இலக்க காணிவரைபடத்தின்படி (**ஜே. எம். ஜயசேகர** என்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **1637** ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி **3ஆம்** இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியாக குறிக்கப்பட்டுள்ளது.) **3C2** என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** தம்மன்ன கால்வாயும் **கிழக்கே 3C3** என்ற இலக்க காணித்துண்டும். **தெற்கே 15** அடி பிரவேசப் பாதை மற்றும் **மேற்கே 3506** என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **3C1** என்ற இலக்க காணித்துண்டும். அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இருபது பேச்சஸ்களாகும் **(ஏக்.00 ரூட். 00 பேச். 20)** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் **மாத்தளை மாவட்ட** காணிப்பதிவு காரியாலயத்தில் **L 81/94** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. மேற்குறிப்பிட்ட தம்புள்ள கிராமத்தில் அமைந்துள்ள **கல்வெடியவத்த மற்றும் மூகலன் ஹேன** என அழைக்கப்படும் காணிக்கு **2006 டிசம்பர் 27** ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் **ஏ.எம் அனுரரத்ன** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **3506 A** என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **(ஜே.எம். ஜயசேகர** என்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **1637** ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி **3ஆம்** இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியாக குறிக்கப்பட்டுள்ளது.) **3C3** என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** தம்மன்ன கால்வாயும் **கிழக்கே** தம்மன்ன கால்வாயும் **தெற்கே 15** அடி பிரவேசப் பாதை **மேற்கே 3C2** என்ற இலக்க காணித்துண்டும், அமைந்துள்ளன. இதன் பரப்பளவு **இருபது பேச்சஸ்களாகும் (ஏக்.00 ரூட். 00. பேச். 20)** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் **15** அடி பாதையினை பாவிப்பதற்கான உரிமையுடன் **மாத்தளை மாவட்ட** காணிப்பதிவு காரியாலயத்தில் **L16/136** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

.............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
+94 112429341
Hotline 1949

## கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**BID FOR THE SUPPLY OF STUD LINK CHAINS, SHACKLES & SUPER SWIVEL FOR ANCHOR CHAIN OF CRUDE OIL SPBM**

B/15/2023

Stud Link Chains, Shackles & Super Swivel for Anchor Chain of Crude Oil SPBM இன் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2023.05.31 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000 ரூபாவை (ரூபா 12,725.34 + 2.5% SSCL + 15% பெசேவ) அல்லது இதற்கு நிகரான தொகையை அஐடொ, யுரோ அல்லது ஐக்கிய இராட்சிய பவுண்ட்ஸ் இல் ஒவ்வொரு தொகுதிக்கும் இபெகூ இற்கு செலுத்திய பின்னர், எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது http://ceypetco.gov.lk/public-tenders/.. என்ற இபெகூ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் சர்வதேச விலைமனுதாரர்கள் ஆவணக் கட்டணத்தை பின்வருமாறு செலுத்திய பின்னர் பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கணக்கின் பெயர் : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்.
கணக்கிலக்கம் : 004-1-001-1-0208633
வங்கி : மக்கள் வங்கி, கூட்டுரு வங்கியியல் பிரிவு, ANCL கட்டிடம். இல. 34, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.
BANK CODE : 7135
BRANCH CODE : 004
SWIFT CODE : PSBKLKL

அனைத்து விலைமனுக்களும் 925,000 ரூபா பெறுமதியான அல்லது அஐடொ, யுரோ அல்லது ஐக்கிய இராட்சிய பவுண்ட்ஸ் ஆகியவற்றின் நிகரான தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.06.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியான இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், வளமுள்ள விலைமனுதாரர்கள் **https://eroc.drc.gov.lk/** என்ற இணையதளத்தினூடாக கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த பின்னர் பிசிஏ-3 சான்றிதழை விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 011-5455288 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **aravinthan@ceypetco.gov.lk** என்ற மின்னஞ்சலூடாக பொறிமுறை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/ பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455331 தொலைநகல்: 0094-11-5455424**

TPTL

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**டிரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் லிமிடெட்**

**"திருகோணமலை, சீனக் குடாவில் மேல் தொட்டி பண்ணைக்கு முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளுக்காக 10 எண்ணெய் களஞ்சிய தொட்டிகள் மற்றும் தொடர்புபட்ட வசதிகளை நிறுவ குழாய்களின் புனைவு மற்றும் நிறுவுதல், மறுசீரமைப்பு திட்டத்திற்கான ஆலோசனை சேவைகள்**

**TPTL/01/2023**

மேற்கூறப்பட்டவை தொடர்பாக 2023-03-13ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது.

அனேக விலைமனுதாரர்களின் வேண்டுகோள்களைக் கவனத்திற் கொண்டு விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி எட்டு நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆர்வமுள்ள சகல தரப்பினருக்கும் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது.

விலைமனுக்களை ஏற்பது 2023.05.03ஆம் திகதி 1400 மணிக்கு நிறைவடைவதோடு விலைமனுவின் இறுதித் திகதி மற்றும் நேரம் முடிவுற்ற பின் கொழும்பு 01 மேற்கு கோபுரம், 20ஆவது மாடியில் இலங்கை இந்திய எண்ணெய் கம்பனியின் (LIOC) அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

விலைமனுக்கள் ஏற்கும் திகதி மற்றும் நேரம் நிறைவடைவதற்கு முன்னர் விலைமனுக்களை கூறப்பட்ட முகவரிக்கு நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது tptltenders@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

விலைமனுதாரர்கள் 1.2 மில்லியன் இலங்கை ரூபா தொகைக்கான விலைமனு பிணையுடன் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். மின்னஞ்சல் வழியாக விலைமனு சமர்ப்பிக்கப்பட்டால், விலைமனுவின் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன் LIOC அலுவலகத்திற்கு விலைமனுப் பிணையின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்துடன் பொருந்துவதாக இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட வங்கி உத்தரவாதம் ஒன்றாக அல்லது இலங்கை வங்கியின் 0088340369 என்ற கணக்கு இலக்கத்திற்கு ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (Pvt) Ltd நிறுவனத்திற்கு ரொக்கப்பண வைப்பாக மேற்கொள்ளப்படல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியில் இருந்து ஆறு (06) மாதங்களுக்கு விலைமனு பிணை செல்லுபடியாதல் வேண்டும்.

(ஏதேனும்) தெளிவைப் பெற வேண்டுமாயின் கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி/தொலைநகல் இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு**
**டிரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**1ஆவது மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09.**

**தொலைபேசி: 011 5455369, தொலைநகல்: 011 5455432**
**மின்னஞ்சல்: projectmanager.tptl@gmail.com**

19886 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின்கீழான விற்பனை

## மக்கள் வங்கி
## ஏலவிற்பனை
## காலி கோட்டை கிளை (013)

காணித்துண்டம்: தென் மாகாணம் காலி மாவட்டத்தில் காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி கடவத்சதர பகுதி என்பவற்றுக்குட்பட்ட காலி கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவில் 226, மஹமோதர கிராம அலுவலர் பிரிவிலுள்ள "சின்னத்தம்பிகேவத்த" என்றறியப்படுகின்ற "ப்ரங்ச காரயாகேவத்த" என அழைக்கப்படும், 2013.10.06 ஆந்திகதியன்று உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ்.ஜீ. வீரசூரிய என்பவரினால் நிலஅளவையிடப்பட்ட மற்றும் 2013.10.08 ஆந் திகதிய 40/2013 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட A எனும் காணித்துண்டினது $A_2$ எனும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து, 40/2013 ஆம் இலக்க தள வரைபடத்திற்கிணங்க, பதினேழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (A-0, R-0, P-17.5). காலி காணிப் பதிவகத்தில் இலக்கம் Q.188/138 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் உரிய இடத்தில் 2023.05.09 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:- 2020.12.04 ஆந்திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2020.12.04 ஆந்திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்துக்கான அணுகுவழி: காலி பிரதான பேருந்து நிலையத்திலிருந்து கொழும்பை நோக்கி காலி வீதி நெடுகிலும் சுமார் 1.8 கி.மீ. சென்று, விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தை உங்கள் வலது கைப்புறமாகக் காணலாம்.

கொடுப்பனவு செய்யும் முறை ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூராட்சி சபைக்கு செலுத்தப்படற்பாலதான உள்ளூரதிகாரசபை வரி 01
3. விற்பனை விலையின் 2 1/2% இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. சான்றுப்படுத்துகைக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம் (காலி), இல.22, லோவர் டிக்சன் வீதி, காலி என்பவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி : 091 2232311, 223563 தொலைநகல் : 0912231413

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பின்வரும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவுவிலையை இழப்பதற்கும் ஆதனத்தை மீளவிற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

**11/55, போகஹவத்த.**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286**
**072 0881044, 072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும்**
**உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும், மதிப்பீட்டாளர் மற்றும் (அகில இலங்கை சமாதான நீதவான்)**




## மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை – வன்னி பிராந்தியம்

31.12.2021ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 22.05.2023 திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணி முதல் ஏல விற்பனை நடைபெறும்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை திகதி | 23.05.2023 மற்றும் 24.05.2023 |
| ஏலவிற்பனை இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
| அடகு வைக்கப்பட்ட கிளை | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| அடகு வைக்கப்பட்ட சேவை நிலையம் | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச்செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமைச்செயலகம் வன்னி**
**தொலைபேசி இல : 024 2225054 / 024-2222972**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடன் இலக்கம் : 302728000003**

**கடனாளியின் முழுப் பெயர் : உயனஹேவகே கமல் சரத்சந்ர & ஆடம்பரகே சந்திரிகா ஷிரானி தி அல்விஸ்.**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி "**தினமின**","**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம் 134**, **பெத்தகான வீதி, கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.05.29** ஆம் திகதி **பி.ப 1.30** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **2775**ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, **ஒரு கோடி ஐம்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா எழுபத்து ஒரு சதம் (ரூபா15,857,043.71),2023.01.31**ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**1. கடன் தொகை 302728000003**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **ஒருகோடி இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து நாநூற்று பதின் மூன்று ரூபா தொன்னூற்று மூன்று சதத்தினையும், (ரூபா 12,452,413.93) 2023.01.31** ஆம் திகதி வரையிலான நிலுவையாக **முப்பத்து நான்கு இலட்சத்து நான்காயிரத்து அறுநூற்று இருபத்து ஒன்பது ரூபா எழுபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 3,404,629.78)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **ஒரு கோடி ஐம்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா எழுபத்து ஒரு சதத்தினையும் (ரூபா15,857,043.71)**

2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத **ஒருகோடி இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து நாநூற்று பதின் மூன்று ரூபா தொன்னூற்று மூன்று சதத்திற்காக (ரூபா 12,452,413.93)**அறவீடு செய்ய வேண்டிய **18.63%** வீதமான வருடாந்த வட்டியினையும் **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்
3. **2023.02.01** திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான **முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஐந்து ரூபா முப்பத்து எட்டு சதத்திற்காக (ரூபா 3,026,355.38)** மாதாந்தம் **2.00%** தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 302728000003**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

தென் மாகாணத்தில்**, மாத்தறை** மாவட்டத்தில், மாத்தறை சத்தர கோரளையில்**,** மாத்தறை மாநகரசபை எல்லையில் மாத்தறை பிரதேச செயலாளர் அலுவலகப்பிரிவில், இலக்கம் **417** Aகிழக்கு கடைவீதி கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடவீதி கிராமத்தில், புகையிரதநிலைய வீதியில், வரிமதிப்பீட்டிலக்கம் **33/A** ல் அமைந்துள்ள **பத்தராவேவத்த** எனப்படும் காணிக்கு **2017.11.20** ஆம் திகதி,அனுமதிபெற்ற நில அளவையாளர் **பீ.எச்.பீ நிஹால் சில்வா.** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **309/17**என்ற இலக்க காணி வரைபடத்தின்படி **A** என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே:** இக்காணியின் (மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **13073**ன் **C1** என்ற இலக்க காணித்துண்டும் **கிழக்கே:** புகையிரதநிலைய வீதியும் **தெற்கே. இக்காணியின்** (மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **5630**ன் **C** என்ற இலக்க காணித்துண்டும் **மேற்கே: உலுகெதரவத்த** என்ற காணியும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பன்னிரெண்டு தசம் மூன்று பேச்சஸ்களாகும். **(ஏக்.0- ரூட்.0- பே. 12.3)** மேற்படி **309/17** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கும்.

**பின்வரும் 1ஆம் மற்றும் 2ஆம் இலக்க காணித்துண்டுகளை இணைத்து மீள அளந்து மேலே குறிப்பிட்ட A என்ற காணித்துண்டு மீள தயார் செய்யப்பட்டுள்ளது.**

01. மேற்குறிப்பிட்ட கடவீதி கிராமத்தில் அமைந்துள்ள **பத்தராவெவத்த** என்ற காணிமாத்தறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **P-21434** மற்றும் **2014.11.06** ஆம் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் **எச்.பி.ஜே. பாலித்த** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4463என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **01 ஆம்** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே:** இக்காணியின் **2ஆம்** இலக்க காணித்துண்டும் **கிழக்கே:** புகையிரதநிலைய வீதியும் **தெற்கே:** இக்காணியின் (மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **5630**ன் **C** என்ற இலக்க காணித்துண்டும் **மேற்கே: உலுகெதரவத்த** என்ற காணியும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் ஒன்பது தசம் எட்டு நான்கு பேச்சஸ்களாகும். **(ஏக்.0- ரூட்.0- பே. 9.84)** மேற்படி **4463** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி இக்காணித்துண்டு **மாத்தறை** காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் **A658/128** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.
02. மேற்குறிப்பிட்ட கடவீதி கிராமத்தில் அமைந்துள்ள **பத்தராவெவத்த** என்ற காணி மாத்தறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **P-21434** மற்றும் **014.11.06** ஆம் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் **எச்.பி.ஜே. பாலித்த** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **4463**என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **02 ஆம்** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே:** இக்காணியின் (மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் **13073**ன்**C** என்ற இலக்க காணித்துண்டும் (என்றாலும் மிகச்சரியாக இக்காணியின் **C1** என்ற காணித்துண்டும்) **கிழக்கே:** புகையிரதநிலைய வீதியும் **தெற்கே: 1ஆம்** இலக்க காணித்துண்டும் **மேற்கே: உலுகெதரவத்த** என்ற காணியும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இரண்டு தசம் நான்கு ஆறு பேச்சஸ்களாகும். **(ஏக்.0- ரூட்.0- பே. 2.46)** மேற்படி **4463 ஆம்** இலக்க காணிவரைபடத்தின்படி இக்காணித்துண்டு **மாத்தறை** காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் **A658/129** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

.............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடன் இலக்கம் : 702725000100**
**கடனாளியின் முழுப் பெயர் : கலப்பத்தி மெரென்சிகே சுனில் விக்ரமசூரிய**
**: கலப்பத்தி மெரென்சிகே சசித்ரா லக்மாலி விக்ரமசூரிய**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி "**தினமின**","**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம்** 134, **பெத்தகான வீதி**, **கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.06.05** ஆம் திகதி **பி.ப 12.30** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **3101** ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி,**தொன்னூற்று நான்கு இலட்சத்து பத்தாயிரத்து எழுபது ரூபா ஒரு சதம் (ரூபா 9,410,070.01), 2023.01.31**ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**1. கடன் தொகை 702725000110**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **இருபத்து ஒரு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று நாற்பத்து இரண்டு ரூபா தொன்னூற்று மூன்று சதத்தினையும், (ரூபா 2,120,642.93) 2023.01.31** ஆம் திகதி வரையிலான நிலுவையாக **எழுபத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நாநூற்று இருபத்து ஏழு ரூபா எட்டு சதத்தினையும் (ரூபா 7,289,427.08)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **தொன்னூற்று நான்கு இலட்சத்து பத்தாயிரத்து எழுபது ரூபா ஒரு சதத்தினையும் (ரூபா 9,410,070.01)**

2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத **இருபத்து ஒரு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று நாற்பத்து இரண்டு ரூபா தொன்னூற்று மூன்று சதத்திற்காக (ரூபா 2,120,642.93)** அறவீடு செய்ய வேண்டிய **14.50%** வீத மான வருடாந்த வட்டியினையும் **2023.01.31** ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்,
3. **2023.02.01** திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான **ஐம்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஐந்து ரூபா தொண்ணூற்று மூன்று சதத்திற்காக (ரூபா 5,962,555.93)** மாதாந்தம் **2.00%** தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 702725000100**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமத்திய மாகாணத்தில்**, பொலன்னறுவை** மாவட்டத்தில், **சிங்கள பத்துவவில் ஹிங்குரக்கொட** பிரதேச சபை எல்லையில் **ஹிங்குரக்கொட** பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் **80 சாமபுர கிராம உத்தியோகத்தர்** பிரிவில் **சாமபுர** கிராமத்தில் அமைந்துள்ள **ஹிங்குரக்தமன** எனப்படும் காணிக்கு **2017.12.24** ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் **ஐ.எச்.எம்.எஸ்.ஜே.பி ஹேரத்** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1622என்ற இலக்க காணிவரைபடத்தின்படி **1 ஆம்** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே: No. F.C.P.Po.132 ன் 566** ஆம் இலக்க காணித்துண்டும் **கிழக்கே: No.F.C.P.Po.132 ன் 566 ஆம்** இலக்க காணித்துண்டும் **தெற்கே : No. F.C.P.Po.132 ன் 566** ஆம் இலக்க காணித்துண்டின் பாதையும் **மேற்கே : No. F.C.P.Po.132 ன் 566** ஆம் இலக்க காணித்துண்டின் பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இருபத்து இரண்டு தசம் மூன்று நான்கு பேர்ச்சஸ்களாகும். **(ஏக்.0- ரூட்.0- பே. 22.34)** அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஆறு ஐந்து ஹெக்டயர்களாகும். **(ஹெக் 0.0565)** இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கும்.

**மேலே குறிப்பிட்ட 01 ஆம் இலக்க காணி கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியினை மீள அளந்து தயார் செய்யப்பட்டதாகும்**.

மேற்குறிப்பிட்ட வடமத்திய மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட சாமபுர கிராமத்தில் அமைந்துள்ள **F.C.P.Po.132** இலக்க காணி வரைபடத்தின் **565 ஆம்** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக

வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கே : **F.C.P.Po.132** ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி **566 ஆம்** இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன்பரப்பளவு பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஆறு ஐந்து ஹெக்டயர்களாகும்**. (0.0565 ஹெக்டயர்)** இக்காணித்துண்டும் இதில் உள்ள தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் **பொலன்னறுவை** காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் **G.7/80** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் **லமாஹேவகே லலித் மர்வின் தி சில்வா** என்பவரினால் **2018.03.26** ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட **3101**ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு உள்ள அட்டவணை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடன் இலக்கம் : 402725000073 மற்றும் 402521000113**
**கடனாளியின் முழுப் பெயர் : மொஹமட் அமீன் மொஹமட் இம்ரான்**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி "**தினமின**","**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம் 134**, **பெத்தகான வீதி**, **கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.05.24** ஆம் திகதி **பி.ப. 02.30** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **1761** ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, **எழுபத்து ஏழு இலட்சத்து பதின் ஏழாயிரத்து நூற்று அறுபத்து ஒன்பது ரூபா முப்பத்து ஏழு சதம் (ரூபா 7,717,169.37) 2023.01.31**ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்

**1) 1வது கடன் தொகை 402725000073**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நாநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 5,147,476.53) 2023.01.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள **பதினெட்டு இலட்சத்து எழுபத்து ஐயாயிரத்து இருநூற்று எண்பத்து ஐந்து ரூபா எண்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 1,875,285.83)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **எழுபது இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து இரண்டு ரூபா முப்பத்து ஆறு சதத்தினையும் (ரூபா 7,022,762.36)**

**இரண்டாவது கடன் தொகை 402521000113**

**1761** ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **ஐந்து இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து தொண்ணூற்று நான்கு ரூபா இருபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 547,094.28) 2023.01.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள **ஒரு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து முந்நூற்று பன்னிரெண்டு ரூபா எழுபத்து மூன்று சதத்தினையும் (ரூபா 147,312.73)** இதன்படி முழுத் தொகையான **ஆறு இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து நாநூற்று ஏழு ரூபா ஒரு சதத்தினையும் ( ரூபா 694,407.01)** இதன்படி மொத்த கூட்டுத் தொகையாக **எழுபத்து ஏழு இலட்சத்து பதின் ஏழாயிரத்து நூற்று அறுபத்து ஒன்பது ரூபா முப்பத்து ஏழு சதத்தினையும் (ரூபா 7,717,169.37)** அறவீட செய்வதற்கும்

(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நாநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பத்து மூன்று சதத்திற்காக (ரூபா 5,147,476.53)** மற்றும் அறவிட வேண்டிய **18.50%** வீத வருடாந்த வட்டியினையும் , இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **ஐந்து இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து தொன்னூற்று நான்கு ரூபா இருபத்து எட்டு சதத்திற்காக (ரூபா 547,094.28)** அறவிட வேண்டிய **9.89%** வீத வருடாந்த வட்டியினையும், **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

(03) **2023.02.01** ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக ) மேற்கூறப்பட்ட மொத்த நிலுவைத் தொகையான **பதின் எட்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு ரூபா தொன்னூற்று எட்டு சதத்திற்காக (ரூபா 1,833,977.98)** மாதாந்தம் **2.00%** வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

(04) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 402725000073 மற்றும் 402521000113**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், பெளிகல் கோரளையில் கீரவெளி பத்துவவில், வரக்காப்பொல பிரதேச சபை எல்லையில் வரக்காப்பொல பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட, இலக்கம் **85** -நெலுந்தெனிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெதிகம கிராமத்தில் அமைந்துள்ள திக்மல்தெனியவத்த அல்லது கம்புராதெனியேவத்த (என்றாலும் காணி வரைபடத்தின்படி திக்மல்தெனிய அல்லது கம்புராதெனியவத்த) என்ற காணிக்கு **2018.03.21** மற்றும் **2018.03.22** ஆகிய தினங்களில் அனுமதிபெற்ற நில அளவையாளர், ஆர்.என். கருணாதிலக்க என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **6193** ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி **01** ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே கொழும்பு- கண்டி பிரதான பாதையும் கிழக்கே எச்.எல்.எம். லாபிர் என்பவரின் காணியும் தெற்கே முஹமட் ஹசன் என்பவரின் காணியும் மேற்கே மொஹமட் இம்ரான் என்பவரின் காணியும் அமைந்து காணப்படுகின்றது. இதன் பரப்பளவு **பத்து தசம் நான்கு பூச்சியம் பேச்சஸ் (ஏக்.0 ரூட். 0. பேச்.10.40)** அல்லது **பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஆறு மூன்று (0.0263) ஹெக்டயர்களாகும்.** இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் மரங்கள், பயிர்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக கேகாலை காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் **K 215/40** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடனாளியின் முழுப் பெயர் : பத்மசிரி ரணசூரிய**
**கடன் இலக்கம் : 401725000019 மற்றும் 401501000167**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி " **தினமின**", "**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம்** 134, **பெத்தகான வீதி, கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.06.07** ஆம் திகதி **மு.ப 11.30** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **802** மற்றும் **5317** ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, **அறுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து அறுநூற்று பத்தொன்பது ரூபா தொன்னூற்று ஒரு சதம் (ரூபா 6,572,619.91), 2023.01.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**1. கடன் தொகை 401725000019**

**802** ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நூற்று முப்பத்து ஒன்பது ரூபா எழுபத்து இரண்டு** சதத்தினையும் **(ரூபா 3,447,139.72) 2023.01.31** ஆம் திகதி வரையிலான நிலுவையாக **பதினான்கு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று தொன்னூற்று இரண்டு ரூபா பதினேழு சதத்தினையும் (ரூபா 1,434,192.17)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **நாற்பத்து எட்டு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து முந்நூற்று முப்பத்து ஒரு ரூபா எண்பத்து ஒன்பது சதத்தியையும் (ரூபா 4,881,331.89)**

**இரண்டாவது கடன் தொகை 401501000167**

**5317** ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **பதினைந்து இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து ஐநூற்று நாற்பத்து ஒன்பது ரூபா எழுபத்து நான்கு** சதத்தினையும் **(ரூபா 1,551,549.74), 2023.01.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள **ஒரு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்து எட்டு ரூபா இருபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 139,738.28)** இதன்படி முழுத் தொகையான **பதினாறு இலட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து இருநூற்று எண்பத்து எட்டு ரூபா இரண்டு சதத்தினையும் (ரூபா 1,691,288.02)** இந்தவகையில் இரண்டு கடன்களினதும் மொத்த கூட்டுத்தொகையாக **அறுபத்து ஐந்து இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து அறுநூற்று பத்தொன்பது ரூபா தொன்னூற்று ஒரு சதத்தினையும் (ரூபா 6,572,619.91).**

2. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நூற்று முப்பத்து ஒன்பது ரூபா எழுபத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 3,447,139.72)** அறவிட வேண்டிய **17.00**% வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **பதினைந்து இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து ஐநூற்று நாற்பத்து ஒன்பது ரூபா எழுபத்து நான்கு சதத்திற்காக (1,551,549.74)** அறவிட வேண்டிய **17.00**% வீத வருடாந்த வட்டியினையும் **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,
3. **2023.02.01** திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையா**ன பதினான்கு இலட்சத்து முப்பத்து ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஏழு ரூபா நாற்பது சதத்திற்காக (ரூபா 1,435,877.40)** மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 401725000019 மற்றும் 401501000167**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

**சப்ரகமுவ** மாகாணத்தில், **இரத்தினபுரி** மாவட்டத்தில், **கொளன்ன** கோரளையில், தியபொட்டகம் பத்துவவில், எம்பிலிபிட்டிய பல்லேகமையில் அமைந்துள்ள எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில், மற்றும் எம்பிலிப்பிட்டிய நகரசபை எல்லைக்கு உட்பட்ட பல்லேகம இலக்கம் **(214/A)** கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நோனகம பாதையில் வரிமதிப்பிட்டிலக்கம் **156** இலக்கத்தினை உடைய இந்த இத்தகலகாவஹேன பிரிவு எனப்படும் காணிக்கு **2006.02.04** ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் **ஜீ.டப்ளியூ. கே. மனம்பேரி** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **2663** என்ற இலக்க காணிவரைபடத்தின்படி 1**ஆம்** இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே டி.எப். அத்துக்கோரல** என்பவரின் காணி மற்றும் பிரதான பாதையும் **கிழக்கே ஈ.எம்.பீ. டீசல்** நிரப்பும் நிலையத்தின் வளவும் **தெற்கே ஈ.எம்.பீ. டீசல்** நிரப்பும் நிலையத்தின் வளவும் மற்றும் **டி.எப். அத்துக்கோரல** என்பவரின் காணியும் **மேற்கே** டி.எப்.அத்துக்கோரல என்பவரின் காணியும் எல்லைகளாக அமைந்துள்ளன இதன் பரப்பளவு நான்கு தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சஸ்களாகும். **(ஏக்.00 ரூட். 00. பேச். 4.05)** (என்றாலும் நான்கு தசம் ஐந்து **4.5 பேர்ச்சஸ்** என பதிவு செய்யப்பட்டுள்ளது.) இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் பயிர்கள் உட்பட அனைத்தும் எம்பிலிப்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் **L114/95** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டியைச் சேர்ந்த கே.பீ. அபேசூரிய என்பவரினால் **2017.12.11** ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட **5317** ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம், இங்குள்ள அட்டவணை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

### சப்ரகமுவ மாகாண சபையில் 2023/2024

# ஆண்டுகளுக்கான பேரெண்ணிக்கையான வாகனங்களுக்கான காப்புறுதி

01. 2023.06.01 ஆம் திகதியிலிருந்து 2024.05.31 ஆம் திகதி வரையிலான ஒரு வருட கால எல்லைக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு பெற்றுள்ள காப்புறுதி கம்பனிகளிடமிருந்து (விலைமனுக்கோரல் ஆவணத்தின் I ஆம் இணைப்பு) 264 வாகன பேரெண்ணிக்கைகளுக்கான விரிவான காப்புறுதிக்காக இரத்தினபுரி, புதிய நகரம், சப்ரகமுவ மாகாண சபையின் சார்பாக பெறுகைக் குழு பிரதான செயலாளர், தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.
02. பெறுகைக்கான முறைமை: தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்.
03. நிதிக்கான வளம்: மாகாண சபை நிதியம்.
04. 2023.04.21 ஆம் திகதியிலிருந்து 2023.05.11 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மாகாண திறைசேரியில் விலைமனு ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம் அல்லது மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கோரிக்கைக் கடிதமொன்றை மாகாண திறைசேரிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.
05. விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியின் பிரகாரம், 2023.05.12 ஆம் திகதியிலிருந்து 2023.07.28 ஆம் திகதி வரையும் 120,000 இலங்கை ரூபா பெறுமதியுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுவானது இலங்கை மத்திய வங்கியில் பதிவுபெற்றுள்ள வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் ''பிரதான செயலாளர், சப்ரகமுவ மாகாண சபை'' இன் பெயரில் வழங்கப்பட்டதும் அல்லது சப்ரகமுவமாகாண திறைசேரியில் வைப்பிலிடப்பட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணைக்கான காரணம் **"Vehicle Fleet Insurance 2023/2024"** என குறிந்துரைக்கப்படல் வேண்டும்.
06. 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில்''பிரதி பிரதான செயலாளர் (நிதி), மாகாண திறைசேரி, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும. தாமதமாக பெற்றுக் கொண்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். **"Vehicle Fleet Insurance 2023/2024"** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
07. விலைமனுக்கள் 2023.05.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களை மூடலை ஏற்றுக் கொள்ளலின் பின்னர் உடனடியாகவே மாகாண திறைசேரியில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
08. விலைமனுவானது 2023.06.30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
09. இந்த விலைமனு அழைத்தல் தொடர்பாக எழும் எந்தவொரு காரணங்களுக்கான இறுதி தீர்மானமானது பெறுகைக் குழுவின் தலைவரைச் சார்ந்ததாகும்.
10. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக விபரங்களை இரத்தினபுரி, புதிய நகரம், சப்ரகமுவ மாகாண சபை, மாகாண திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 045-2231224, 045-2222893. தொலைநகல்: 045-2223052).

**தலைவர்,**
**பிரதான செயலாளர் பெறுகைக் குழு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
21.04.2023.

# கேள்வி கோரல் அறிவித்தல்

## விவசாய அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**01. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெறமுடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | வருடாந்த தேவைப்பாட்டிற்கான கொள்வனவுகள் - புல் மற்றும் தீவனம் மி.ஆ,நி. (இரசாயணங்கள், ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள், உபகரணங்கள், கண்ணாடி பொருட்கள்) | 120,000/= | 5,000/= | 2023.04.21 முதல் 2023.05.11 வரை | 2023.05.12 மு.ப.11.00 |
| 1.2 | வருடாந்த தேவைப்பாட்டிற்கான கொள்வனவுகள் - விலங்கு ஊட்டச்சத்து - மி.ஆ.நி (உபகரணங்கள், கண்ணாடிப் பொருட்கள், இரசாயனங்கள், எதிர்வினைகள் (Reagents), ஊடகம், ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள்) | 150,000/= | 7,000/= | | |
நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட காணிவரைபடம் **F.C.P.Po.18**ன் படி 156ஆம் இலக்க "கொட"என அழைக்கப்படும் காணித்துண்டு பொலன்னறுவை கிராமத்தில் அமைந்துள்ளது. காணித்துண்டின் எல்லைகளாகக் வடக்கே காணிவரைபடம் **F.C.P.Po.18** ன் 106 மற்றும் 103 ஆம் இலக்க காணித்துண்டுகளும் கிழக்கே காணிவரைபடம் **F.C.P.Po.18** ன் 103ஆம் இலக்க காணித்துண்டு பாதையும். தெற்கே காணிவரைபடம் **F.C.P.Po.18** ன் 157 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே காணிவரைபடம் **F.S.P 3950**ன்படி111 ஆம் இலக்க காணித்துண்டும், அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு **பூச்சியம் தசம் இரண்டு ஏழு ஆறு ஹெக்டயர்களாகும். (0.276ஹெக்டயர்)** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்துடன் பாதைகளுக்கான உரிமையும் பொலன்னருவை காணிப்பதிவு காரியாலயத்தில் **LDO.B.08/06** மற்றும் **LOD/B/34/124** என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது அட்டவணை

**பாதுகாப்பு சரத்துக்கள்**

1. காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் அனைத்து கனிய வளங்களின் (இந்தப் பதத்தின் மூலம் இங்குள்ள பெறுமதி மிக்க மாணிக்க கற்களும் உள்ளடக்கப்படும்.) உரிமை,மற்றும் அகழ்வு, தேடுதல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் அவ்வாறான கனிய வளங்கலை வெளியில் எடுத்துச் செல்வதற்குமான உரிமை அரசிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. காணிக்கான உரித்து தொடர்பில் காணியின் உரிமையாளர் என்ற வகையில் காணப்படும் உரிமையானது இந்த அளிப்பு இடம்பெறும் திகதியில் காணி மீது காணப்படும் பாதைக்கான உரிமையுடன் காணி மீதுள்ள ஏனைய உரிமைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த உப பிரிவுகளாக பிரிக்கப்படும் அலகுகள், அதாவது உயர் நிலங்கள் 0.101 ஹெக்டயருக்கு/ ¼ ஏக்கருக்கு குறைவான இந்த காணி பிரிக்கப்பட்டு உரிமையாளரினால் விற்பனை செய்ய முடியாது.
2. இங்கு குறிப்பிடப்பட்ட குறைந்த அளவினைவிட, அதாவது **1/6** அளவினைவிட குறைவாக குறிப்பிட்ட காணி துண்டாடப்பட்டு உரிமையாளரினால் பிறருக்கு வழங்க முடியாது.
3. எந்த ஒருவரும் 1ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துன்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
4. எந்த ஒருவரும் 2ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்படாத ஒரு காணித்துண்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
5. தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்பட்டு வரும் அல்லது எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள நீர் வழங்கல் திட்டம் ஒன்றின் மூலம் இக் காணித்துண்டுக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்கு நீர்வசதி வழங்கப்படுமாயின் குறித்த நீர் பாசனம் வழங்கும் காணி தொடர்பாக அதன் உரிமையாளர் (453 ஆவது அத்தியாயம்) நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப செயற்பட வேண்டும்.
6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமம் பெறாது அந்த காணியின் மீது அல்லது அதன் அகத்தே காணப்படும் எந்த ஒரு கனிய வளங்களையும் அகழ்தல், தேடுதல் அல்லது உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகள் ஈடுபடுவது அல்லது வேறுவகைகளில் வெளியேற்றுவது உரிமையாளரினால் தவிர்க்கப்பட வேண்டும்.
7. பிரதேச செயலாளரின் முன் அனுமதியினை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளாது காணியினையோ அல்லது அதில் உள்ள எந்த ஒரு பகுதியினையோ அடுத்தவருக்கு வழங்க கூடாது.

..............................................

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ. வீ. அ. நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**106 கார்கள் விற்பனைக்கு**

CP JW-1798 Hyundai Accent, 2000, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 023526

WP CAF-1895 Micro Panda, 2015, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 023514

16-0151 Ford Car, 1986, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 023523

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

NW HL-6602 Nissan Sunny, 2000, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 023519

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

WP KS-4822 Maruti A-star, 2011, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 023507

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAR-2112 Bajaj, 2014, WP YQ-9329 Bajaj , 2011, NW AAI-8081 Bajaj, 2013, threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 . தொலை பேசி. 07 11210810. 023510

NW BEM-7811 Honda Dio, 2016, motor cycle அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0711210810. 023512



# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
## நீர்ப்பாசனத் திணைக்களம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை ஒரு வருட காலம் நடாத்திச் செல்லல்**

01. நிர்ப்பாசனத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் நீரப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் மேற்குறிப்பிடப்பட்ட சேவையை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. மேற்கூறப்பட்ட சேவைக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான விலைக் கோரல் ஆவணங்களை இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் விண்ணப்பித்து 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஏப்ரல் 20ஆம் திதகி முதல் 2023 மே 03ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2ஆம் மாடி, 214ஆம் இலக்க அறை முகவரியிலுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை) அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் அவைகளை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். என்பதுடன் நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை) அவர்களிடமிருந்து (தொலைபேசி இல. 011-2582897 அல்லது 011-2582677) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைக்கோரல் ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிட்டு அவரின் முத்திரையைப் பொறித்தல் வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 3ஆம் மாடி, 311ஆம் இலக்க அறையில் (பிரதான நிதி அதிகாரியின் அறை) இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023 மே 03ஆம் திகதி பி.ப. 03.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2023 மே 03ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் அதன்பின் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருவதற்கு ஆர்வத்தைக் காட்டும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07**

**2023.04.20ஆம் திகதி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மருத்துவ காப்புறுதி சேவைகளை வழங்குதல் 2023/2024**
**கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை**
**விலைக்கோரல் இல. GWUIM/AE/04/INS/2023**

01. 2023/2024ஆம் வருடத்தில் பல்கலைக்கழகத்தின் நிரந்தர பணியாற் தொகுதியிநருக்கு மருத்துவக் காப்புறுதி சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
02. தேவைப்பாடுகளின் முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தின் தரப்பட்டுள்ளன.
03. நோக்க சேவைக் காலம் 365 நாட்களாகும்.
04. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும்.
05. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 033-2215827 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக கல்வி நிறுவனப் பிரிவு / சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், 2ஆம் மாடி, கல்வி நிறுவனப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2023-05-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.
07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், 2ஆம் மாடி, கல்வி நிறுவனப் பிரிவு, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் வேலை நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை) மீளளிக்கப்படாத ஐந்தாயிரம் ரூபா (ரூபா 5,000.00) மற்றும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
08. சகல விலைமனுதாரர்களும் 2020-10-28ஆம் திகதிய பெறுகை வழிகாட்டியின் மேலதிக இணைப்பு 36இன் விதிக்கப்பட்டுள்ள 5.3.11ஆம் குறிப்பின் பிரகாரம் முகவரொருவரிடமிருந்து பெற்றுகொண்ட ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இதன் பிரகாரம், மருத்துவக் காப்புறுதி சேவையை வழங்க ஆர்வமுள்ள தரப்பினர், மருத்துவக் காப்புறுதி சேவையின் முழு விபரங்களையும் உள்ளடக்கிய விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது இரு பிரதிகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என விமைனுக்களைத் தயாரித்து இரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு, பின் அவ்விரண்டு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
10. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருத்துவ காப்புறுதி சேவைகளை வழங்குதல் 2023/2024 மற்றும் விலைக்கோரல் இல. GWUIM/AE/04/INS/2023'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, 2ஆம் மாடி, நிர்வாகக் கட்டிடம், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல எனும் முகவரிக்கு 2023-.....-..... திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும்.
12. விலைமனுக்கள் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், 2ஆம் மாடி, கல்வி நிறுவனப் பிரிவு, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகம், குழு அறையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
13. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் விலைமனுதாரருக்கு ஏற்படும் எந்தவொரு கிரயம் அல்லது செலவுகளுக்கு பல்கலைக்கழகம் பொறுப்புகூற மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**2023-04-21.**

# மீண்டும் கள்ளு தவறணை குத்தகை விற்பனை 2023/2024

**வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு**

2023.07.01ம் திகதி முதல் 2024.06.30 திகதி வரையுள்ள காலத்திற்கான குத்தகை விற்பனைக்கான கேள்வி பத்திரங்கள் 2023.05.24 திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்க 2023.04.21ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**பிரதேச செயலகம்,**
**வென்னப்புவ,**

**ஜெ. ஏ. வீ. வசந்திகா**
**பிரதேச செயலாளர் வென்னப்புவ.**

# மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவின் ஆண்டிற்கான கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விடல் – 2023/2024

2023 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு பிரிவிலுள்ள கள்ளுத்தவணை குத்தகை விற்பனைக்காக 2023.06.02 ஆம் திகதி மு.ப.10.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கள் 2023.04.21 ஆம் திகதி பிரசுரிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**எச்.எம்.என். ஹேரத்**
**பிரதேச செயலாளர்,**
**மஹவெவ.**
**2023.03.27**

# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி - (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான **பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

**கடன் இலக்கம் : 101730000015**

**கடனாளியின் முழுப் பெயர் : பமினஹன்னதிகே தரங்க சுதர்ஷன பீரிஸ்**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.03.31** ஆம் திகதி **2326** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.03.31** ஆம் திகதி "**தினமின**","**தினகரன்**" **மற்றும்** "**டெய்லி நியூஸ்**"பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம் 134, பெத்தகான வீதி**, **கோட்டே**என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற **ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி** என்பவரினால் **2023.05.23** ஆம் திகதி **மு.ப 11.00** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **4136**ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி,**ஒரு கோடி முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஏழு ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா13,359,207.75),2023.01.31**ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**01. கடன் தொகை 101730000015**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **தொன்னூற்று ஏழு இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்து ரூபா இருபது சதத்தினையும், (ரூபா 9,707,845.20) 2023.01.31** ஆம் திகதி வரையிலான நிலுவையாக **முப்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து முந்நூற்று அறுபத்து இரண்டு ரூபா ஐம்பத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 3,651,362.55)** இதன்படி **2023.01.31** மொத்தமாக **ஒரு கோடி முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஏழு ரூபா எழுபத்து ஐந்து சதத்தினையும் (ரூபா13,359,207.75)**

02. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத **தொன்னூற்று ஏழு இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்து ரூபா இருபது சதத்திற்காக, (ரூபா 9,707,845.20)** அறவீடு செய்ய வேண்டிய **17.69%** வீதமான வருடாந்த வட்டியினையும் **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

**03. 2023.02.01** திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான **இருபத்து ஒன்பது இலட்சத்து நான்காயிரத்து அறுநூற்று ஏழு ரூபா அறுபத்து மூன்று சதத்திற்காக (ரூபா 2,904,607.63)** மாதாந்தம் **2.00%** வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,

04. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 101730000015**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணத்தில்**, கம்பஹா** மாவட்டத்தில், **அலுத்குரு** கோரளையில்**, ராகம பத்துவவில், ஜ-எல பிரதேசபை** எல்லையில், ஜ-எல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் **211 இதிமின்ன** கிராம உத்தியோகத்தர் பிரிவில்,பட்டகம வடக்கு வெளிகம்பிட்டிய பாதை வரிமதிப்பீட்டிலக்கம் **506/2/1**ல் அமைந்துள்ள **முனமல்கஹவத்த** எனப்படும் காணிக்கு **30.03.2015** ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் **ஏ.கே வணிகசிங்ஹ** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **2904** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி **3A2** என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே: 3A4** என்ற இலக்க காணித்துண்டும் **தெற்கே: 7045** என்ற இலக்க காணி வரைபடத்தின்படி **4ஆம்** இலக்க காணித்துண்டும் மற்றும் **3A3**என்ற இலக்க காணித்துண்டும் **மேற்கே: 3A3** என்ற இலக்க காணித்துண்டும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேச்சஸ்களாகும். **(ஏக்.0- ரூட்.0- பே. 10)** அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஐந்து மூன்று **(0.0253) ஹெக்டயர்கள்.** குறிப்பிட்ட காணிவரைபடம் **2904** ன் படி **3A4** என்ற பாதைக்கான உரிமையுடன் இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் **கம்பஹா** காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் **J259/144** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

..............................................
**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 10/04/2023**

**இ.வீ.அ.நி.கூ.வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர்.சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு 02.**

# ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**தூர்யா (பிரைவட்) லிமிடட் மற்றும்**
**தூர்யா ரிசோட்ஸ் (பிரைவட்) லிமிடட்**
**ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தல்**

தூர்யா (பிரைவட்) லிமிடட் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 6690) எனும் நிறுவனத்தை தூர்யா ரிசோட்ஸ் (பிரைவட்) லிமிடட் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 71418) நிறுவனத்துடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அதற்குரிய ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2)ஆம் பிரிவுக்கு ஏற்ப 2023 ஏப்ரல் 01ஆம் திகதியிலிருந்து இவ்வொன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது. மேற் குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள், 2023 ஏப்ரல் 01ஆம் திகதியில் இருந்து தூர்யா (பிரைவட்) லிமிடட் என தொடரும்.

**பணிப்பாளர்,**
**துர்யா (பிரைவட்) லிமிடட்**

# பெறுகை அறிவித்தல்

**நிர்மாண வேலைகளுக்காக**
**ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்தல்**
**மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்**

மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்திற்குரித்தான கம்பஹா மாவட்டத்திலுள்ள நாஹேனவத்த புடைவைக் கைத்தொழில் பின்வரும் நிர்மாண வேலைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கட்டிட அபிவிருத்தி வேலைகள்
2. பாதுகாப்பு கூடாரம் அமைத்தல்
3. சுற்றுமதில் கட்டுதல் மற்றும் கற்களைப் பதித்தல்

i. மேற்கூறப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக இக்டாட் நிறுவனத்தின் தேசிய பதிவு செய்தல் முறையின் கீழ் செல்லுபடியாகும் மற்றும் பயனுள்ள பதிவு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் இருத்தல் வேண்டும்.

ii. விலைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான விலைக்கோரல் ஆவணங்களுக்காக 3,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2023-04-21ஆம் திகதி முதல் 2023-05-01ஆம் திகதி வரையில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

iii. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023-05-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, கைத்தொழில் திணைக்களம் (மே.மா), 03ஆம் மாடி, இல. 204, மேல் மாகாண சபைக் கட்டிடம், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு முறையாக முத்திரைக் குறி பொறித்து பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் 1 உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கைத்தொழில் திணைக்களம் (மே.மா),**
**இல. 204, மேல் மாகாண சபைக் கட்டிடம்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**011-2092591**

# கேள்விகள் திறக்கப்படும் திகதியை நீடித்தல்

## இலங்கை பொலிஸ்

01. இலங்கை பொலிஸ் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் திகதி, கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் கேள்விகள் திறக்கப்படும் திகதிகளில் பின்வருமாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பொருட்களின் அட்டவணை**

| தொ. இல. | பொருட்கள் | எண்ணிக்கை | 2023-03-29ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகை இல. | 2023-03-29ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் கேள்வி திறக்கப்படும் நாள் | நீடிக்கப்பட்டதன் பின் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் கேள்வி திறக்கப்படும் நாள் | கேள்விப் படிவக் கட்டணம் | | பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமா? (ஆம்/இல்லை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் (ரூபா) | பதிவு செய்யப் படாத வழங்குநர்கள் (ரூபா) | |
| 02 | மேசைக் கணனி | 600 | LA/SI/177/2023 | 2023-04-24 | 2023-05-12 | 20,000.00 | 21,000.00 | ஆம் |

02. மேற்கூறப்பட்ட பெறுகை தொடர்பான விரிவான தகவல்கள் 2023-03-29ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திலும் www.police.lk என்ற இணைதளத்திலும் உள்ளன மற்றும் 2023-03-29ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை நிபந்தனைகள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

03. இது தொடர்பில் ஆர்வம் கொள்ளும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களில் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வழங்கல்கள் பிரிவு,**
**2ம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு – 01.**

**கேள்விப் பிரிவு** - 0112-013116/3117
**உ.பொ.அ. / வழங்கல்கள்** - 0112-324915 /0718592072
**மாதிரிகள் (Sample) பிரிவு** - 0112-013711/0112013124
**தொலைநகல்** - 0112-320729
**மின்னஞ்சல்** - dir.supplies@police.lk
**இணையதளம்** - www.police.lk

**பொலிஸ் மா அதிபர்**

# பொதுசன கருத்துகளுக்கான இலங்கை கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் வரைவு

1) உயிர்மூல பசளைகளுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு. (DSLS .............: ...............)
2) பச்சை பாலுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு. (DSLS .............: ...............)
3) மனித பயன்பாட்டுக்கான நீர் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் Polyaluminium Chloride இற்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு. (DSLS .............: ...............)
4) உறைந்த தின்பண்டங்கள்/ உறைந்த இனிப்புகள் மற்றும் உறைந்த பானங்களுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு. (DSLS .............: ...............)
5) உரங்கள் மற்றும் மண் நிலைகளுக்கான சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
பாகம் 1: நைதரசனை தீர்மானித்தல்
(இரண்டாவது மீளாய்வு) (DSLS 645 - 1: ...............)
6) உரங்கள் மற்றும் மண் நிலைகளுக்கான சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
பாகம் 2: ஈரப்பதம் மற்றும் சாம்பலை தீர்மானித்தல்
(முதலாவது மீளாய்வு) (DSLS 645 - 2: ...............)
7) திருத்த வரைவு இல. 01 தொடக்கம் SLS 1341: கூந்தல் எண்ணெய்க்கான 2021 இலங்கை கட்டளை விவரக்குறிப்பு (முதலாவது மீளாய்வு)
8) திருத்த வரைவு இல. 04 தொடக்கம் SLS 759: குளோரீனேற்றிய சுண்ணாம்பு (Bleaching Powder) மற்றும் கல்சியம் தாழ்குளோரைற்றுக்கான 1986 இலங்கை கட்டளை விவரக்குறிப்பு
9) திருத்த வரைவு இல. 01 தொடக்கம் SLS 1191: குழந்தை எண்ணெய்க்கான 2021 இலங்கை கட்டளை விவரக்குறிப்பு (முதலாவது மீளாய்வு)
10) ஒருமுறை பயன்படுத்தக்கூடிய கிருமியற்ற இறப்பர் அறுவை கையுறைகளுக்கான இலங்கை கட்டளை விவரக்குறிப்பு வரைவு
(முதலாவது மீளாய்வு) (DSLS 1626:............)(ISO 10282: 2023)
11) பகுப்பாய்வு ஆய்வுகூட பயன்பாட்டுக்கான நீர் - விபரக்குறிப்பு மற்றும் ஆய்வு முறைகள் - இலங்கை கட்டளை வரைவு (DSLS .......:............)(ISO 3696: 1987)
12) Extruded sheets of impact – மாற்றியமைக்கப்பட்ட பொலித்தைரீன் (PS -1) – தேவைகள் மற்றும் சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
(DSLS .......:............)(ISO 14631: 2021)
13) பிளாஸ்டிக் - Extruded sheets of polypropylene (PP) – தேவைகள் மற்றும் சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
(DSLS .......:............)(ISO 15013: 2022)
14) பிளாஸ்டிக் - விவசாயம் மற்றும் தோட்டக்கலையில் பயன்படுத்துவதற்கான Mulch Film களுக்கான மண்ணின் மக்கக்கூடிய பொருட்கள் - மக்கும் தன்மை, சுற்றுச்சூழல் நச்சுத்தன்மை மற்றும் கூறுகளின் கட்டுப்பாடு தொடர்பில் தேவைகள் மற்றும் சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
(DSLS .......:............)(ISO 23517: 2021)
15) Extruded sheets of polyethylene (PE-HD) – தேவைகள் மற்றும் சோதனை முறைகள் - இலங்கை கட்டளை வரைவு
(DSLS .......:............)(ISO 14632: 2021)

மேலுள்ள கட்டளைகள் வரைவு மற்றும் திருத்தங்களில் பொதுசனங்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து இலங்கை கட்டளைகள் நிறுவனம் கருத்துகளை கோருகிறது.

இந்த கட்டளைகள் வரைவு மற்றும் திருத்தங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தொடர்புடைய குழுக்கள் மூலம் கிடைக்கப்பெறும் கருத்துகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

மேலுள்ள 1) தொடக்கம் 9) வரையாக வரைவு கட்டளைகள்/ திருத்தங்களின் பிரதிகளை இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் பிரிவில் அல்லது விஞ்ஞானத் தரப்படுத்தல் பிரிவில் இருந்து கட்டணமின்றி பெறமுடியும் என்பதோடு www.slsi.lk என்ற இணையதளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்யலாம். 10) தொடக்கம் 15) வரையான கட்டளைகள் வரைவை நூலகத்தில் இருந்து வாங்க முடியும்.

2023-06-21ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கருத்துகள் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08**
**தொ.: 011 – 2671567 – 72,**
**தொலைநகல்: 011-2671579**
**மின்னஞ்சல்: dg@slsi.lk, இணையதளம்: www.slsi.lk**
**Facebook: https://www.facebook.com/officialSLSI**

## இலங்கை கட்டளைகள் நிறுவனம்
**தொழில்நுட்ப அமைச்சு**

---

**WP/RPTA/AC/NCB/2023/01**

**மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணம். தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்**

### வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை (மேல் மாகாணம்)

## மத்தியமயப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கி முறைமையின் திருத்தவேலை

மேல் மாகாண வீதி பயண போக்குவரத்து அதிகார சபைக்குரித்தான ரத்மகபாய அலுவலக் கட்டிடத்தொகுதியில் நிறுவப்பட்டுள்ள மத்தியமயப்படுத்தப்பட்டுள்ள வளிச்சீராக்கி முறைமையின் திருத்தவேலைக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்குமாறு தகுதிவாய்ந்த சேவை வழங்குநர்களிடம் அழைப்பு விடுக்கப்படுகின்றது என்பதுடன் விலைகளை தெரிவிக்கும்போது பின்வரும் உருப்படிகளுக்கு (Lot A மற்றும் Lot B) வெவ்வேறாக அல்லது ஒரு உருப்படிக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

| நேரடி உருப்படி | தீர்வு மற்றும் குறித்த சேவை தொடர்பான விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| LOT A: Daikin மாதிரி ZUW265AM சீலருக்கு சென்சார் வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்குதல் (Supplying, Installing and Configuring) - 12 மாத உத்தரவாதம் சகிதம் | | |
| A.1 | காற்றமுத்த கொள்ளளவு சென்சார் (Compressor Capacity Sensor) | 1 |
| A.2 | குறைந்த அழுத்த சென்சார் ( Low Pressure Sensor ) | 1 |
| A.3 | உயர் அழுத்த சென்சார் (High Pressure Sensor) | 1 |
| A.4 | எண்ணெய் அழுத்த சென்சார் (Oil Pressure Sensor) | 1 |
| A.5 | நீர் வெப்ப சென்சார் (Water Temperature Sensor) | 1 |
| LOT B: குளிராக்கும் கோபுரத்தின் மின் விசிறி மோட்டர் சக்கர திருத்தவேலை, AHU modulating thermostat வழங்குதல், நிறுவுதல் மற்றும் 02 குளிர் நீர் பம்பிகளை (chilled water pumps) பரீட்சித்துப் பார்த்து திருத்தவேலைகளைச் செய்தல் - 12 மாத உத்தரவாதம் சகிதம் | | |
| B.1 | சீலரில் குளிராக்கும் கோபுரத்தில் அமைந்துள்ள புளோவர் விசிறியில் தற்போதுள்ள மோட்டர் சக்கரத்தை அகற்றிவிட்டு 5.1/2 பீ மாதிரியிலான மோட்டார் சக்கரமொன்றை மாற்றீடு செய்தல் | 1 |
| B.2 | AHU modulating thermostat வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 1 |
| B.3 | 02 குளிர் நீர் பம்பிகளின் (chilled water pumps) சாதகமற்ற சத்தத்தை பரீட்சித்து திருத்தவேலைகளைச் செய்தல் | 2 |

- விலைக்கோரல் படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் 2023-05-16ஆம் திகதி 13.00 மணித்தியாலமாகும் என்பதுடன் அன்றைய தினம் 14.00 மணித்தியாலத்தில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கும் சேவை வழங்குநர்களுக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-05-04ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
- விலைக்கோரல் படிவங்களைப் பரீட்சிக்க உத்தேசிக்கும் விலைமனுதாரர்கள் அதற்காக எழுத்துமூலமான வேண்டுகோளைச் செய்ததன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் படிவங்களை 2023-05-16ஆம் திகதி 10.00 மணித்தியாலம் வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் 25,000.00 ரூபா ரொக்கப் பண விலைக்கோரல் பிணை அல்லது 50,000.00 ரூபா வங்கிப் பிணையொன்றை விலைக்கோரல் பிணை முறியாக சமர்ப்பித்தல் வேண்டும். (ரொக்கப் பண பிணையை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்) மேற்கூறிய கொடுப்பனவுகளுக்கு இயைபான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் விபரங்கள் அடங்கிய விலைக்கோரல் படிவங்களை பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

அறிவுரைகளின் பிரகாரம் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் படிவங்களை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2023-05-16ஆம் திகதி 14.00 மணித்தியாலத்திற்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு பின்வரும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் தரை தளம், நிர்வாகப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரின் (நிர்வாகம்) உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘மத்தியமயப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கி முறைமையின் திருத்தவேலை செய்தல்’’ எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேலதிக விசாரணைகளுக்கு: பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) - 011-2877421

**தலைவர்,**
**நிறுவனப் பெறுகைக் குழு,**
**வீதிப் பயண போக்குவரத்து அதிகாரசபை (மே.மா),**
**இல. 89, ரன்மகபாய,**
**கடுவளை வீதி, பத்தரமுல்ல.**
**2023-04-21**

---

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு

## கமத்தொழில் அமைச்சு

## பெறுகைக்கான அறிவித்தல்

### துப்புரவு மற்றும் சுகாதார சேவை வழங்கல் 2023/2024

கமத்தொழில் அமைச்சு, கொவிஜன மந்திரய கட்டிடத்தில் துப்புரவு மற்றும் சுகாதார சேவையை மேற்கொள்வதற்கு தகுதியான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக **2023.04.21** ஆம் திகதி முதல் **2023.05.11** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை விலைமனுக்கள் கோரப்படும்.

தேவையான சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.agrimin.gov.lk** எனும் இணையதளத்தைப் பார்வையிடவும்.

மேலதிக தகவல்களை தொ.பே : **011-2887406** இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
**கமத்தொழில் அமைச்சு,**
“கொவிஜன மந்திரய”, 80/5, இரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்லை.

---

# வெற்றிடங்கள்

## கைத்தொழில் அமைச்சு

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

1. **சிரேஷ்ட சட்ட அதிகாரி**
2. **உள்ளக கணக்காய்வாளர்**
3. **சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரி**
4 **சாரதி**

பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2023-05-04
மேலதிக விபரங்களுக்கு 2023-04-22ஆம் திகதிய Daily News பத்திரிகையைப் பார்க்கவும்.

**பணிப்பாளர் நாயகம் / பி.நி.அ.**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.**

---

# பெறுகை அறிவித்தல்

## பண்டாரகம பிரதேச சபை

## பண்டாரகம பிரதேச சபைக்கு சொந்தமான மைத்ரீ நகர மண்டபம் பழுதுபார்த்தலுக்கான விலைமனுக் கோரல்

01. மேல் மாகாண சபையினால் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டம் 2023 இன் கீழ் மேல் மாகாண அபிவிருத்தி வழங்கல் தொகை நிதியின் மூலம் அபிவிருத்தி செய்வதற்காக தீர்மாணிக்கப்பட்ட மேல் மாகாண சபைக்கு சொந்தமான பண்டாரகம மைத்ரீ நகர மண்டபத்தை பழுதுபார்ப்பதற்காக ICTAD நிறுவனத்தில் பதிவு செய்துள்ள C5 - C6 இன் தர செயற்பாட்டு கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| திட்டம் | திட்டத் தொகை (வெட் உற்பட) (ரூ) | பெறுகை முறைமை | ICTAD பதிவு | மீளளிக்கப்படாத வைப்பு | கேள்விப் பிணை (மீளளிக்கப்படும்) |
|---|---|---|---|---|---|
| பண்டாரகம பிரதேச சபைக்குச் சொந்தமான மைத்ரீ நகர மண்டப பழுதுபார்த்தல் | 12,300,000.00 | NCB (தேசிய போட்டி கேள்வி கோரல்) | C5 - C6 | ரூ. 3,000.00 | காசாக ரூ. 50,000.00 அல்லது அனுமதிக்கப்பட்ட பிணை முறி மூலம் ரூ. 100,000.00 |

02. கேள்வி கோரப்படுவது தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரமாகும்.
03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2023.04.20 முதல் 2023.05.10 வரை அரச அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்குள் பண்டாரகம, பிரதேச சபை தலைமையகத்திற்கு வருகை தந்து கேள்விப் பத்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் செயற்றிட்டம் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தொ.பே. இல. 038-2290975 இடம் பெற்றுக்கொள்ளலாம்.
04. மேற்படி கட்டணத்தை செலுத்தி 2023.04.20 முதல் 2023.05.10ம் திகதி வரை முற்பகல் 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்களை பண்டாரகம பிரதேச சபை தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் வேறுவேறாக இரு உறைகளில் இட்டு ஒவ்வொரு உறையிலும் வலது பக்க மூலையில் “மூலப் பிரதி” மற்றும் “நகல் பிரதி” எனவும் இடது பக்க மேல் மூலையில் பண்டாரகம பிரதேச சபையின் மைத்ரீ நகர மண்டபத்தை பழுதுபார்த்தல் எனவும், குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அந்த கேள்விப் பத்திரங்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பண்டாரகம பிரதேச சபையின் மைத்ரீ நகர மண்டபம் பழுதுபார்த்தல் என்று குறிப்பிட்டு 2023.05.12 பி.ப. 2.00 இற்கு முன் செயலாளர், பண்டாரகம பிரதேச சபை, புதிய நவீன வர்த்தக கட்டிடத்தொகுதி, களுத்துறை வீதி, பண்டாரகம என்ற முகவரிக்கு கேள்விப் படிவத்தை/ கேள்வி முத்திரை இட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.
06. கேள்விப் பத்திரங்களைத் திறத்தல் 2023.05.12 பி.ப. 2.05 இற்கு இடம் பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது/ அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்வி நிபந்தனைகள் மற்றும் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் இவ் விளம்பரத்தின் ஒரு பகுதியென கொள்தல் வேண்டும்.
08. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பண்டாரகம பிரதேச சபையின் செயலாளர் மற்றும் பண்டாரகம பிரதேச சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தல் அதிகாரிக்கு உரியது.

**பீ.டி.எப்.கே. கயந்தி**
**பண்டாரகம பிரதேச சபையின் செயலாளர்,**
**மற்றும்**
**பண்டாரகம பிரதேச சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பண்டாரகம பிரதேச சபை.**

**2023.04.19ம் திகதி**
**பண்டாரகம பிரதேச சபை,**
**பண்டாரகம.**
038-2290975

---

**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**




**Widest reach for your employment advertisement**
**Email : info@observerjobs.lk Hotline: 1949**
**For more information**
**0777270012 / 0777270000 / 0112429314**

# கானகத்தின் ஊடாக கதிர்காமத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு இம்முறை பெருவரவேற்பு

## 'சித்தர்கள் குரல்' அமைப்பினரிடம் பஸ்நாயக்க நிலமே கிஷான் குணசேகர தெரிவிப்பு

இம்முறை வடக்கு, கிழக்கில் இருந்து கானகத்தின் ஊடாக கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை வருகின்ற பக்தர்களில் முதல்நாளன்று வந்து சேருகின்ற முதல் தொகுதி பாதயாத்திரிகர்கள் கதிர்காமம் நுழைவாயிலில் முறைப்படி சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்படுவர்.

இவ்வாறு கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தெரிவித்தார்.

கடந்த வருடம் பாதயாத்திரையில் சுமார் 30,000 பேரளவில் கதிர்காமத்துக்கு வந்திருந்தனர். இம்முறை அது 60,000 பேராக உயரும் என எதிர்பார்க்கின்றேன் என்று அவர் கூறினார்.

'சித்தர்கள் குரல்' அமைப்பினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரை அவரது கதிர்காமம் வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சித்தர்கள் குரல்' அமைப்பின் தலைவரும் இந்தியா வாரணாசி பெலாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் கதிர்காமம் பஸ்நாயக்க நிலமேயைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அச்சமயம் அமைப்பின் ஆர்வலர் வி.ரி.சகாதேவராஜா வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

"வருடா வருடம் வடக்கு கிழக்கிலிருந்து இரண்டு மாதங்கள் பயணித்து கானகத்தின் ஊடாக கதிர்காமத்திற்கு வரும் அடியார்களை யாரும் பொருட்படுத்துவதில்லை. அவர்களை வரவேற்பதும் இல்லை. கவனிப்பதும் இல்லை. இது அவர்கள் மத்தியில் கவலையாக உள்ளது.

எனவே முதல் தொகுதி அடியார்களையாவது முறைப்படி சம்பிரதாயபூர்வமாக கதிர்காமத்தில் வரவேற்க நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கும் மனநிறைவாக இருக்கும். ஒரு அங்கீகாரமுமிருக்கும். புனிதபூமி, இனஐக்கிய, சமாதான பூமி என்ற சொற்களும் அர்த்தப்படும்" என்று சகாதேவராஜா கேட்டுக் கொண்டார் .

இதற்கு பதிலளித்த பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர "நீங்கள் முன்வைத்தது நல்ல யோசனை. மகிழ்ச்சி தருகிறது. நிச்சயமாக இம்முறை முதல்நாள் வருகின்ற 'சித்தர்கள் குரல்' அமைப்பினர் மற்றும் முதல் தொகுதி அடியார்களை வரவேற்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். இவ்வாறான வரவேற்று வைபவம் வரலாற்று ரீதியாக இது முதல் தடவையாக இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.



இச்சந்திப்பின் போது அகில உலக மகா சித்தர்கள் அறக்கட்டளை சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான ஆலோசகரான வாரணாசி பெலாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் சித்த வித்யாகீர்த்தி வேதிக்பண்டிற் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் குருஜி தலைமையில் சித்தர்கள் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரியர் தியாகராஜா, சிங்கப்பூர் டொக்டர் பி.மகேஸ்வரன், வீரமுனை கஸ்தூரன் மற்றும் கிஷோர் ஆகியோர் பங்கேற்றனர்.



இன மத பேதமின்றி சமாதானமாக பெருமனதுடன் நல்ல சிந்தனையுடன் சேவையாற்றி வரும் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகரவை 'சித்தர்கள் குரல்' அமைப்பினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.


நிலமே அங்கு மேலும் தெரிவிக்கையில் இம்முறை புத்தாண்டு வருடப் பிறப்புக்கு கதிர்காமத்துக்கு சுமார் 5000 மூவின அடியார்கள் வருகை தந்தனர். இது சமாதான புண்ணிய பூமி .அனைவரும் ஐக்கியமாக சமாதானமாக வாழ வேண்டும். கதிர்காமதலம் அனைத்து மக்களுக்கும் பொதுவான புண்ணிய பூமி. சித்தர்கள் குரல் அமைப்பு கடந்த வருடம் இங்கு யாகத்தையும் அன்னதானத்தையும் வழங்கி இருந்தமை எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இம்முறையும் அதனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் வயது கட்டுப்பாட்டுடன் ஆசார பூர்வமாக பங்கேற்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது" என்றார்.

அதற்குப் பதிலளித்த சித்தர்கள் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி, நிச்சயமாக இம்முறையும் அன்னதான ஏற்பாடுகளை செய்கிறோம் எனக் கூறினார். இறுதியில் நிலமே டிஷான் குணசேகர 'சித்தர்கள் குரல்' அமைப்பினருக்கு விருந்து உபசாரம் அளித்துக் கௌரவித்தார்.

**வி.ரி. சகாதேவராஜா**
(காரைதீவு குறூப் நிருபர்)

# உடப்பூர் வீரசொக்கனின் 'பங்குச்சல்லி' சிறுகதை தொகுதி நூல் வெளியீட்டுவிழா

ஊடகவியலாளர் கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன் எழுதிய 'பங்குச்சல்லி' சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் உடப்பில் நடைபெற்றது.



நூலாசிரியரின் சகோதரர் வீரபத்திரன் கதிரவேல் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. பிரதம அதிதியாக கலாநிதி அருளானந்தன் நாகநாதன் (வர்த்தகர்/ பொதுநோக்காளர்) பேசுகையில் "உடப்பு என்றால் ஆன்மீகத் துறையில் ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் நினைவுவருவது போல உடப்பில் கலை, இலக்கியம் புனைவு இலக்கிய வளர்ச்சியில் உடப்பூர் வீரசொக்கனின் பேரே முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றது. நான் பல இடங்களில் சென்று எனது ஊரைச் சொல்லும் போது உடப்பூர் வீரசொக்கனின் பெயரை கூறுமளவிற்கு இத்துறையில் அவர் அகலக்கால் பதித்துள்ளார்" என்றார்.

ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பாடசாலை அதிபர் கந்தையா தொண்டமான் பேசுகையில் "இன்று இளம் பரம்பரை வாலிபர்களிடத்தில் வாசிப்புப் பழக்கம் மிக பின்னோக்கிச் செல்கின்ற இக்கால சூழ்நிலையில் தனது எழுத்துருவாக்கத்தின் மூலம் தனது பிறந்த கிராமத்தின் அடையாளத்தை வெளியுலகுக்குக் கொண்டு வந்த பெருமை உடப்பூர் வீரசொக்கனை சாரும்.

ஊடகவியலாளராக இனம்காணப்பட்ட இவர் புனைவு இலக்கியத்தில் வீச்சான கதைகளை எழுதியும் வருகின்றார். இலக்கியத்துறையில் பல்பரிமாணத்தில் தடம் பதித்து வருகின்றார். இவரின் மற்றொரு படைப்பே 'பங்குச்சல்லி' சிறுகதைத் தொகுதியாகும். இடைவிடாமல் எழுதி வரும் வீரசொக்கனின் எழுத்துப் பணி தொடர நீண்ட ஆயுளை அவருக்கு இறைவன் வழங்க பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

ஏற்புரை நூலாசிரியர் வீரசொக்கன் வழங்கினார்.

# அல்–நஜா விளையாட்டு கழகத்தின் இப்தார்

அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகத்தின் இப்தார்நிகழ்வு சமீபத்தில் கோணாவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது. விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் விளையாட்டு ஆசிரியருமான ஏ.எம்.றிஸ்வான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கழகத்தின் மூத்த உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், கழகத்தின் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.


அல் நஜா விளையாட்டுக் கழகம் விளையாட்டுடன் மாத்திரம் தங்களை மட்டுப்படுத்தாமல் பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் ஜனாஸா நலன்புரி சேவையை மிக நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத் கழகத்தின் சிரேஷ்ட வீரர்களினால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வுகள் சிறப்புற நடைபெறுவதற்கு கழகத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உபதலைவருமான எஸ்.எம். இத்ரீஸ் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# இந்திய பாதுகாப்பு அமைச்சருக்கு கொரோனா தொற்று உறுதி!



இந்தியா முழுவதும் கொரோனா பாதிப்பு அதிகரித்து வரும் சூழலில், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு கொரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் வீட்டில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார்

இந்தியாவில் கொரோனா பெருந்தொற்று பரவல் மீண்டும் வேகம் எடுத்து வருகிறது. கடந்த சில வாரங்களாகவே தொற்று பாதிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் முகக்கவசம் அணிய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் மீண்டும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளன.

கொரோனா பரவல் மீண்டும் வேகம் எடுத்துள்ளதற்கு எக்ஸ்.பிபி 1 வைரஸ் திரிபே காரணம் என்று மருத்துவ நிபுணர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நேற்றுக்காலை வரையான 24 மணி நேரத்தில் கொரோனா பெருந்தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை 12 ஆயிரத்தை கடந்தது.

கடந்த 8 மாதங்களில் இல்லாத அளவுக்கு தொற்று பாதிப்பு உயர்ந்து இருப்பது மக்களுக்கு சற்று அதிர்ச்சியை கொடுத்தது.

இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஓய்வு எடுக்குமாறு அறிவுறுத்தினர். இதையடுத்து, வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ள ராஜ்நாத்சிங் ஓய்வு எடுத்து வருகிறார்.


கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

NAQDA

**விலைமனுக்கோரல்**
**பெறுகை அறிவித்தல்**

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நீர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இல | ஒப்பந்தத்தின் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத மனுக் கட்டண தொகை (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| NQ/DPC/2023/NCB/S/04 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் – 2023/2024 (நாடு முழுவதும் 35 மையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு, நாளொன்றுக்கு சுமார் 100 - 102 பாதுகாப்புப் பணியாளர்களின் சேவை தேவை) | 550,000.00 121 நாட்கள் (2023.09.09) | 6,000.00 | 2023.05.10 பி.ப.3.00 | 2023.05.11 பி.ப.2.00 |

02. மேலதிக தகவல்களை (www.naqda.gov.lk) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்),
இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்ல.
2023.04.21



EDCS
Education Co-operative Society

**குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்**

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கத்தின் பின்வரும் நகரங்களில் கிளைகளை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான வர்த்தக ரீதியிலான கட்டிடங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்படும் திறந்த விலைமனுக் கோரல்.

| தொ. இல. | அலுவலகம்/ இனங்காணல் | கட்டிடம் இருக்க வேண்டிய நகரம் | தேவையான சதுர அடி அளவு |
|---|---|---|---|
| 01 | களுத்துறை மாவட்ட அலுவலகம் | களுத்துறை | 5000-5500 |
| 02 | தங்காலை மாவட்ட அலுவலகம் | தங்காலை | 2600-2700 |
| 03 | பதுளை மாவட்ட அலுவலகம் | பதுளை | 5000-5300 |
| 04 | மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் | மட்டக்களப்பு | 3000-3500 |
| 05 | மாத்தறை மாவட்ட அலுவலகம் | மாத்தறை | 4250-4500 |
| 06 | நுவரெலியா மாவட்ட அலுவலகம் | நுவரெலியா | 3000-3500 |
| 07 | கம்பஹா மாவட்ட அலுவலகம் | கம்பஹா | 5000-5500 |
| 08 | கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | கிளிநொச்சி | 2500-2600 |
| 09 | மாத்தளை மாவட்ட அலுவலகம் | மாத்தளை | 2500-2600 |
| 10 | கண்டி மாவட்ட அலுவலகம் | கண்டி | 5800-6000 |
| 11 | திருகோணமலை மாவட்ட அலுவலகம் | திருகோணமலை | 3550-3600 |
| 12 | யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம் | யாழ்ப்பாணம் | 2500-2600 |
| 13 | வவுனியா மாவட்ட அலுவலகம் | வவுனியா | 2500-2600 |
| 14 | இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் | இரத்தினபுரி | 3500-3600 |

கட்டிடம் தொடர்பில் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்:

- கட்டிடமானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களின் பிரதான வீதிக்கு அல்லது கிளை வீதிக்கு முகப்பாக நகரத்திற்கு அண்மித்ததாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்திற்குப் பொருத்தமான வகையில் இருக்க வேண்டும் என்பதுடன் கட்டிடத்தில் தரைக்கு தரையோடு (Tile) பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆகக் குறைந்தது 05 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- சிறந்த தரத்துடனான துப்புரவேற்பாட்டு வசதிகள் (ஆகக் குறைந்தது 04 மலசலகூடங்கள்) இருத்தல் வேண்டும்.
- வளிச் சீராக்கத்துடன் அல்லது வளிச் சீராக்கம் இல்லாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் வளிச் சீராக்கம் அற்றவையானால் வளிச் சீராக்கம் செய்து கொடுக்கக் கூடிய விலைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- நீர் மற்றும் மின்சார வசதிகள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நீரைச் சேமித்து வைப்பதற்காக 2000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் விலைகளுடன் கட்டிடத்தின் திட்ட வரைபடம் மற்றும் உறுதியின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கவனிக்கவும்: விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிகளை பிரதான அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அம்மாதிரிப் படிவங்களிலேயே கேள்விப் படிவங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

உரித்துடைமையை நிரூபிக்கும் மற்றும் இயைபுடைய சகல ஆவணங்களுடன் உரிமையாளர் அல்லது அட்டோர்ணி அதிகாரம் உள்ளவர்கள் மாத்திரம் விலைமனுக்களை 2023-05-05ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன் சங்கத்தின் பிரதான செயலாளருக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிட குத்தகைக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களை அழைத்தல் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

பிரதான செயலாளர்,
வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்கம்,
இல. 294, காலி வீதி, கொழும்பு-03.
தொலைபேசி இல. 0112 370067 / 0112 575172 தொலைநகல்: 0112 577475



Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.